# ஞானச்சுடர்

மாசி 2023

302ஆவது மலர்




வெளியீடு:
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

# குறள் வழி



**சார்புணர்ந்து சார்புகெட வொழுகின் மற்றழித்துச்**
**சார்தரா சார்தரும் நோய்.**

**பொருள் :** ஒருவன் எல்லாப் பொருளுக்கும் சார்பாகிய மெய்ப்பொருளை உணர்ந்து பற்று அற ஒழுகவல்லனாயின் அவனைச் சாரக்கூடிய துன்பங்கள் அவன் உணர்வைக் கெடுத்து அவனை வந்து அடையமாட்டா. (359)

**காமம், வெகுளி, மயக்கம் இவைமூன்றன்**
**நாமங் கெடக்கெடு நோய்.**

**பொருள் :** ஆசை, வெறுப்பு, மயக்கம் என்னும் மூன்றும் அடியோடு கெடுமாயின் வினைப்பயனால் வரும் துன்பங்கள் நீங்கும். (360)


---

# நற்சிந்தனை

*மறப்பேனோ குருநாதன் தன்னை*

நல்லமழை பெய்யாதோ

**நேரிசை வெண்பா**



நல்லமழை பெய்யாதோ நாடு சிறவாதோ
எல்லவரும் இன்புற்று வாழாரோ - நல்லூரான்
ஆசானாய் வந்தே யடியேனை யாண்டுகொண்டான்
பேசாவனு பூதியென் பேறு. 01

நற்சிந் தனையென்னும் நல்லமுதம் உண்டக்கால்
கற்கும் நெறியுண்டோ காசினியில் - விற்றூண்
ஒன்றுமே யில்லாத உன்மத்தன் யோகனுக்(கு)
என்றுமின்ப மென்றே யிசை. 02

பாட வறியான் பலகலையுந் தானறியான்
தேட வறியான் சிவயோகன் - நாடறியப்
பிச்சைச்சோ றுண்டு பிறவிப் பிணிதீர்ந்தான்
அச்சமிவற் கில்லை யறி. 03

இச்சையில் லோரே யிடும்பைக் கிடும்பையை
நிச்சய மாய்ப்படுப்பர் நீயறியாய் - அச்சமற்று
வாழ்சிவ யோகனைமுன் வந்துவலிந் தாண்டுகொண்டான்
கேள்கிளைகள் நீங்கக் கிளர்ந்து. 04

எழுவாய் பயனிலைகள் இல்லாமற் பாடித்
தொழுவான் சிவயோகன் சொல்லின் - அழுவான்
விழுவான் விதிர்விதிர்ப்பான் ஆரறிவார் என்று
தழுவுவான் தன்னையுன்னித் தான். 05

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர்



வெளியீடு

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# ஞானச்சுடர்

வெளியீடு - 3 சுடர் - 302

**2023** **பொருளடக்கம்** **மாசி**


| | | |
|---|---|---|
| மகா சிவராத்திரி... | பி.கே. மகேந்திரன் | 01 - 06 |
| இறைவனுடன் நேரில்... | மூ. சிவலிங்கம் | 07 - 08 |
| ஆறுமுகநாவலருடைய... | கலாநிதி சு. வித்தியானந்தன் | 09 - 14 |
| திருமூலர் தவமொழி | ஆ.தா.இ. ஜெயபாலன் | 15 - 17 |
| கவனம் சிதையா நெஞ்சுகொள் | சி. நற்குணலிங்கம் | 18 - 21 |
| ஆனந்தசாகரம் | திருமதி பா. சிவனேஸ்வரி | 22 - 24 |
| உள்ளம் பெரும் கோயில் | திருமதி வி. வசந்தா | 25 - 26 |
| வழித்துணை | ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் | 27 - 28 |
| அறிவும் அறியாமையும் | இரா. ஜெயபாலன் | 29 - 30 |
| முப்பெரும் நிகழ்வாக... | துரை. கணேசமூர்த்தி | 31 - 36 |
| நித்திய அன்னப்பணி | சந்நிதியான் ஆச்சிரமம் | 37 - 40 |
| தேவாரத்தின் மகிமை | திருமதி ஜெ. இராஜேஸ்வரி | 41 - 42 |
| புராதனம் எங்கே! தெய்வம்... | த. செல்வசோதி | - 43 |
| ஓங்காரநாடி என்னும் சுழுமுனை | கு. சிவபாலராஜா | 44 - 47 |
| சிவராத்திரி | திருமதி ந. பரமேஸ்வரி | - 48 |



**வருட சந்தா: 500/= (தபாற் செலவுடன்)**

**சந்நிதியான் ஆச்சிரம**

**சைவ கலை பண்பாட்டுப் பேரவை**

தொலைபேசி இல: 021 321 9599, 021 226 3406

அச்சகம்: சந்நிதியான் ஆச்சிரமம்

Printed & Published By:
Sannithiyan Achchirama Saiva Kalai Panpaddu Peravai.
Selvasannithi, Thondaimanaru.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர்
# தைமாத வெளியீடு

## வெளியீட்டுரை:-

2023ஆம் ஆண்டு 301ஆவது மலராக வெளிவந்த ஞானச்சுடர் மலருக்குரிய வெளியீட்டுரையினை இளைப்பாறிய கல்விப் பணிப்பாளர் திரு ஆறுமுகம் ஸ்ரீஸ்கந்தமூர்த்தி அவர்கள் நிகழ்த்தினார்கள்.

அவர் தமது உரையின்மூலம் சந்நிதியான் ஆச்சிரமம் ஆற்றும் பணிகளை விதந்து கூறியதுடன் பேரவையின் செயற்பாட்டின்மூலம் இம் மலர் 301 மாத காலமாக ஒரு ஆன்மீகம் சார்ந்ததாகவும் எவ்வித விளம்பரங்களுமின்றி வருவது என்பது ஒரு சாதனைதான். அதுமட்டுமல்ல எத்தனையோ கட்டுரையாளர்களின் மனதில் எழும் ஆன்மீகக் கருத்துக்களை வெளிக்கொணரும் ஒரு களமாக விளங்கி அவர்களது எழுத்தாற்றலை வளர்க்கிறது. இத்தகைய செயற்பாட்டின் மூலம் இலைமறை காயாக மறைந்து கிடக்கும் இளம் எழுத்தாளர்களின் எழுத்தாற்றலையும் காணக்கூடியதாக இருக்கின்றது. இம்மலர் வெளியீடு காரணமாக நாமும் சந்நிதி வேலவனை வழிபடவும் சந்நிதியான் ஆச்சிரமத்தில் இடம்பெறும் நிகழ்வுகளின் ஊடாக நடைபெறும் பணிகள் மென்மேலும் பிரகாசிக்க வேலவனை வேண்டுதல் செய்து நிறைவு செய்கின்றேன்.

## மதிப்பீட்டுரை:-

தைமாத ஞானச்சுடர் மலருக்கான மதிப்பீட்டுரையினை பேரவை உறுப்பினரும் இளைப்பாறிய அதிபருமாகிய திரு ஆறுமுகம் சிவநாதன் அவர்கள் நிகழ்த்தினார்கள்.

1998ஆம் ஆண்டு தொடக்கம் இற்றைவரை வெளிவந்துகொண்டிருக்கும் தைமாத மலருக்குரிய மதிப்பீட்டுரையினை வழங்குவதற்கு உறுதுணையாக விளங்கும் சந்நிதி வேற்பெருமானின் கருணையை வியந்து இம் மதிப்பீட்டுரையை ஆற்றுகின்றேன். ஒரு மலர் தொடராக வெளிவருவது என்பது லேசான காரியம் அல்ல. கடினமான பிரயாசை இருந்தால்தான் இத்தகைய செயற்பாடு வெற்றி அளிக்கும். அதனை நாம் இவ்விடத்தில் காணக்கூடியதாக இருக்கின்றது.

இதன் அடிப்படையில் இம் மலரில் வெளிவந்துகொண்டிருக்கின்ற ஆக்கங்களின் தரத்தை நோக்கும்போது ஆரம்பகால ஆக்கங்களுக்கும் இப்போது மலரில் இடம்பெறுகின்ற ஆக்கங்களின் தன்மையும் மலரின் அளவுகோலும் மிகவும் பிரமிப்பூட்டுவதாக இருக்கின்றது. உண்மையில் சைவ மக்களாகிய ஒவ்வொருவரும் போற்றித் துதிக்கவேண்டிய மலராக இருப்பதற்கு காரணம் சந்நிதி வேலவனின் பேரருள் என்று கூறியதுடன், மலரில் இடம் பெற்ற ஒரு சில கட்டுரைகளை சபையில் உள்ளோரிடம் விளக்கிக் கூறியதுடன் தனது மதிப்பீட்டுரையினை நிறைவு செய்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடர் தரும் தகவல்

ஆற்றங்கரை வேலவனின் அருளைப்பெற்று அவனுடன் இரண்டறக் கலந்து பேரின்பம் பெற்ற அருளாளர் வரிசையில் வைத்து மதிப்பிடக் கூடிய நடமாடும் தெய்வமாக வாழ்ந்து வழி காட்டியவர்தான் முருகேசு சுவாமிகள். இவர் மக்களை பக்தி மார்க்கத்தில் ஈடுபடுத்தி தர்ம வாழ்க்கையில் வழிப்படுத்தி ஆற்றிய தொண்டினை அவரின் காலத்தில் வாழ்ந்த பலரும் - இன்றும் கூட வியந்து பாராட்டி வாழ்த்தி நிற்பதைக் காதாரக் கேட்கிறோம்.



முருகேசு சுவாமிகளின் பெருமுயற்சியினால் 05.05.1995இல் ஆரம்பிக்கப்பட்ட சந்நிதியான் ஆச்சிரமம் எந்தக் குறைவுமின்றி நிறைவாக வளர்ச்சி பெற்று வருவது குறிப்பிட வேண்டியதாகும். சைவ சமயத்திற்கும், தமிழுக்கும் பெருமை சேர்த்த 63 நாயன்மார்களை நினைவுகூரும் "அறுபத்துமுவர் பூசையை" முதன் முதலாக சந்நிதியான் ஆச்சிரமத்தில் தோற்றுவித்த பெருமையும் முருகேசு சுவாமிகளுக்கே உரியதாகும். அத்துடன் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் பணிகள் அத்தனைக்கும் உந்து சக்தியாகத் திகழ்ந்தவர் அவர்.

செல்வச்சந்நிதி ஆலயத்தின் புனரமைப்புப் பணிகள், சிறப்பான - நேர்த்தியான பூசை முறைகளை நெறிப்படுத்தியவரும் அவரே. 23.05.1920இல் அவதரித்த முருகேசு சுவாமிகள் 16.03.1997இல் இறைவன் திருப்பாதங்களைச் சென்றடைந்தார்.

29.03.2023 புதனன்று முருகேசு சுவாமிகளின் குருபூசை தினம் சந்நிதியான் ஆச்சிரமத்தில் பக்திபூர்வமாக அனுஷ்டிக்கப்படவுள்ளது. சுவாமிகளால் ஆரம்பிக்கப்பட்ட கும்பாபிஷேக தின நிகழ்வு செல்வச்சந்நிதி ஆலயத்தில் 24.03.2023 வெள்ளியன்று நடைபெறவுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் வங்கி சமூகத்தினருக்கு சந்நிதியான் ஆச்சிரமத்தின் நன்றி உரித்தாகுக!

மேற்படி தைமாத ஞானச்சுடர் சிறப்புப்பிரதி பெறும் நிகழ்வில் கடந்த பல வருடங்களாக மக்கள் வங்கியில் பணியாற்றும் அன்பர்களினால் பெறப்பட்ட நிதியின்மூலம் சமணப்பிட்டி அறநெறிப் பாடசாலையின் கூரை சீற் வழங்கியதிலிருந்து இன்றுவரை வருடாவருடம் தைமாத சிறப்புப் பிரதியினால் வரப்பட்ட நிதியினைக் கொண்டு பலவிதமான சமூகசேவைப் பணிகளை முன்னெடுத்துச் செல்வதில் நாம் பெருமைப்படுகின்றோம்.

இச் செயற்பாடுகளுக்கு முன்னின்று உழைத்த மக்கள் வங்கியினைச் சார்ந்த திரு சி. பத்மநாதன் அவர்களுக்கும், திரு வ. சண்முகநாதமுதலி அவர்களுக்கும் சந்நிதியான் ஆச்சிரமத்தின் நன்றியினைத் தெரிவித்துக்கொள்வதோடு இத்தகைய செயற்பாடுகளை ஊக்குவித்துக்கொண்டிருக்கும் மக்கள் வங்கி சமூகத்தினருக்கும் எமது நன்றியினைத் தெரிவித்துத் தொடர்ந்து இச் செயற்பாடு மென்மேலும் பிரகாசிக்க சந்நிதியானை வேண்டி நிறைவு செய்கின்றோம்.

## தைமாதம் 2023 சிறப்புப்பிரதி பெறும் மக்கள் வங்கியின் கிளைகளும் பங்களிப்பும்

| | |
|---|---|
| மக்கள் வங்கி இளைப்பாறியோர் | 124,000. 00 |
| மக்கள் வங்கி பிரதேச காரியாலய உத்தியோகத்தர்கள் | 42,000. 00 |
| மக்கள் வங்கி ஸ்ரான்லி வீதி உத்தியோகத்தர்கள் | 38,000. 00 |
| மக்கள் வங்கி பிரதான வீதி உத்தியோகத்தர்கள் | 16,000. 00 |
| மக்கள் வங்கி யாழ் பல்கலைக்கழக உத்தியோகத்தர்கள் | 32,000. 00 |
| மக்கள் வங்கி யாழ் கன்னாதிட்டி உத்தியோகத்தர்கள் | 16,600. 00 |
| மக்கள் வங்கி சுன்னாகம் உத்தியோகத்தர்கள் | 18,000. 00 |
| மக்கள் வங்கி சங்கானை உத்தியோகத்தர்கள் | 14,000. 00 |
| மக்கள் வங்கி தெல்லிப்பழை உத்தியோகத்தர்கள் | 15,000. 00 |
| மக்கள் வங்கி சாவகச்சேரி உத்தியோகத்தர்கள் | 9000. 00 |
| மக்கள் வங்கி கொடிகாமம் உத்தியோகத்தர்கள் | 12,000. 00 |
| மக்கள் வங்கி அச்சுவேலி உத்தியோகத்தர் | 1000. 00 |
| மக்கள் வங்கி பருத்தித்துறை உத்தியோகத்தர்கள் | 7500. 00 |
| மக்கள் வங்கி நெல்லியடி உத்தியோகத்தர்கள் | 7000. 00 |
| மக்கள் வங்கி ஊர்காவற்றுறை உத்தியோகத்தர்கள் | 5000. 00 |
| மக்கள் வங்கி பரந்தன் உத்தியோகத்தர்கள் | 28,000. 00 |
| மக்கள் வங்கி முல்லைத்தீவு உத்தியோகத்தர்கள் | 2000. 00 |
| மக்கள் வங்கி கிளிநொச்சி உத்தியோகத்தர்கள் | 4000. 00 |
| மக்கள் வங்கி திருமலை மாவட்ட உத்தியோகத்தர்கள் | 50,000. 00 |
| மக்கள் வங்கி வவுனியா பிரதேச தலைமை அலுவலக உத்தியோகத்தர்கள் | 10,000. 00 |
| ஏனையோர் | 9000. 00 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்றும் நினைவில்...

அமரர் யாழ் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் இரட்ணம் விக்கினேஸ்வரன் 17.02.2023 அன்று காலமான செய்தியை அறிந்து சந்நிதியான் ஆச்சிரமமும் பேரவையும் மிகுந்த அதிர்ச்சி அடைகின்றோம்.




அமரர் அவர்கள் துணை வேந்தராக பதவி வகிக்கின்ற காலத்தில் பல்கலைக்கழகத்தின் ஊடாக அவர் ஆற்றிய பணிகளை பத்திரிகை வாயிலாகவும் ஊடகங்களின் ஊடாகவும் அறியக்கூடியதாக இருக்கின்றது. துணைவேந்தர் என்ற பெருமையை விரும்பாது ஒரு சாதாரண குடிமகனாக தனது பணியின்மூலம் பல்கலைக் கழக செயற்பாட்டினை நிறைவேற்றிய ஒரு பெருந்தகை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றிலும் பார்க்க சந்நிதியான் ஆச்சிரம சுவாமி அவர்களுக்கு தமிழ்நாடு பல்கலைக்கழகம் வழங்கிய கலாநிதி என்னும் விருதினை தமிழ்நாட்டிலிருந்து எடுத்துவந்து சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் வைத்து வழங்குவதற்கு பெரும் உறுதுணையாக விளங்கியவர்.





இத்தகைய செயற்பாடுகளை உடையவரது ஆத்மா சந்நிதி வேற்பெருமானின் பாதார விந்தங்களில் நிரந்தரமாக அமைதியடைய வேற்பெருமானை வேண்டுவதோடு அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத் தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரி வித்துக்கொள்கின்றோம்

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*-பேரவையினர்-*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாசிமாத சிறப்புப்பிரதி பெறுவோர் விபரம்

**M. இந்துசேகரம்**
(அவுஸ்திரேலியா)

**சிவபாலன் சுந்தரமூர்த்தி**
(சுவிஸ்லாந்து)

**ப. பாலபவான்**
(புத்தூர்)

**திருமதி. த. சுரேந்திரநாதன்**
(இளை. அதிபர், மயிலியதனை, தொண்டைமானாறு)

**செ. நவரெத்தினராசா J.P**
(கப்பூது, குப்பிளான்)

**அதிபர்**
(யா/ தொண்டைமானாறு வீ. ம. வித்தியாலயம்)

**த. இராசேஸ்வரன்**
(இராஜ உதயம், அல்வாய்)

**திருமதி இ. பத்மநாதன்**
(கனன் போட்டோ, பருத்தித்துறை)

**சி. சிவம்**
(சிதம்பரப்பிள்ளை புத்தகசாலை, நெல்லியடி)

**வ. நந்தகுமார்**
(அம்மன் கோவிலடி, கரணவாய் தெற்கு)

**T. பாக்கியம்**
(கந்தர்மடம்)

**நா. பவளம்**
(அச்சுவேலி)

**திருமதி தேவதாஸ் தயானி**
(அச்சுவேலி)

**கணேசகுலசிங்கம் துஷிகரன்**
(அச்சுவேலி)

**க. பிந்துஷா**
(மீசாலை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பொ. இராமலிங்கமூர்த்தி**
(இளை. உதவி மின் அத்தியட்சகர், கரவெட்டி)
**சி. மகாலிங்கம் J.P**
(மலையன் தோட்டம், கொற்றாவத்தை)
**சு. சிவதாசன் G.S**
(புன்னாலைக்கட்டுவன் வடக்கு)
**தலைவர், செயலாளர்**
(கலைவாணி ச.ச. நிலையம், தொண்டைமானாறு)
**உரிமையாளர்**
(ஜெயகிருஷ்ணா, K.K.S. வீதி, சுண்ணாகம்)
**ஐ. லோகஞானம்**
(அஞ்சல் அதிபர், சுண்ணாகம்)
**ஆ. விஸ்வலிங்கம்**
(இளைப்பாறிய ஓவசியர், கல்வியங்காடு)
**V. அரியராசா**
(இளை. வரை. வல்லுனர், தொண்டைமானாறு)
**கந்தசாமி தேவராணி**
(ஆனைக்கோட்டை)
**உரிமையாளர்**
(ஸ்ரீ முருகன் தொ.தொ. நிலையம், யாழ்ப்பாணம்)
**செ. சந்திரமூர்த்தி**
(சந்திரா தொலைத்தொடர்பு நிலையம், உடுப்பிட்டி)
**சி. பஞ்சலிங்கம்**
(ஞானவைரவர் கோவிலடி, உரும்பராய் கிழக்கு)
**செ. தேவேந்திரா**
(ஒஸ்காவீதி, உரும்பராய்)
**இராசரெட்ணம் வசந்தன்**
(ஊரெழு மேற்கு சுண்ணாகம்)
**இ. குமாரதாசன்**
(இளை. பிராந்திய மருந்தாளர், இடைக்காடு)
**R. குலசிங்கம்**
(இளை. அதிபர், கோண்டாவில்)
**N. K. தங்கராசா**
(இளை. தபாலதிபர், புலோலி)
**இ. பாலகிருஷ்ணன்**
(முகமாலை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சி. புவிராஜ்**
(சண்டிலிப்பாய்)
**உரிமையாளர்**
(நாதன் மெடிக்கல் சென்ரர், நெல்லியடி)
**செ. செல்வரெத்தினம்**
(இளை. அதிபர், சுன்னாகம்)
**த. விவேகானந்தன்**
(சியாமி பேபி நீட்ஸ், பருத்தித்துறை)
**இ. ஜெயபாலன்**
(பெற்றோலியக் கூட்டுத்தாபனம், யாழ்ப்பாணம்)
**மா. ந. பரமேஸ்வரன்**
(கந்தசுவாமி கோவிலடி, இணுவில்)
**பா. கேதீஸ்**
(உரும்பராய்)
**S. ஈஸ்வரன்**
(டச்சுவீதி, சித்தங்கேணி)
**ச. மதனகுமார்**
(சிவகாமி அம்மன் கோவிலடி, இணுவில்)
**கெ. தவராசா**
(விவேகானந்தர் வீதி, இணுவில்)
**வி.ந. ஸ்ரீதரன்**
(இளை. அதிபர், யாழ்ப்பாணம்))
**செ. செல்விகா**
(நாவலடி ஒழுங்கை, மானிப்பாய்)
**வே. மதிபாலசிங்கம்**
(செட்டியர் தெரு, கரவெட்டி)
**சு. நாகம்மா**
(சாவகச்சேரி)
**நா. முருகையா**
(ஊரெழு கிழக்கு, சுண்ணாகம்)
**செல்வராசா பொன்னுத்துரை**
(கரந்தன், நீர்வேலி)
**விஸ்வலிங்கம் குகலிங்கம்**
(பண்ணாகம், சுழிபுரம்)
**மா. தேவநேரு**
(செட்டிவளவு லேன், இணுவில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சசிகரன் கௌதமன்**
(அச்சுவேலி)
**செ. பாலச்சந்திரன்**
(கொக்குவில் மேற்கு, கொக்குவில்)
**இ. புவனேந்திரராஜா (பிள்ளையார்)**
(நெல்லியடி, கரவெட்டி)
**தி. பாலசுப்பிரமணியம்**
(பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்)
**மா. விஸ்வநாதன்**
(றோயல் தேயிலை கடை, புத்தூர்)
**நாகன் கிருஸ்ணபிள்ளை**
(கோண்டாவில்)
**சி. கந்தையா**
(சுன்னாகம்)
**K. விஷ்ணுமோகன்**
(உரும்பராய் கிழக்கு)
**பொ. சிற்றம்பலம்**
(கொடிகாமம்)
**பா. சிவபாக்கியம்**
(கைதடி)
**சிதம்பரநாதன் ஸ்ரீகரன்**
(புத்தூர்)
**நாகராசா சாந்தி**
(அச்சுவேலி)
**க. ரட்ணேஸ்வரன்**
(இளை. அதிபர், சங்கானை)
**க. கிருஷ்ணேஸ்வரக்குருக்கள்**
(ஆனைக்கோட்டை)
**திருமதி விஜயலட்சுமி இராசநாயகம்**
(வட்டுக்கோட்டை)
**திருமதி செல்வநாயகம்**
(வடலியடைப்பு)
**திருமதி சீதாதேவி இந்திரன்**
(யா/ கச்சாய் மகா வித்தியாலயம்)
**உரிமையாளர்**
(சண்முகானந்தா ரெக்ஸ்ரைல்ஸ்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகா சிவராத்திரி விரதம் அனுஷ்டிப்பதன் மகத்துவம்

–திரு பி.கே. மகேந்திரன் அவர்கள்–



ஒரே ஒரு உண்மையான கடவுளாகிய பரமாத்மா சிவனே சற்குருவாகி அனைத்து மனித ஆத்மாக்களுக்கும் முக்தியையும், தனது உண்மையான பக்தர்களுக்கு சற்கதியாகிய ஜீவன் முக்தியையும் அருள்பவர் ஆவார். அவரே கலியுகத்தின் இறுதியில் துன்பத்திலிருக்கும் மனித ஆத்மாக்களின் துன்பத்தை நீக்கி, அனைவருக்கும் உண்மையானதும், நிலையானதுமான அமைதியையும், சந்தோசத்தையும் அருள்வதற்காக இப் பூவுலகில் ஓர் மனித சரீரத்தில் அவதாரம் எடுக்கின்றார். அவரின் இவ் நிகழ்விற்காக வேண்டியே சிவனின் பக்தர்கள் சிவராத்திரி தினத்தை அதி முக்கியத்துவம்வாய்ந்த பக்தி பூர்வமான தினமாக அனுஷ்டித்து வருகின்றனர்.

உலகிலுள்ள மனிதர்கள் இறைவனை வெவ்வேறு மதங்களில் வெவ்வேறு பெயர்கொண்டு வழிபட்டுவந்த போதிலும் உலகிலுள்ள அனைத்து மனித ஆத்மாக்களும் தமது உண்மையானதும் சரீரமற்றது மான நிலையில் உள்ளபோது, ஒரே ஒரு இறைவனின் குழந்தைகளாகிய சகோதரர்களே ஆவர். சகல மதத்தினர்க்கும் இறைவன் ஒருவராக இருப்பதால் அவர் எல்லா மதத்தினராலும் ஏற்றுக் கொள்ளக்கூடிய வடிவம் உடையவராகவும் இருக்க வேண்டும். எல்லா மதத்தினரும் இறைவனை

*நீ பட்ட துன்பத்தைவிட அதில் நீ பெற்ற அனுபவமே சிறந்தது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரீரமற்ற அசரீரியான ஒளி வடிவமான ஜோதியாகவே நம்புகின்றனர். அவரையே சிவன் என்றும், அல்லா என்றும், ஜெகோவா என்றும், பரம பிதா என்றும், குதா என்றும் வெவ்வேறு பெயர்களில் அழைக்கின்றனர்.

அனைவரிலும் அதிமேலானவராகிய இறைவனாகிய சிவன் மட்டுமே, மனிதர்கள், தேவர்கள் மற்றும் சூட்சும தேவதைகள் உட்பட அனைத்து ஆத்மாக்களுக்கும் ஒரேயொரு உண்மையான ஆன்மீகத் தந்தையாவார். இதில் சகல இன, சகல மத மனிதர்களும், மத ஸ்தாபகர்களும், மதத்தலைவர்களும், ஞானிகளும், முனிவர்களும், இறைநம்பிக்கை அற்றவர் களும், அசுரகுணம் கொண்ட சகல மனித குலத்தவர்களும் அடங்குவார்கள். ஆகையினால் ஒரேயொரு உண்மையான கடவுளாகிய சிவன் மட்டுமே பரமாத்மா என்றும் பரமபிதா, பரம தந்தை என்றும், அனைத்து மனிதர்களினதும் ஆன்மீகத் தந்தை என்றும், எல்லையற்ற தந்தை என்றும் அழைக்கப்படுகின்றார்.

பரமாத்மா சிவன் தனக்கென சொந்தமாக ஒரு மனித சரீரத்தையோ, சரீர வடிவத்தையோ கொண்டிராதவர். அவர் சதா அசரீரியாகவே தனது எல்லையற்ற வீடாகிய இப்பௌதீக உலக பிரபஞ்சத்துக்கும் அப்பாலுள்ள அசரீரி உலகமாகிய பரந்தாமத்திலேயே எப்போதும் வசிப்பவர். அசரீரியான பரமாத்மா சிவன் பௌதீக உருவத்தையோ, வடிவத்தையோ கொண்டிராத தால் அவரின் ஒரேயொரு அசரீரியான ஜோதி வடிவம் மட்டுமே அவரை வழிபடுவதற்குரிய சரியான வடிவமாகக் கருதப்படுகிறது. ஆகையாலேயே ஆரம்பகாலத்தில் இறைவனை வழிபடத் தொடங்கியபோது ஓர் இலிங்கத்திலே ஜோதி வடிவத்தை இட்டு அந்த ஜோதி வடிவத்தையே அசரீரியான சிவனாக எண்ணி வழிபட்டு வந்தனர். அதாவது முதலில் சிவலிங்க வழிபாடு மட்டுமே இறை வழிபாடாகத் தொடரப்பட்டு வந்தது. ஆகையால் ஆரம்பத்தில் உண்மையான ஒரேயொரு கடவுளாகிய சிவனுக்கு மட்டுமே மனிதர்கள் ஆலயங்களை கட்டி அதில் சிவ லிங்கத்தை பிரதிஸ்டைசெய்து வழிபட்டுவந்தனர்.

அசரீரியான பரமாத்மா சிவன் மட்டுமே எல்லையற்ற புகழுக்குரியவரும், ஏனையோரை புகழுக்குரியவர்களாக ஆக்கும் அற்புதங்களைப் புரிபவரும் ஆவார். அத்துடன் அவரே சாதாரண மனிதர்களை தேவர்களாக ஆக்குபவரும், அனைவருக்கும் முக்தியும், சற்கதியும் அருள்பவரும் ஆவார். அவர் ஒருவர் மட்டுமே சதா தூய்மைக்கடலாக விளங்குவதுடன், தனது நிலை மாறாமல் சதா உயர்ந்த, மேன்மையான நிலையில் நிலைத்து இருப்பவருமாவார். இத னாலேயே அவர் சதாசிவன் என்றும் அழைக்கப்படுகிறார். எனவே அவர் ஒருவர் மட்டுமே முழுமுதற் கடவுளாக வழிபடத் தகுதியானவர். ஆகவே, தூய்மையற்ற தத்துவங்களால் ஆன சரீரங்களில் வாழும் சரீரதாரிகளையோ, காம விகாரத்தின்மூலம் பிறந்தவர்களையோ, தமது தேவைகளுக்காக வேறு எவரையும் நினைவு செய்பவர்களையோ கடவுளென்று வழிபடுவதோ, அல்லது கடவுளின் புகழ்களை அவர்களுக்குப் பயன்படுத்துவதோ, அல்லது கடவுளுடன் ஒப்பிடுவதோ அனைத்துமே கடவுளுக்கு எதிரான பாவமானசெயல் என்றே கூறப்படுகின்றது. ஆத்மாக்கள் இப் பூவுலகில் மனித பிறவி எடுத்து தமது சரீரங்களில் வாழும்போது மட்டுமே அவர்கள் ஆண், பெண் என்ற பால் வேறுபாட்டினைக் கொண்டுள்ளனர். உலகமென்ற

*நான் இப்போது இருக்கும் நிலைக்கு நானே பொறுப்பு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேடையில் தமது பாகங்களை நடிப்பதற்காக, ஆத்மாக்கள் தமது ஆடைகளாக ஆண், பெண் என்ற சரீரங்களை மாறி மாறி பல பிறவிகள் எடுத்தபோதும், தமது ஆதியும், அநாதியு மான சரீரமற்ற நிலையில் இருக்கும்போது பரமாத்மா உட்பட ஆத்மாக்கள் அனைவரும் ஆண்பாலினை மட்டுமே கொண்டுள்ளனர். ஆகையால் உலகிலுள்ள மனித ஆத்மாக்கள் அனைவரும் சகோதரர்களாகவே கருதப்படுகின்றனர். இதனாலேயே உலகிலுள்ள அனைத்து மனிதர்களினதும் உண்மையான உறவு சகோதரத்துவம் எனக் கூறப்படுகிறது.

சத்திய, திரேதா யுகங்களின் பின்னர் துவாபரயுக ஆரம்பத்திலிருந்து கலியுக இறுதிவரை வாழ்ந்த மனிதர்கள் தாம் ஆத்மாக்கள் என்பதை மறந்து போனதால், தமது சரீரங்களையே தாம் என்ற தவறான புரிந்துணர்வையே கொண்டிருந்தனர். ஆகையால் தமது சரீரத்தின் அடிப்படையிலேயே ஒருவரோடு ஒருவர் உறவுமுறைகளையும், இயல்புகளையும் கொண்டிருந் தனர். ஆகையினால் கலியுக இறுதிவரை மனிதர்களின் உறவுமுறை தூய்மையற்ற தத்துவங்களால் ஆன தூய்மையற்ற சரீரங்களை நினைவு செய்கின்ற சரீர உணர்வுக்குரிய சரீர உறவுமுறைகளாகவே இருந்துவந்தன. நீண்டகாலமாக மனிதர்களிடையே தூய ஆன்மீக உறவுமுறைகள் எதுவும் இருக்கவில்லை..

உலக நாடகச்சக்கரத்தின் இறுதிக் காலப்பகுதியான கலியுகத்தில், உலகம் முழு வதிலும் மாயையின் ஆதிக்கம் காரணமாக, எங்கும் அறியாமை என்ற இருள் சூழ்ந்து காணப்படுவதால், மனிதர்கள் அனைவரும் கும்பகர்ணனைப் போன்று அறியாமை என்ற ஆழ்ந்த உறக்கத்தில் உள்ளனர். எவ்வாறு இராவண யுத்தத்தின்போது இலங்காபுரியே அழிந்து கொண்டிருக்கும்போது எதையுமே அறியாதவனாக எவராலும் வெல்லமுடியாத பராக்கிரமசாலி யான கும்பகர்ணன் ஆழ்ந்த உறக்கத்தில் உறங்கிக் கொண்டிருந்தானோ, அதேபோன்றுதான் கலியுக இறுதியிலும் வாழும் மனிதர்கள், உலகவிநாசம் பல வழிகளிலும் தம்மை நெருங்கி வருவதையும், அதற்கு முன்னர் தமது பல பிறவிக் கர்மக் கணக்குகளைத் தீர்த்து எதிர்காலப் பல பிறவிகளுக்கான புண்ணியக் கணக்கை உருவாக்கி தாம் வீடு திரும்புவதற்கான இறுதிக் காலமே இது என்பதையும் அறியாமல் மாயையின் தற்காலிக சந்தோசத்தை தருகின்ற கொண்டாட்டங்களின் களிப்பிலே முழ்கியுள்ளனர்.

கலியுக முடிவில் உலகில் தர்மம் அழிந்து அதர்மம் தளைத்தோங்கி அதன் உச்சக்கட்டத்தை அடையும்போது அதர்மத்தை அழித்து உலகில் மீண்டும் தர்மத்தை நிலைநாட்ட பரமாத்மாவாகிய சிவன் இப்பூவுலகில் ஓர் மனித சரீரத்தில் அவதாரம் எடுக்கின்றார். பரமாத்மா அவதரிக்கின்ற அந்த மனித சரீரமே பாக்கிய இரதம் (பாக்கீ-ரத்) எனக் கூறப்படுகின்றது. எனவேதான் பரமாத்மாவின் அவதாரத்திற்கு கருவியாக இருந்தவரே பகீரதன் என அழைக் கப்படுகிறார். இதனாலேயே கூறப்படுகிறது, மனிதர்களின் துன்பத்திற்குக் காரணமான அவர்களின் பல பிறவிப் பாவங்களைக் கழுவுவதற்கு பகீரதன் ஆகாயத்திலிருந்து பூமிக்கு கங்கையை கொண்டுவந்தார் என்று. இந்த நம்பிக்கை காரணமாகவே இன்றும் பக்தர்கள் தமது பாவங்களைப் போக்க கங்கையிலே நீராடுகின்றனர். ஆனால் உண்மையில் அது வெறும் நீரினாலான கங்கையைக் குறிக்கவில்லை. அது பரமாத்மா சிவனின் ஞானமாகிய ஞான கங்கையையே குறிக்கின்றது

*எதிர்க்கத் துணிவில்லாதவன் வெற்றியை எதிர்பார்க்க முடியாது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு பௌதீக நீரினால் பௌதீக சரீரத்தின் அழுக்கை மட்டுமே கழுவ முடியும். சூட்சுமமான ஆத்மாவிலிருக்கும் சூட்சுமமான பாவ அழுக்கை பௌதீக நீரினால் ஒருபோதும் கழுவ முடியாது. இறைவனுடைய ஞானத்தினாலும், யோகத்தினாலும் மட்டுமே ஆத்மாக்களின் பாவங்களைக் கழுவமுடியும். எனவே எந்த நதியிலே நீராடுவதன் மூலமும் மனிதர்களால் தமது பாவங்களை போக்க முடியாது. ஆகவே பரமாத்மா சிவனிடமிருந்து இறை ஞானத்தையும், யோகத்தையும் கற்றுக்கொள்வதன் மூலமாக மட்டுமே மனிதர்களால் தமது பல பிறவிகளின் பாவங்களை அழிக்க முடியும்.

மனிதர்கள் பிறப்பு, இறப்பு, மறுபிறப்பு என்ற பிறவிச்சக்கரத்தில் சிக்கி தத்தமது பாவச் செயல்கள் என்ற கர்மக்கணக்கின் காரணமாக பல பிறவிகளாக துன்பத்தை அனுபவித்து வருகின்றனர். எனவே கர்ம பந்தனத்தில் சிக்கித் தவிக்கும் ஆத்மாக்கள் தமது துன்பத்திலிருந்து தம்மை விடுவிக்குமாறு இறைவனை வேண்டி பல பிறவிகளாக பக்திசெய்து வருகின்றனர். எனவே இறைவன் தனது பக்தர்களான கலியுகத்து மனிதர்களுக்கு தனது தெய்வீக ஞானமாகிய இராஜயோகத்தைக் கற்றுத்தருவதன்மூலம் அவர்களின் பல பிறவிப் பாவங்களைப் போக்கி அனைவருக்கும் இத்துன்ப உலகிலிருந்து நிலையான விடுதலையான முக்தியையும், கர்மபந்தன மற்ற சுதந்திரமான சதா எல்லையற்ற சந்தோசமும், அமைதியும், ஆரோக்கியமும், செல்வச் செழிப்பும் நிறைந்த அகால மரணமற்ற சுவர்க்க வாழ்க்கையாகிய ஜீவன்முக்தியையும் அளிப் பதற்காக பரமாத்மா தானே நேரடியாக இப்பூவுலகில் அவதாரம் எடுக்கின்றார்.

அவர் ஒரு தாயின் கருப்பைமூலம் பிறவி எடுக்காமல் தனது கருவியாக பயன்படுத்து வதற்கு தகுதியான தூய்மையும், முதிர்ச்சியும் உடைய ஒரு மனிதருடைய சரீரத்தில் நேரடியாக பிரவேசிப்பதாலேயே அவரது பிறவி அவதாரம் என அழைக்கப்படுகிறது. பரமாத்மா படைப்பவ ராகிய தான் யார் என்ற தன்னைப்பற்றிய முழுமையான அறிமுகத்தையும் தனது படைப்பாகிய முழு உலகின் உண்மையான வரலாறு, புவியியலையும், அதன் ஆரம்பம், மத்தி, இறுதி என்ற முக்காலத்தையும் கொண்ட இறைஞானத்தை அஞ்ஞானப் பாதையில் அறியாமையில் இருக்கும் மனிதர்களுக்குப் போதிப்பதற்காகவே இப் பூவுலகில் ஒரு மனித சரீரத்தை எடுக்கின்றார். ஏனெனில் மனிதர்களுடன் பேசுவதற்கு இறைவனுக்கு ஒரு மனித சரீரத்தின் புலன்கள் தேவைப்படுவதாலேயே அவர் ஒரு மனிதரின் சரீரத்தை ஆதாரமாக எடுக்கின்றார்.

உலகம் விநாசகாலத்தை நெருங்கிக் கொண்டிருப்பதால் விநாசத்திலிருந்து குழந்தை களான தனது பக்தர்களையும் முழு மனிதகுலத்தையும் காப்பதற்காக விநாசத்திற்கு முன்னர் அறியாமை என்ற உறக்கத்திலிருக்கும் அனைவரையும் விழித்தெழச் செய்வதற்கு அனைவர் மீதும் பரமாத்மா சிவன் ஞான மழையைப் பொழிகின்றார். கலியுக இறுதியில் உலகிலுள்ள மனிதர் களுக்கு சரீரத்தின் புலன்களான இரு ஸ்தூல கண்கள் இருந்தபோதும் அவர்களது ஆத்மாவின் கண்ணான நெற்றியிலிருக்கும் தெய்வீகப்புத்தி என்ற மூன்றாவது கண் மூடியே உள்ளது. ஆகையால் எந்த மனிதராலும் ஆன்மீக உண்மைகளை அறியமுடிவதில்லை. மனிதர்கள் சத்தியத் தைத் தேடி குருடர்கள்போல் அங்கும் இங்கும் தடுமாறி அலைகின்றனர். பரமாத்மா சிவனே சத்தியமானவர் ஆகையால் அவர் தனது சத்தியமான ஞானத்தின் மூலம் அனைவரது

*விழுவதெல்லாம் எழுவதற்குத்தானே தவிர அழுவதற்கு அல்ல.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானக்கண்ணையும் திறந்து வைக்கிறார். முதலில் பல பிறவிகளுக்கு நீண்டகாலமாக பக்தி செய்துவரும் தனது பக்தர்களுக்கே அவர்களது உண்மையான பக்தியை ஏற்றுக்கொண்ட இறைவன் அவர்களது பக்தியின் பலனாக அவர்களுக்கு தனது ஞானத்தை பரிசாகக் கொடுக்கிறார். இறைவனின் ஞானமே அவரது பக்தர்கள் தமது பக்திக்கான வெகுமதியாக பெற்றுக்கொள்ளும் பழமாகிய ஞானப்பழம் என்று அழைக்கப்படுகின்றது. அதாவது பரமாத்மா சிவன் தனது உண்மையான பக்தர்களுக்கே முதலில் இராஜயோகம் என்ற ஞானத்தை தானே நேரடியாக ஒரு மனித சரீரத்தின்மூலம் கற்பிக்கின்றார். என்றும் ஒரேயொரு உண்மையான இராஜாவாக விளங்கும் இறைவன் கலியுக முடிவில் சாதாரண மனிதர்களாக வாழும் தனது பக்தர்களுக்கு தானே சற்குருவாக வந்து இராஜயோகக் கல்வியை கற்பிப்பதன்மூலம் அவர்களை சுவர்க்க இராச்சியத்தின் இராஜாக்களாக மாற்றுகின்றார். அதாவது கலியுகத்தின் இறுதியில் யோகங்களுக்கு எல்லாம் இராஜாவாக விளங்கும் இராஜயோகக் கல்வியைக் கற்று இராஜா வாகிய இறைவனுடன் யோகம் செய்து இராஜயோகி வாழ்க்கை வாழ்பவர்களே எதிர்காலத்தில் இறைவனுடைய இராச்சியமாகிய சுவர்க்கத்தில் அதன் அதிபதிகளான இராஜாக்களான தேவர்களாக ஆகுவார்கள்.

பரமாத்மா சிவனே கலியுகத்தில் அசுரகுணம் கொண்ட மனிதர்களின் இராச்சியத்தில் துன்பம் நிறைந்த நரகமாக விளங்கும் உலகை சதா எல்லையற்ற சந்தோசம் நிறைந்த தேவர்கள் ஆட்சிசெய்யும் சத்தியயுக சுவர்க்க பூமியாக மாற்றுகின்றார். பரமாத்மா சிவனே இப் பூமியில் சுவர்க்கத்தைப் படைப்பவராகிய சுவர்க்கக் கடவுளென அழைக்கப்படுகிறார். சுவர்க்கத்தை படைப்பவரான அவரே தூய்மையற்ற அசுர குணம்கொண்டு நற்பண்புகளின்றி வாழும் சாதாரண மனிதர்களை தூய சகல நற்பண்புகளும் நிறைந்த சுவர்க்க இராட்சியத்தை ஆளத் தகுதியான தேவர்களாக மாற்றுகின்றார். இறைவனின் சொத்தாகிய அவரது படைப்பாகிய சுவர்க்க இராச்சியத்தின் வாரிசுகளாக தம்மை உரிமைகோருபவர்களே ஆஸ்திகர்கள் என அழைக்கப்படுகிறார்கள். ஆகவே கடவுளாகிய சிவனே தமது உண்மையான எல்லையற்ற ஆன்மீகத்தந்தை என்ற ஞான அறிவு இல்லாதவர்களால் அவரின் படைப்பாகிய சுவர்க்கம் என்ற ஆஸ்த்திக்கு உரிமையைகோர இயலாது. ஆகையாலேயே இறை நம்பிக்கை இருந்தாலும் இறைவனைப்பற்றிய உண்மையான அறிமுகத்தைப் பெறாமல் வெறுமனே சரியை, கிரியை என்ற தொண்டின் மூலம் பக்தி செய்பவர்களால் அவரது ஆஸ்த்திக்கு உரிமை உடைய ஆஸ்திகர்கள் ஆகிவிட முடியாது.

பரமாத்மா சிவனே உலக விநாசத்தைத் தூண்டுவதன்மூலம் பிரம்மாவின் இரவென அழைக்கப்படும் எல்லையற்ற அறியாமை இருள் சூழ்ந்த கலியுகம் என்ற இரவை அழித்து பிரம்மாவின் பகல் என அழைக்கப்படும் ஞான ஒளி நிறைந்த பகலாகிய சுவர்க்க உலகமாக மாற்றுகின்றார். ஆகவே உலக விநாசத்திற்கு முன்னர் மனித ஆத்மாக்கள் அனைவருக்கும் தனது அறிமுகத்தை கொடுத்து அவர்களது தூய்மையற்ற சரீரத்திலிருந்து அனைவரையும் விடுவித்து தன்னுடன் அமைதி உலகமாகிய வீட்டிற்கு அழைத்துச்செல்கிறார். பரமாத்மாவுடன் வீடுபேறு எய்துவதே முக்திஅடைதல் எனப்படுகிறது. பின்னர் அங்கிருந்து சுவர்க்கத்தில்

*விலகி நிற்பவன் வெல்வதில்லை. வெல்ல நினைப்பவன் விலகுவதில்லை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழத் தகுதிவாய்ந்த குழந்தைகள் தமது தகைமைகளுக்கேற்ப புதிய உலகில் புதிய பிறவிகளை எடுப்பார்கள். இறுதி விநாசமே அனைவருக்கும் முக்திக்கான வழியாகும்.

பரமாத்மா சிவனே இம் முழு உலகிலுள்ள அனைத்து இன, மத மனித ஆத்மாக்களுக்கும் இத்துன்ப உலகில் மீண்டும் பிறவி எடுக்காத இறுதி மரணத்தை எல்லோருக்கும் மொத்தமாக வழங்குவதால் அவரே மகாகாலன் என்றும், மரணத்திற்கெல்லாம் மரணமாகிய மகா மரணம் என்றும் அழைக்கப்படுகிறார்.

எனவே பரமாத்மா சிவனின் உண்மையான பக்தர்களான நாமும் இப் பிறவியிலேயே உலக விநாசத்திற்கு முன்னர், நமது பக்தியின் பலனாக இராஜயோகம் என்ற ஞானத்தை கற்று, இறைவனது படைப்பாகிய சதா சந்தோசமும் சகல செல்வச் செழிப்பும் நிறைந்த சுவர்க்கத்தில் நீண்ட ஆயுளுடன்கூடிய பல பிறவிகளை எடுப்பதற்கு தகுதியானவர்களாக ஆகுவோமாக.

---

## வாசகர் உள்ளத்திலிருந்து....

### ஞானச்சுடரின் பெருமை

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்தின் சிறப்பினையும் அவன் அருளினையும் உலகில் உள்ள இந்துமக்கள் மிக வியப்பாக அறியக்கூடிய வகையில் "ஞானச்சுடர்" என்னும் நூலினை திருவாளர் மோகனதாஸ் சுவாமிகள் மாதந்தோறும் வெளியிட்டுக்கொண்டிருக்கிறார். இந்த நூலின் மூலம் சுவாமிகள் இலங்கை நாடு முழுவதற்கும் ஆற்றுகின்ற சேவைகளை ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை வெளிப்படுத்துவதனால் நாம் எல்லோரும் அவற்றினை அறிந்து பெருமகிழ்ச்சி அடைகின்றோம். அதுமட்டுமன்றி அன்னதானக்கந்தனின் அடியவர்களுக்கு தினமும் தமது ஆச்சிரமத்தில் அன்னதானத்தை வாரி வழங்கிக்கொண்டிருக்கிறார். முருகன் அருளால் எமது நாட்டிலுள்ள மக்களும் வெளிநாடுகளில் உள்ள மக்களும் பெருந்தொகைப் பணத்தினையும் பொருட்களையும் வாரி வழங்குகின்றார்கள்.

மேலும் கல்விக்காகவும், மருத்துவத்திற்காகவும், ஆலய புனருத்தாரண வேலைகளுக்காகவும் மலையக மக்களின் வளர்ச்சிக்காகவும் கதிர்காம யாத்திரைக்காகவும் பெருந்தொகைப் பணத்தினைச் செலவிடுவதைப் பார்க்கின்றபோது ஆச்சிரம சுவாமிகளின் சேவையை நான் எவ்வாறு பாராட்டுவது என்று தெரியவில்லை. ஞானச்சுடர் கனதியான ஒரு மலராக வெளிவருவதுடன் அதில் திருவாசகம், திருமந்திரம், பகவத்கீதை போன்றவற்றின் தொடர்ச்சியான கட்டுரைகளும் வரலாற்று சிறப்புமிக்க புராண இதிகாச கட்டுரைகளும் இடம்பெறுவது மிகச் சிறப்பானது.

இம் மலரினைப் பெற்றுக்கொள்ளும் அடியவர்களுள் நான் 26ஆவது அங்கத்தவராக இருப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். ஆச்சிரம சுவாமிகளின் பணிகளும் சேவைகளும் தொடர்ந்து மக்களுக்குக் கிடைப்பதற்கு எல்லாம்வல்ல செல்வச்சந்நிதியான் அருள்புரிவதோடு சுவாமிகளை பல்லாண்டுகாலம் வாழ வைக்க வேண்டும் என்று முருகனை வேண்டி நிற்கின்றேன்.

நன்றி

*வி. குகலிங்கம்*
*பண்ணாகம், சுழிபுரம்.*

*சோதனையில்தான் ஒளிந்திருக்கிறது சாதனை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைவனுடன் நேரில் தொடர்புகொண்ட இறையருட் செல்வர்கள் வரிசையில் மார்க்கண்டேயர்

– திரு மூ. சிவலிங்கம் அவர்கள் –

சிவபெருமான் சிறப்புடன் அருள்பாலிக்கும் எட்டு வீரட்டானேச்சுரங்களில் திருக்கடவூர் திருக்கடையூர் சிவாலயம் அதிசிறப்பும் அற்புதங்களும் நிறைந்ததாகும். இத்திருத்தலத்தில் அருள்பாலிக்கும் அமிர்தகடேஸ்வரர் தமது பக்தனுக்காக காலனைக் காலால் உதைத்த பெருமைக்குரியவர்.

இச் சிவாலயத்தின் சூழலிலமைந்த பெருவனத்தில் மிருகண்டு என்னும் முனிவர் நெடுங்காலமாகத் தவஞ்செய்து வந்தார். இவரது தர்ம பத்தினியான மருத்துவமதி என்பவர் தவஞ்செய்யும் கணவருக்கு வேண்டிய பணிவிடைகள் செய்து வந்தார். இச் சிவப்பொலிவான தம்பதியினர் தமது எதிர்காலச் சந்ததியாக ஒரு மழலைச் செல்வமின்றி வருந்தினர். ஒரு மழலைச் செல்வம் வேண்டி இருவரும் இறைவனைப் பிரார்த்தித்தனர். முனிவர் கடுந்தவமிருந்து தமது வேண்டுதலுக்கு உதவுமாறு பிரார்த்தித்தார்.

முனிவரின் நீடிய பக்தியான தவத்தை மெச்சிய இறைவன் அவர் முன் தோன்றி 16 வயதுடைய ஆயுளும் சிவசிந்தனையுமுள்ள புதல்வன் வேண்டுமா? அல்லது நீடிய ஆயுளும் பக்தி குன்றிய புதல்வன் வேண்டுமா? எனக் கேட்டார். அச்சமயம் முனிவர் வயது 16 ஆயினும் சிவசிந்தனையுள்ள புத்திரனே வேண்டுமென்றார். இறைவன் முனிவரின் சித்தப்படி பதினாறு வயதுடைய புதல்வனைத் தந்தோம் எனக் கூறியதும் மறைந்தருளினார்.

இறைவனின் கருணையால் முனிபத்தினி கருவுற்றாள். உரிய காலத்தில் சிவப் பொலிவுடைய அழகிய ஆண்மகவு பிறந்தது. பெற்றோர் தமது மகனுக்கு "மார்க்கண்டேயர்" என நாமஞ்சூட்டி அன்புடன் அரவணைத்து வந்தனர். மிருகண்டு முனிவர் தமது மகனுக்குச் சிவபக்தியையும் வழிபாட்டின் சிறப்புக்களையும் போதித்து இறைபக்தியில் இணைத்தார். பெற்றோர் வனத்திலுள்ள தவச்சாலையில் வாழ்ந்தாலும் மார்க்கண்டேயர் சிவாலய தரிசனத்தைப் பக்திபூர்வமாகக் கடைப்பிடித்தான்.

காலங்கள் செல்லவும் மார்க்கண்டேயருக்கு 15 வயது வந்ததும் தமது மகனின் ஆயுள் இன்னும் ஒரு வருடமே எனப் பெற்றோர் எண்ணியதால் ஆழ்ந்த கவலையிலிருந்தனர். இறைவனருளாலும் தந்தையின் வழிகாட்டலிலும் சிவபக்தியில் ஆழ்ந்த மார்க்கண்டேயர் தம்மைப் படைத்த இறைவனின் சக்தியால் தாம் காப்பாற்றப்படலாம் என்று சிந்தித்தான். தமது பெற்றோரின் கவலையைப் போக்குவதன் பேரில் தென்னகத்திலுள்ள 108 சிவாலயங்களைத் தரிசித்து இறைவனருளைப் பெற முன்வந்தான். தான் 108 சிவாலயங்களைத் தரிசிக்கச் செல்வதற்காகப் பெற்றோரிடம் அனுமதி பெற்றான். தான் வழிபடும் இறைவனின் பேரருள் கிடைப் பதால் பெற்றோரைக் கவலையின்றி வாழும்படி கூறிவிட்டுச் சிவாலய தரிசனைக்காகப் புறப்பட்டான்.

*அறியாமை ஒன்றும் தவறில்லை. ஒன்றுமே அறியாமல் இருப்பதுதான் தவறு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்க்கண்டேயர் இறைவனின் பேரருளை வியந்து இறையருளின் துணையுடன் பெற்றோரின் கவலை நீங்கவும் தாம் சிவ இன்பம் பெறும் பெருவிருப்பின் பேரில் ஒவ்வொரு சிவாலயத்திற்கும் சென்று நன்கு வழிபட்டு இறைபணியாற்றி ஓரிரு நாட்கள் அச்சிவாலயத்தில் தங்கித் தனது பக்தியான வேண்டுதலை வளர்த்துக்கொண்டான். இவ்வாறு 107 சிவாலய தரிசனையை நிறைவு செய்ததும் தமது 16 வயதெல்லையின் ஒரு நாள் முன்பாகப் பெற்றோரிடம் வந்தான். பெற்றோரை நன்கு வழிபட்டான். அவர்களை நோக்கி நீங்கள் கவலை விடுங்கள். என்னைப் படைத்தவர் காப்பாற்றுவார் என்று கூறிவிட்டு 108ஆம் திருத்தலமாகத் திருக்கடையூர் அமிர்தகடேஸ்வரரை வணங்கச் சென்றார்.

மார்க்கண்டேயர் தமது 16 வயதின் நிறைவு நாளில் அமிர்தகடேஸ்வரரைத் தரிசிக்க தேக சுத்தியும் ஆத்ம சுத்தியும் சிறக்க அன்பென்னும் பேரூற்றால் அன்பே சிவம் என்னும் தூய சிந்தனையுடன் ஆலயத்துட் சென்று உளமாரப் பிரார்த்தித்தான். இறுதிநேரம் அண்மித்ததை உணர்ந்து ஆலயத்தை வீதிவலமாக வந்ததும் இலிங்கப் பெருமானைத் தமது இரு கரங்களாலும் இறுகத் தழுவிக்கொண்டு சிவசிந்தனையில் மூழ்கினார்.



எந்த உயிரையும் கவரும் நாள் நேரம் பார்த்துச் செல்லும் எமதர்மன் மார்க்கண்டேயரின் உயிரைக் கவர்வதற்காக அமிர்தகடேஸ்வரர் ஆலயத்தில் உரிய நேரம் சென்றடைந்தான். அவனின் மமதை எல்லாம்வல்ல முழுமுதற் கடவுளான இலிங்க உருவத்தை இறுகத் தழுவியிருந்த ஒரே சிந்தனையில் இறைவனெனவும் நோக்காது மார்க்கண்டேயருடன் இலிங்கத்தின்மீதும் பாசக் கயிற்றை எமன் வீசினான். இதனால் இலிங்க வடிவத்திலிருந்து வெகுண்டெழுந்த இறைவன் காலனைக் காலால் உதைத்ததும் எமன் வீழ்ந்திறந்தான். எமதர்மன் இறந்ததும் பூமாதேவி பூபாரம் தாங்கமுடியாதென பிரம்ம, விஷ்ணு மற்றும் தேவர்களிடம் முறையிட்டாள். தேவர்கள் யாவரும் பதைபதைப்புடன் திருக்கடையூரை வந்தடைந்து இறைவனைப் பணிந்து பிரார்த்தித்தனர். சற்று மனமிரங்கிய இறைவன் காலனை உயிர்பெற வைத்தார். அத்துடன் காலனை நோக்கிச் சிவபக்தர்களை அணுகக்கூடாதென நிபந்தனை விதித்துக் காலனை அனுப்பினார். இந்த நிகழ்வால் இறைவனுக்குக் காலகாலன் என்னும் திருப்பெயரும் அமைந்துள்ளது. இறைவன் தமது பக்தனான மார்க்கண்டேயரை அரவணைத்து "என்றென்றும் 16 வயதுடன் வாழ்வாயாக" என வாழ்த்தி மறைந்தருளினார். திருக்கடையூர் அமிர்தகடேஸ்வரர் சிவலிங்கத் திருமேனியின் மேற்குப் பகுதியில் இறைவன் வெளிவரும்போது ஏற்பட்ட வெடிப்பும் பாசக்கயிறு பட்ட தழும்பும் இன்றும் காணமுடிகிறது. இறைவனின் பேரருளால் காலனை வென்ற மார்க்கண்டேயர் பெற்றோரிடஞ் சென்று அவர்களை வணங்கியதும் இறைவனின் திருவிளையாடலையும் கூறி மகிழ்ந்தார். யாவரும் இறையருளை வியந்தனர். மார்க்கண்டேயர் என்றென்றும் 16 வயதுடைய சிரஞ்சீவியான சிவநேயச் செல்வரானார்.


*வண்ணங்களில் இல்லை வாழ்க்கை. உன் எண்ணங்களில் உள்ளது அழகிய வாழ்க்கை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறுமுகநாவலருடைய பணிகளின் இக்காலப் பயன்பாடுகள்

– பேராசிரியர் கலாநிதி சு. வித்தியானந்தன் அவர்கள் –



"நல்லைநகர் ஆறுமுக நாவலர் பிறந்திலரேற் சொல்லு தமிழ் எங்கே...." என்று சி.வை. தாமோதரம்பிள்ளை பாடியது வெறும் இரங்கற்பா அன்று. நாவலருடைய தோற்றமும் அவருடைய பணியும் ஒரு காலத்தின் தேவைகளாக அமைந்தன. ஆங்கிலேய ருடைய ஆட்சி தமிழ்ப் பிரதேசங்களில் எல்லாம் பரவி அவ் ஆட்சியின் அதிகாரப் பயனால் தமிழருடைய கலாசாரம் ஊடுருவப் பெறுகின்ற காலத்திலேயே நாவலர் தன்னுடைய பணிகளை ஆற்ற முயன்றார். தமிழர் கலாசாரத்துக்கு அடிப்படையாக அமைவது சமயமே என நாவலர் கருதினார். அதனால் அவருடைய தலையாய பணி சமய சம்பந்தமாகவே அமைந்தது.

## போலிச் சமயவாதிகள்

"நாவலர் அவர்களுக்கு இனியும் இங்கே இடமுண்டா" என்னும் வினாவைத் தொடுத்து அவர் அன்று சமயப் போர்வையினுள்ளே இஷ்ட போதங்களில் ஈடுபட்டு வாழ்பவர்கள் பற்றிக் கடிந்துரைத்த பல கூற்றுக்களை எடுத்துத்தந்து, அக்கூற்றுக்கள் இன்றும் பயனளிக்க வேண்டும் என பண்டிதமணி இலக்கிய கலாநிதி சி. கணபதிப்பிள்ளை கூறுகின்றார். நாவலர் அவ்வாறு கூறிய கூற்றுக்களில் ஒன்று பின்வருமாறு அமைகின்றது.

"அடிமையானவன் தன்னிடத்தே தன் நாயகன் ஒப்பித்த பொருளை அவன் கருத்தறிந்து அக்கருத்தின்படியே செலவு செய்தல் வேண்டுமன்றோ" அந்த நாயகன் கருத்துக்கு மாறாகச் சேமித்து வைத்துக்கொண்டாலும் தன்னிச்சைப்படி செலவு செய்து அழித்தாலும் அதனாலே தண்டிக்கப்படுவானன்றோ? ஆன்மாக்கள் எல்லாம் சர்வலோக நாயகராகிய கடவுளுக்கு மீளா அடிமைகள். தமக்குத் திருத்தொண்டு செய்யும் பொருட்டு ஆன்மாக்களுக்கு இவ்வருமையாகிய மனித சரீரத்தைக் கொடுத்தருளியவர் அக்கடவுளே. மனிதர்களிடத்துள்ள பொருளெல்லாம் அவர் கொடுத்தருளிய பொருளே. பொருள் கொடுத்தருளிய கடவுளுடைய திருவுள்ளக் கருத்து யாது? கடவுளுடைய திருவுள்ளக் கருத்துக்கு மாறாக வீண் செலவு செய்வோரும், உலோபத் தினாலே சேமித்து வைப்போரும் அக்கடவுளாலே தண்டிக்கப்படுவர்". சமயம், சமூகம் தொடர்பான பல நல்ல கருத்துக்கள் நாவலருடைய இக்கூற்றிலே பொதிந்துள்ளன. இவை இன்னும் எம்மிடையே வாழும் பலருக்கு அறிவுரை வழங்கத்தக்கன; பயனளிக்கக் கூடியன.

போலிச் சமயவாதிகள் அன்று மாத்திரமல்ல இன்றும் எம்மிடையே வாழ்கின்றனர். நாவலர் அன்று இப்போலிகளைக் கண்டித்துக் கூறியவை இன்றும் பொருள் பொதிந்தனவாக, காலத் தேவைகளாக அமைந்துள்ளன. சமயத்தை நிலைக்களனாகக் கொண்டே எம்முடைய

*தோல்வியின் அடையாளம் தயக்கம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாசாரம் வளர்ச்சியடைய வேண்டும் என்பது நாவலருடைய எண்ணம். இன்று அது உணரப்பட்டு வருகின்றது. சமய விழிப்புணர்வு இன்று நாடெங்கணும் ஏற்பட்டு வருகின்றது. இச்சந்தர்ப்பத்திலே நாவலர் தம் போதனைகள் எமக்கு வழிகாட்டிகளாக அமைவனவாயுள்ளன.

## புராண படனப் பணி

நாவலர் சமயந் தொடர்பாக ஆற்றிய இன்னொரு பணியினை இன்றும் நாம் நினைவு கூர்கின்றோம். அதுவே அவருடைய புராண படனப் பணியாகும்.

"திருக்கோயிலிலேனும் திருமடத்திலேனும் நாடோறும் இரவிலே கேட்போர் யாருக்கும் பயன்படும் பொருட்டுத் தக்கோர்களைக் கொண்டு பெரியபுராணம், திருவிளையாடற்புராணம், திருவாதவூரடிகள் புராணம், கோயிற் புராணம், கந்தபுராணம் உபதேசகாண்டம், வாயு சங்கிதை முதலிய சிவபுராணங்களையும் சிவத் தருமோத்திரத்தையும் படித்துப் பொருள் சொல்லுவிக்க வேண்டும்"

என்று நாவலர் அன்று எழுதினார். அவரே கோயிலில் மக்கள் கூடியிருக்கும் சந்தர்ப்பத்தில் புராணபடனம் செய்தார். நாவலர் அன்று மக்கள் மத்தியிலே எம்முடைய சமய நூல்களின் உண்மைகளை இலகுவாகப் பரப்ப வேண்டும் என எண்ணினார். அதற்கு தகுந்த வழியாகப் புராணபடனம் அமைந்தது. அன்று நாவலராலே தொடங்கப்பட்ட பணி இன்றுவரை தொடர்ந்து ஆற்றப்பட்டு வருகின்றது. இன்று அப்பணியின் தேவை அதிகமாகவே உணரப்படுகின்றது. இன்று கோயில்களுடைய தொகை அதிகரித்துக்கொண்டே வருகின்றது. கிராமத்து மக்கள் எல்லோருக்கும் புராணங்களையும் சமய நூல்களையும் படித்துணரும் வாய்ப்பு ஏற்படுவதில்லை. ஆகவே இக்கோயில்களிலே நிகழும் திருவிழாக்களைச் சாட்டாக வைத்துக்கொண்டு புராண படனங்களை நடாத்துதல் மூலம் மக்களுக்கு ஆன்மீக அறிவினை ஊட்டலாமென நம்பப் படுகின்றது. நாவலருடைய இத்தகைய முயற்சி இன்று தேவைப்படுவதுடன் அம்முயற்சியிலே சில மாற்றங்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இன்று கோயில்களிலே வெறுமனே புராணபடனம் மாத்திரம் செய்யாது சமயப் பொருள்பற்றிய விரிவுரைகளும் ஒழுங்கு செய்யப்படுகின்றன.

## உரைநடையில் சமயநூல்கள்

சமயப்பணி காரணமாக நாவலர் சமய நூல்களில் உள்ளவற்றை எல்லோரும் அறிந்து கொள்ள வேண்டும் என எண்ணினார். இதனால் காலத்தின் தேவையையொட்டி அவர் பெரியதொரு பணியாற்றினார். சமய நூல்கள் யாவும் செய்யுள் வடிவிலேயே இருந்தன. நாவலர் வாழ்ந்த காலம் உரைநடைக் காலம். நாவலரும் கைதேர்ந்த உரைநடைக்காரர். எனவே எழுத்து வாசனை உடையவர்கள் வாசித்துப் பயன்பெறுவதற்காகச் செய்யுள் நடையில் அமைந்த நூல்களை உரைநடையிலே எழுதி வழங்கினார். கேள்வி வாயிலாகச் சமய உண்மைகளை அறிய விரும்பியவர்களுக்குப் புராணபடனம் மூலமும், எழுத்து வாயிலாக அறிய விரும்பியவர்க்கு உரை நூல்கள் வாயிலாகவும் பணியாற்றினார். அப்பணி இன்றும் நிலைபேறுடையதாயுள்ளது. சமயக் கல்வி பாடசாலைகளிலே இன்று முக்கியத்துவம் பெற்று வருகின்றது. அத்தகைய கல்வியைப் போதிக்க ஆசிரியருக்கும் கற்பதற்கு மாணவர்க்கும் நாவலருடைய பணி இன்று பெருந்துணை புரிவதாயுள்ளது.

*கலங்காத உள்ளம் படைத்தவர்களே இறுதி வெற்றிக்கு உரியவர்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவலருடைய சமூகப்பணி இன்று நாம் நினைவுகூர வேண்டியதொன்றாகும். நாட்டிலே அதிகாரிகளால் அநீதி விளையும்போதும் அவர்களால் அக்கிரமங்கள் செய்யப்பட்டபோதும் நாவலர் தன்னுடைய எழுத்துக்களாலே அஞ்சாமல் எடுத்துக்கூறிய பாங்கு இன்றுள்ளவர்கள் எப்படி இயங்கவேண்டும் என்பதை எடுத்துக்காட்டவல்லது. அதிகாரிகளின் அட்டூழியங்களை அவர் சீற்றத்துடன் சித்திரித்தபோது, "குலாமிகளின் உறவினர்க்கெல்லாம் வேட்டைதான், வேலை தான் சில இடங்களில் உறவினரே உடையாரும் நொத்தாரிசுமாகி அட்டூழியம் செய்கிறார்கள். பத்திரப் பதிவுகளில் படுமோசம் நடக்கிறது. பாதை போடுவதற்கென்று ஏஜண்டு தன் குலாமிகளின் பேச்சையே கேட்டு நல்ல கனிமரங்களை வெட்டிச் சாய்க்கிறார்; வேலிகளைப் பிரிக்கிறார், வீடுகளை இடிக்கிறார் நிலங்களை ஆக்கிரமிக்கிறார் என்று எழுதினார். இத்தகைய கண்டனம் இன்றும் பொருந்துவதாகச் சில சமயங்களிலே அமைந்து விடுவது உண்டு.

## இருவகைக் கல்விப்பணி

நாவலருடைய கல்விப்பணி இன்று எமக்கு எத்தனையோ பயனை அளித்துக் கொண்டிருக்கின்றது. சமயத்தைவிட்டு, கலாசாரத்தைத் துறந்து, ஆங்கிலக்கல்வி பெற்று நல்ல உத்தியோகம் பெறுகின்ற நிலை நீடித்திருந்தால் இன்று எம்முடைய நிலை எப்படி இருந்திருக்கும்? அத்தகைய நிலை மாறுதற்கு நாவலர் மேற்கொண்ட கல்விப்பணி இரண்டு வகைப்பட்டது. ஒன்று அரசினராலே அளிக்கப்பட்ட கல்விமுறையிலே மாற்றம் ஏற்படுத்தும்படி செய்த முயற்சியாகும். ஒரு தடவை வில்லியம் அண்டர்சன் என்னும் தேசாதிபதிக்குச் சமர்ப் பித்த "பிட்டீச"த்திலே நாவலர்:

"மிஷனரிமார் பாடசாலைகளில் தமிழ் இளைஞர்களை அவர்களது சுயமத ஈடுபாட்டிலிருந்து விடுவிப்பதற்கு எடுத்த முயற்சிகளைச் சிறிது தளர்த்தியிருந்தால் அக்கற்பித்தல் முறையினால் அவர்கள் அதிகமான அறநெறி நிலைப்பட்ட நன்மைகளைப் பெற்றிருப்பார்கள்" என்று கூறிவிட்டு,

"வாழ்க்கையிற் பிரயோசனமானதும் இலாபகரமானதுமான ஒரு தொழிலைப் பெறு தற்கான தகுதியைத் தங்கள் பிள்ளைகள் பெறுவதென்பது அவர்களை அவர்களது தேசத் தினரிடமிருந்தும் அம்மக்களிடையே வாழ்வதற்கான அறநெறிப்பட்ட தேவைகளிலிருந்தும் அந்நியப்படுத்துவதாக இருத்தல் கூடா".

எனக் கூறினார். அவருடைய ஆழ்ந்த நுண்ணறிவுள்ள கல்விக் கோட்பாட்டினை இதன்மூலம் உணரக்கூடியதாக இருக்கின்றது. ஆங்கிலக்கல்வியை ஏற்றுக்கொண்ட நாவலர் அக்கல்வியினால் யாழ்ப்பாண மக்களின் கலாசாரம் பிறழக்கூடாதெனவே எண்ணினார். இத்தகையதொரு கல்விமுறையை நாவலர் போன்றவர்கள் எண்ணியதாலேயே இன்று இந்த நாட்டிலே இந்து, பௌத்த கலாசாரப் பின்னணியிலே கல்விமுறை அமையக்கூடியதாயிருந்தது.

## அமைத்த பாடசாலைகள்

கல்விப்பணியிலே நாவலர் அமைத்த பாடசாலைகள் பற்றிக் குறிப்பிடல் வேண்டும். வித்தியாசாலைகளைத் தாபிக்கின்ற பணியினை நாவலர் தொடங்கி வைத்த காரணத்தினாலேயே இன்று யாழ்ப்பாணத்திலே இந்துக் கல்லூரிகளும் இந்து மகளிர் கல்லூரிகளும்

*புத்தகங்களைவிட அனுபவமே அதிக சாதனை புரிகிறது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலைபேறானதொண்டினை ஆற்றக்கூடியதாயுள்ளன. நாவலரே கூறுகின்றார்; "இவைகளெல்லா வற்றிற்கும் காரணம் சைவ சமயத்தையும் அதன் வளர்ச்சிக்குக் கருவியாகிய கல்வியையும் வளர்த்தல் வேண்டும் என்னும் பேராசையேயாகும். இப் பேராசையினால் இருபது வருஷகாலம் நான் செய்த முயற்சிகள் பல. அவைகளுள்ளே சித்திபெற்றவை மிகச்சில. சைவசமயிகள் யாவரும் சைவசமயத்திலே சிரத்தை உடையவர்களாகித் தங்கள் தங்களால் இயன்ற உதவி செய்வார்களாயின் நான் எடுத்த முயற்சிகளெல்லாம் இதற்கு முன்னரே நிறைவேறிவிடும். நிறைவேறின், என்னைப் போலவே பிறரும் அங்கங்கு நன்முயற்சிகளைச் செய்வார்கள். செய் யிற் கல்வியும் சமயமும் தழைத்தோங்கும்..... நிலையில்லாத என் சரீரம் உள்ளபொழுதே என் கருத்து நிறைவேறுமா நிறைவேறாதா என்னும் கவலை என்னை இரவும் பகலும் வருத்து கின்றது. அக் கருத்து இது. தமிழ்க்கல்வியும் சைவசமயமும் அபிவிருத்தியாதற்குக் கருவிகள் முக்கிய ஸ்தலம்தோறும் வித்தியாசாலை தாபித்தலும் சைவப் பிரசாரணஞ் செய்தலுமேயாம்".

இவ்வாறு வித்தியாசாலைகளைத் தாபித்துத் தமிழ்ப் பிள்ளைகளுக்கு அவர்களுடைய சமூக, சமய, கலாசாரப் பின்னணியிலான கல்வியைப் போதிக்க வேண்டும் என நாவலர் எண்ணிப் பணியுமாற்றினார். அப்பணியினை அவருக்குப் பின்வந்தோரும் தொடர்ந்து செய்தனர். அப்பணிகளுள் ஒன்று இன்று நாம் எல்லோரும் பெரும் பயன்பெறும் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகமாகும். நாவலரின் கொள்கைகளிலே ஈடுபாடு கொண்ட சேர்.பொன். இராமநாதன் எமது தமிழ்ப் பிள்ளைகள் உயர்கல்வி கற்பதற்காக நாவலர் வழிநின்று பரமேஸ்வராக் கல்லூரியைத் தாபித்தார். அக்கல்லூரியும் கல்லூரி வளவும் இன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு நிலைக்களன்களாய் உள்ளன. பரமேஸ்வராக் கல்லூரியினைச் சேர்.பொன். இராமநாதன் அமைத்தபொழுது எதிர்காலத்திலே அக்கல்லூரி வளர்ச்சி அடைந்து யாழ்ப்பாண இந்து மாணவர்க்குரிய உயர் கல்வி நிறுவனமாக அமையவேண்டும் என எண்ணினார். ஆனால் அவர் எண்ணம் இன்னொருபடி உயர்வாக நிறைவேறியது. பரமேஸ்வராக் கல்லூரி இலங்கையில் உள்ள தமிழ் மாணவர்கள் எவருமே பயிலக்கூடிய பல்கலைக்கழகமாக மாறிவிட்டது.

## தமிழில் நூல் அச்சிடல்

நாவலரின் கல்விப்பணிக்குத் தமிழில் நூல்களை அச்சிட்டு வெளியிடுவது ஒரு கருவியாக அமைந்தது. பாதிரிமாரைப் பின்பற்றி மாணவர் தகுதிக்கு ஏற்ப அவர் நூல்களை எழுதினார். பாலபாடம், சைவ வினாவிடை, பெரியபுராணம், கந்தபுராண வசனம், இலக்கணச் சுருக்கம் முதலியன சாதாரண மாணவருக்கென வெளியிடப்பட்டவை. அவர் எழுதிய பால பாடங்கள் இன்றும் பாடசாலைகளிலே படிக்கக்கூடிய தகைமை உடையனவெனக் கல்வியிய லாளர் கூறுகின்றனர். வெறுமனே சமய நோக்காக மட்டுமன்றிப் பொதுவான கல்வி நோக்கிலே இப்பாடங்கள் எழுதப்பட்டன. நான்காம் பாலபாடத்திலே அவர் கையாண்டுள்ள உரைநடை இக்கால அறிவியல்துறை சார்ந்தவர்கள் எத்தகைய உரைநடையைக் கையாளவேண்டு மென்பதை அறிவுறுத்துவதாக அமைந்துள்ளது. அவர் எழுதிய இலக்கணச் சுருக்கம் இன்றும் பாடசாலைகளிலே பயன்படுத்தக்கூடியதாக விளங்குகின்றது. பெரியபுராண வசனம் முதலியன புதிய பதிப்புக்களாக வெளிவரவேண்டியவை. நன்னூல் விருத்தியுரை, திருமுருகாற்றுப்படை, திருக்கோவையாருரை, தருக்க சங்கிரகம் போன்றவை உயர்கல்வி மாணவருக்கெனப்

*கோபத்திற்குக் கொடுக்கும் மரியாதையை யாரும் புன்னகைக்குக் கொடுப்பதில்லை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிப்பிக்கப்பட்டவை. திருக்கோவையார்ப் பதிப்பிலே தம் அச்சிற் பதிக்கவிருக்கும் நூல்களின் பெயர்களைக் குறிப்பிடுகின்றார். அவையாவன:- இறையனார் அகல்பொருளுரை, தொல்காப்பியம், சேனாவரையாருரை, அகல்பொருள் விளக்கவுரை, வீரசோழியவுரை, சீவகசிந்தாமணியுரை, சிலப்பதிகாரவுரை, மணிமேகலை, வளையாபதி, கலித்தொகையுரை, புறநானூறு முதலியன. இதனை நோக்கும்போது பல்கலைக்கழகப் படிப்பிற்குரிய நூல்களையும் அவர் பதிப்பிக்கவிருந்தார் என்பதும் அவர் பின்னுஞ் சில ஆண்டுகள் உயிருடன் இருந்திருந்தால் சாமிநாதையர் பதிப்பித்த நூல்களை அவருக்கு முன்பே வெளியிட்டு இருந்திருப்பார் என்பதும் தெளிவாகின்றன.

## தன்னாட்டு உணர்வூட்டல்

நாவலருடைய தமிழ்ப்பணி அதன் இன்றைய பயன்பாட்டுத் தொடர்பாக விதந்து கூறவேண்டியதொன்றாக அமைந்துள்ளது. நாவலருடைய தமிழ்ப்பணிகளில் இன்றும் நமக்குப் பயனளித்துக்கொண்டிருப்பது அவர் இலக்கிய விடயமாகத் தொடங்கி வைத்த நன்னாட்டு உணர்வாகும். எங்களுடைய நாட்டிலும் தமிழ் இலக்கியம், இலக்கணம் வளர்ச்சி அடைந்துள்ளன. அத்துறையிலே பலர் தொண்டாற்றியுள்ளனர். அவற்றுக்குத் தனித்துவமான பண்புகள் உண்டு. இத்தகைய ஓர் உணர்வினை ஈழத்து அறிஞர்களுக்கு முதன்முதல் ஊட்டியவர் நாவலரே. "யாழ்ப்பாணம் ஒரு சிறு நூலையேனும் ஒரு சிற்றுரையேனும் செய்குநரில்லாத தேசம்" என்று வீராசாமி முதலியார் பழித்துக் கூறியபொழுது நாவலர் அவருக்கு நல்லறிவுச்சுடர் கொளுத்திவிட்டார். அந்த உரையிலே யாழ்ப்பாணத்திலே தோன்றிய நூல்கள், அவற்றை இயற்றிய புலவர்கள், அவர்களால் ஆகிய பிற தொண்டுகள் ஆகியன வரிசைப்படுத்தப்பட்டன. அவ்வுரையிலே கூறியவற்றைப் பின்வருமாறு சுருக்கிக் கூறலாம்:

"தமிழிலே ஹோமாந்திரிகற்பம், இரகுவம்சம், தட்ஷிணகைலாச புராணம், சிவராத்திரி புராணம், வீசகணிதம், விரிவகராதி முதலியன யாழ்ப்பாணத்தாராற் செய்யப்பட்டனவென்பதை அறிந்தடங்கக்கடவீர். சிதம்பரத்திலே ஞானப்பிரகாசம் என்னும் திருக்குளம் செய்வித்தவராகிய ஸ்ரீ ஞானப்பிரகாச முனிவர் யாழ்ப்பாணத்தார் என்பதை அறிந்து இனியாயினும் வாய் மூடக்கடவீர்".

இவ்வாறு தன்னாட்டுணர்வுடனும், தமிழ்ப்புலமை அபிமானத்துடனும் கூறிச் செல்கிறார். இப்படி எமது தேச இலக்கிய முயற்சியினையும் அதன் தனித்துவத்தினையும் இன்று நாம் அடிக்கடி எடுத்துக்கூறவேண்டியவர்களாக இருக்கின்றோம். அதற்கு நாவலருடைய நல்லறிவுச் சுடர் கொளுத்துதல் நல்ல பயனளிக்கும்.

நிறுத்தக் குறிகளின் பயன்பாட்டை வரையறுத்து அக்குறிகளைத் தமிழ் வழக்குகளுடன் இணைத்து வைத்தமை நாவலருடைய தமிழ்ப் பணிகளில் ஒன்றாகும். தொல்காப்பியர் காலம் தொடக்கம் தமிழ் மொழியிலே சொற்கள், உருபுகள், விகுதிகள், இடைநிலைகள், சாரியைகள் ஆகிய சேருமிடத்துத் தோன்றும் புணர்ச்சிகளுக்கு விதி கூறப்பட்டுள்ளன. சொற்களுக்கு இடையே இடைவெளி விடாது தொடுத்து எழுதுவதன்மூலம் காலம் இடம் சிரமம் ஆகியவற்றைக் குறைத்துக் கொள்ளலாம் என எண்ணப்பட்ட காலத்திலே பெருந்தொகையான புணர்ச்சிவிதிகள் கூறப்பட்டன. ஆனால் அச்சுயந்திரத்தின் வரவினாலும் ஆங்கிலச் செல்வாக்கினாலும் சொற்களிடையே இடைவெளி விட்டு எழுதும் வழக்கம் ஏற்பட்டது. நாவலர் அக்காலத்திலேயே

*நம்பிக்கையை இழக்காதிருந்தால் இழந்த அனைத்தையும் மீட்டுவிடலாம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்ந்தார். அவர் தான் கையாண்ட உரைநடையிலே சொற்களிடையே நடைபெற்ற தேவையற்ற புணர்ச்சிகளை நீக்கிவிட்டார். அப்புணர்ச்சிகளுக்குப் பதிலாக வேறு நல்ல வழிகள் கையாளப்பட்டன. உதாரணமாக "இலங்கையில் தோன்றிய" என்னுந் தொடர் மரபுமொழி இலக்கண விதிகளின்படி "இலங்கையிற்றோன்றிய" என்று புணர்ந்தமையும். ஆனால் நாவலரோ அத்தகைய கடுமையான புணர்ச்சியினை நீக்குவதற்காக அத்தொடரை "இலங்கையிலே தோன்றிய" என்று எழுதிக் காட்டினார். இவ்வாறு இத்தகைய புணர்ச்சிகளை நீக்கி அவர் எழுதிய உரைநடை பலராலும் போற்றப்பட்டதாகும். எல்லோரையும் கவரும் தன்மை உடையதாக அவருடைய உரைநடை அமைந்ததால் அவர் கையாண்ட குறியீடுகளும் நீக்கிய புணர்ச்சிகளும், புணர்ச்சிகளில் ஏற்படக்கூடிய மாற்றங்களும் மக்களிடையே பெருகிப் பரவின. அவை இன்றும் எம்முடைய எழுத்துக்களிலே பயனளித்துக்கொண்டிருக்கின்றன.

தொகுத்து நோக்கின் நாவலர் அன்று சமூகம், சமயம், கல்வி, தமிழ் என்னும் நான்கு அம்சங்கள் தொடர்பான பணிகளைப் புரிந்தார். அவ்வாறு அவை தொடர்பாகப் புரிந்த பணிகள் இன்றும் பல வழிகளிலே நமக்குப் பயனளித்துக்கொண்டிருக்கின்றன.

*-தினகரன் வாரமஞ்சரி, செப்டம்பர் 1981.*

## அறிஞர் யார்

ஆறடி நிலந்தான் சொந்த மென்றனர் சிலரானாலிங்
காறடி நிலமுஞ் சொந்த மாகுமோ? ஆகாதிங்கே
ஆரிட மறிவுண்டென்றா லவன்றொழிற் திறனைக்கொண்டு
கூறுவ னவனோர்மேதை குறிப்பது வுலகநோக்கு
ஊரினி லறிஞர்யாரென் றுணர்ந்திட லவனின்பேச்சில்
ஆரையும் மதிக்குந்தன்மை யெவனிடமுளவோ அன்னான்
சீரிய அன்பும் பண்பும் சிறந்தநற் குணமுமுள்ளான்
பேரறிவுடையோனாகப் போற்றுமு ரவனையன்றோ!

செய்தொழிற் திறனைக்கொண்டு சிறந்தவ னென்றுகூறும்
வையக மிதுதானானால் வாழ்விலா ரறிஞரென்றால்
ஐய நானுரைத்தல் கேளு மவன்குணம் புகழப் போற்ற
மெய்யுரைத் தினிதுபேசி மேன்மையுற் றவன்நல்லோனே.

துன்புறுத் தாதோன்தூய சுத்தநல் மனத்தோனெம்மேல்
அன்புவைத் திருப்போன்நல்ல அறிவுரை வழங்கு மன்பன்
தன்பயன் கருதாச்சேவை தான்செய்ப் புகுவா னுண்டேல்
அன்பர்கட் கிடையிலன்னோன் அறிஞனென் றுரைக்கலாமே.

*~திரு ஆ. விநாயகமூர்த்தி~*

*சரியான வாய்ப்பு வந்தால் தெளிவாக சிந்தித்து செயலாற்றுங்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமூலர் தவமொழி

-திரு ஆ.தா.இ. ஜெயபாலன் அவர்கள்-

(தொடர்ச்சி...

நம்முடைய முயற்சி எத்தனை பெரிதாயினும் எம் பெருமானுடைய அருள் ஒன்றே எமக்கு எல்லா நலன்களும் தரவல்லது என்பதைப் பாடுகிறார் மூலர்

பிரான் அருள் உண்டு எனில் உண்டு நற் செல்வம்

(நற் செல்வம்- தீதற்ற முறையில் வரும் செல்வம்)

பிரான் அருள் உண்டு எனில் உண்டு நன் ஞானம்

எம் பெருமான் அருள் கிட்டுமானால் பிழை நீங்கிய ஞானம் உண்டாகும்.

பிரான் அருளிற் பெருந் தன்மையும் உண்டு

எம் பெருமானுடைய அருள் ஏற்படுமானால், நம்முடைய பண்புகள் உயர்தன்மை அடையும். அதன் பயனாக

பிரான்அரு ளில்பெருந் தெய்வமு மாமே.

மனிதனுக்கு தெய்வநிலை சித்தித்துவிடும். மனிதப் பண்புகள் உயர்ந்து பூரணமான தெய்வநிலையை அடைவோம். எம் பெருமானே குருவாகவும் வருவதாகக் கொண்டு, குருவின் அருளை தெய்வத் திருவருளாகக் கொள்ளவேண்டும் என்பது மூலரின் கருத்தாகும்.

பிரான் அருள் உண்டெனில் உண்டுநற் செல்வம்<br>
பிரான் அருள் உண்டெனில் உண்டுநன் ஞானம்<br>
பிரான் அருளிற் பெருந் தன்மையும் உண்டு<br>
பிரான் அருளில் பெருந் தெய்வமு மாமே.

இத்தகைய அருளாற்றல் நமக்குக் கிடைக்கும்படி செய்கின்ற ஒரு குரு வாய்ப்பதும் தெய்வத் திருவருளினால்தான். அந்த திருவருள் கிடைக்காத மனிதர்களின் நிலை என்ன என்பதைப் பாடுகிறார் தவமுனி.

அஞ்ஞானத்தை நீக்கி தெய்வ ஒளியைக் காட்டுகின்ற குருமார்களை சென்றடையாமல், அறிவிலிகளைச் சார்ந்து நின்று மனிதர்கள் தங்கள் வாழ்நாளை வீணாக்கி துன்பத்தில் வீழ்கிறார்கள் என்று அனுதாபத்தோடு பாடுகிறார் திருமூலர்.

குருட்டினை நீக்கும் குருவினைக் கொள்ளார்

(குருடு- அகக் கண் இல்லாமை. அதாவது அஞ்ஞானம், குருட்டினை- அஞ்ஞானத்தை) அறியாமையை நீக்கியருள்கின்ற ஆசாரியரை மக்கள் நாடுகிறார்களில்லை.

குருட்டினை நீக்கும் குருவினைக் கொள்ளார்<br>
குருட்டினை நீக்காக் குருவினைக் கொள்வர்

அஞ்ஞான இருளைக் களைந்து ஒளியைக் காட்டுகின்ற குருவினை கொள்ளாமல் அறியாமையை நீக்கத் தெரியாதவர்களை அடைந்து துன்பமடைகிறார்கள் என்று வருந்துகிறார் தவமுனி. இனி இவர்களின் நிலை எப்படியிருக்கிறதென்று ஓர் உவமையின் மூலம் விளக்கிச் சொல்கிறார்.

*அறிவினால் அடையும் புகழ் ஒருபோதும் அழிவதில்லை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருடும் குருடும் குருட்டாட்டம் ஆடிக்

(குருடும் குருடும் - ஒரு குருடன் இன்னொரு குருடனை வழிகாட்டியாகக் கொண்டு குருட்டாட்டம் ஆடி- பாதையில் தடுமாறிச் சென்று)

குருடுங் குருடுங் குழிவிழு மாறே

(குழிவிழுமாறே- குழியில் விழவேண்டியது கான். அதுபோலவே மக்களும் உண்மை உபதேசிகளை பெறாமல் அழிகிறார்கள்.

குருட்டினை நீக்கும் குருவினைக் கொள்ளார்
குருட்டினை நீக்காக் குருவினைக் கொள்வர்
குருடும் குருடும் குருட்டாட்டம் ஆடிக்
குருடுங் குருடுங் குழிவிழு மாறே.

நடராஜப் பெருமான் தன்னை ஆட்கொண்ட தன்மைபற்றி பாடுகிறார் திருமூலர்

அடங்காத என்னை அடக்கி அடி வைத்து

(அடங்காத என்னை அடக்கி- உள்ளத்தின் வேட்கைகளும் ஐம்புலன்களின் சேட்டைகளும் அடங்காமல் அலைகின்ற என்னை அடங்கி நிற்குமாறு செய்து, அடிவைத்து- குருவாக எழுந்தருளித் தனது திருவடியை என் தலையிலே வைத்து ஆட்கொண்டு)

இடம்காண் பிரானந்தத்தே விட்டு

(இடம்காண்- எங்கே ஆட்கொள்ளலாம் என்று எப்போதும் மனித உள்ளத்திலே இடம்தேடிக் கொண்டே நிற்கும் பிரானந்தத்தே- இறைவனுடைய பரவசப் பேரின்பத்திலே என்னை இட்டு- என்னை திளைக்க வைத்து)

நடந்தான் செயும் நந்திநன் ஞானக் கூத்தன்

(நடம்தான் செய்யும்- நடனமாடுகின்ற நந்தி ஞானக் கூத்தன்- நந்தி பெருமானாகிய ஞான நடராஜப் பெருமான் பரிபூரண ஞானத்தை நடன உருவில் காட்டும் மூர்த்தி)

படந்தான் செய்து, உள்ளுள் படிந்திருந் தானே.

(படம் தான் செய்து- சித்திரம் போலச் சித்தமானது அசைவற்று நிற்கும் வண்ணம், நிஷ்டை சித்திக்கும்படி செய்து உள்ளுட் படிந்திருந்தானே- என் உள்ளத்திலே வந்து அமர்ந்திருந்தான்)

புலன்கள் அடங்கும் வண்ணம் என் சிரசின்மேல் திருவடியை வைத்து ஆடி அருளினான். அதாவது ஆசைகள் எல்லாம் அடங்கும்படியாக தனது கருணையை ஐம்புலன்களிலும் வியாபிக்கச் செய்து அவற்றிலே நின்று பேரின்ப நடனம் புரிந்து உள்ளக்கோயிலிலே நிறைந்தமர்ந்தான்.

அடங்காத என்னை அடக்கி அடிவைத்து,
இடம்காண் பரானந்தத்தே விட்டு,
நடந்தான் செயும் நந்திநன் ஞானக் கூத்தன்
படந்தான் செய்து உள்ளுள் படிந்திருந் தானே.

மேலும் பாடுகிறார் தவமுனி. தான் இறைவனுக்கு ஆட்பட்ட அனுபவத்தை

கரி அட்ட கையன், கபாலம்கை ஏந்தி
எரியும் இளம்பிறை

*பகிர்ந்த துன்பம் பாதியாகிறது. பகிர்ந்த இன்பம் இரட்டிப்பாகிறது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(கரி- யானை அட்ட வீழ்த்திய கரியட்ட கையன்- யானைத் தோலை உரித்த கைகளையுடைய சிவபெருமான் கபாலம் கையேந்தி- மண்டையோட்டை கையில் தாங்கியவன், ஏந்தி- ஏந்தியவன், எரியும் இளம்பிறை- சுடர் விடுகின்ற இளம் பிறைச் சந்திரனை சூடும் எம்மானை- தலையிலே எம்பெருமான்.

எரியும் இளம்பிறை சூடும் எம்மானை
அரியன், பெரியன் என்று ஆட்பட்டது அல்லால்,
கரியன் கொல் சேயன் கொல் காண்கின்றி லேனே.

(அரியன் பெரியன் என்று- அருமையானவன் பெருமை நிரம்பியவன் என்று ஆட்பட்டதல்லால்- அவனுக்கு அடிமைப்பட்டேனே அல்லாமல் கரியன் கொல்- அவன் கரிய நிறத்தவனோ சேயன் கொல்- சிவப்பானவனோ காண்கின்றிலேனே- நான் கண்டதில்லை.)

மதம்கொண்ட யானையை வதைத்து தோல் உரித்தவன். அதாவது ஆசைகளை முற்றும் சிதைத்தவன். மண்டையோடு கையில் ஏந்தியவன். அதாவது தாழ்ந்த நிலைக்குள் மிகுந்த தாழ்ந்த நிலையைத் தனக்கு என்று எடுத்துக்கொண்டு கருணை காட்டுகின்றவன். இளம்பிறை சூடியவனாகிய எம் பெருமானை, அரியன் என்றும் பெரியவன் என்றும் உள்ளத்தில் பற்றிக்கொண்டதேயல்லாமல், அவன் கறுப்பா, சிவப்பா எனக் கண்டதில்லை. இறைவன் நிறமும் வடிவமும் கடந்தவன் என்பதையும் காட்சிப்பொருளாக நிற்காமல் உள்ளத்தின் உணர்வு நிலையிலே பற்றி நிற்பவன் என்பதையும் இங்ஙனம் பாடுகிறார். வழிபடுபவர்கள் சிவபெருமானுக்கு ஒரு நிறம் தருகிறார்கள். இதையெல்லாம் கடந்து நிறமும் வடிவமும் ஒழித்த பரிபூரண வழிபாட்டில் உள்ளத்தை நிறுத்தி எம்பெருமானை நினைவு ஒழித்த பரவசத்தில் அனுபவித்து பாடுகிறார் திருமூலர். முற்றநுபவத்திற்கு இவ்விதப் பரவசம் ஓர் அங்கமாகும்.

கரிஅட்ட கையன், கபாலம் கை ஏந்தி
எரியும் இளம்பிறை சூடும் எம்மானை
அரியன் பெரியன் என்று ஆட்பட்டது அல்லால்
கரியன் கொல் சேயன் கொல் காண்கின்றி லேனே.

(தொடரும்...

**சொந்த மென்றென்னுடன் கூட வாழ்பவன் முருகன்**

தந்ததும் அவனே தருவதும் அவனே பிள்ளையாய்ச்
சொந்த மென்றென்னுடன் கூட வாழ்பவனே - முருகன்
வந்த நோயறுப்பான் வல்வினை துலைப்பான்
செந்தமிழ் உரைத்தால் செவியாரக் கேட்பான்
கந்தன் புகழ் ஓதி கவசம் ஆறு கூறி
கந்தரலங் காரமொடு கந்தர் அநுபூதி பாடி
எங்கள் துயர்மாய ஏற்றிடுவோம் தீபம்
எம்மை நன்கு அறிவான் அவன்பாதம் தொழுவோம்.

-சின்னப்பு தனபாலசிங்கம்-

*ஆர்வமில்லாதவன் பெரிய காரியங்களைச் சாதிக்கமுடியாது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவனம் சிதையா நெஞ்சுகொள்

– திரு சி. நற்குணலிங்கம் அவர்கள் –

கவனம் என்பது ஒரு தகவல் அல்லது கூறின் தனித்த பகுதியின் மீதான தெரிந்து எடுக்கப்பட்ட நடத்தை மற்றும் அறிதிறன் சார்ந்த செறிவு நிறைந்த ஒரு செயல் முறையாகும். இது அகவயத்தன்மை அல்லது புறவயத்தன்மை உடையதாகவும் கவனம் செலுத்தக்கூடிய பொருளைத் தவிர சுற்றியுள்ள தெரிந்துகொள்ளக்கூடிய பொருட்கள் அல்லது கூறுகளைப் புறக்கணித்து கவனம் செலுத்தக்கூடிய பொருளின்மீது மட்டும் அதிகமான சிந்தனையைக் கொண்டிருக்கலாம். இது ஒரே சமயத்தில் தோன்றும் பலவிதமான பொருட்கள் அல்லது தொடர் எண்ணங்களில் ஒன்றைமட்டும் தெளிவான மற்றும் விளக்கமான வடிவத்தை மனம் எடுத்துக் கொள்வதாகும்.

எந்த ஒரு செயலிலும் ஆரம்ப நிலையில் கவனம் என்பதை தொடர்ந்து நீடிக்கச் செய்ய எவராலும் இயலாது. நாளாக நாளாக பழக்கத்தினாலும் விருப்பத்தினாலும்தான் கவனத்தின் வீச்சை அதிகப்படுத்த இயலும். நல்ல விடயங்களைவிட தீயவற்றில்தான் கவனம் சிதறுவது அதிகமாக இருக்கும். நாம் எப்படி கவனித்தாலும் பொதுவாக பதினொரு நிமிடங் களுக்கு ஒரு தடவை எமது கவனம் கலைக்கப்படுகிறது. கவனச் சிதறல் இல்லாமல் இருக்க உலகம் விடாது. சிலர் சம்பந்தம் இல்லாமல் பேசிக் கவனத்தை சிதற வைப்பர். கவனத்தில் சிதறல் இல்லாதவனுக்கு இவ் உலகில் முடியாது என்று எதுவும் இல்லை.

கவனச்சிதறல் எதில் ஏற்பட்டாலும் பாதிப்புத்தான். கோபத்தில் கவனம் சிதறி வார்த்தை களை சிதறவிடுவோர் பலர். புயலும் கோபமும் ஒன்றுதான். வீசும்போதும் பேசும்போதும் பாதிப்பு தெரியாது. அடங்கிய பிறகுதான் தெரியும் அடைந்த சேதம் என்னவென்று. சில வார்த்தைகள் வாழ்க்கையையே கொல்லும். கவனம் சிதறும் தருணங்கள் யாவும் சோகமே. உழைக்கும்போது கூட கடினமாக உழைப்பதைவிட கவனமாக உழைப்பதே மேல். இது மட்டுமல்ல வீதி விபத்துக்கள்கூட ஓட்டுனர்கள் மற்றும் சாலையை பயன்படுத்துபவர்களின் கவனம் இன்மையால் ஏற்படுகின்றன.

பிள்ளைகள்மீது கவனம் செலுத்தத் தவறின் பிள்ளைக்குக் கொண்டாட்டம். ஆனால் பின்னால் பெற்றோர்க்குத் திண்டாட்டம். "எமது வாழ்வின் நிரந்தர அர்த்தம் எமது அன்றாட வேலைகளில் எமக்குக் கிடைக்கும் வெற்றிகளில் மட்டுமல்ல அது எமது குழந்தைகளில் நாம் உருவாக்கும் நற்பண்புகளில் தங்கியுள்ளது." இது குஷ்னரெனும் சமூகவியலாளர் கருத்து. கவனம் சிதறின் காரியம் பதறும், நிதானம் தவறும், நிதானம் தவறின் நிம்மதி தவறும். கவனச் சிதறல் உள்ளவர்க்கு நினைவு வீச்சும் குறையும். எனவே கவனம் சிதையா நெஞ்சுகொள். நல்லவனாய் இருந்தாலும் கவனத்தில் கவனமாகத்தான் இருக்கவேண்டும். "இதயம் சொல்வதைச் செய். வெற்றியோ தோல்வியோ அதைத் தாங்கும் சக்தி அதற்கு மட்டும்தான் உண்டு" விவேகானந்தர் கூற்று எக் கவனம் இல்லாவிட்டாலும் சொற் கவனம்

*ஒரு அறிவாளி தனக்குள்ளே எல்லாவற்றையும் எதிர்பார்க்கிறான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கியம். சண்டை சச்சரவுகளின்போது கவனம் சிதறின் வார்த்தை சிதறும். நீங்கள் பேசும் தகாத வார்த்தைகள் உங்களை வீழ்த்தும். பலத்தைக் குறைக்கும். மூழ்கியவனுக்குத்தான் தெரியும் மூச்சுவிட முடியாத நிலை.

தவறாகுமோ என்று நேரத்தை இழக்காதே! முடியாது என்று ஒருபோதும் கூறாதே! முயற்சிப் பாதையை என்றும் மாற்றாதே! களைப்பாறலாம் என்று கவனம் சிதறாதே. கல்வியில் கவனம் வேண்டும். குழந்தைகளின் கவனக் குறைவுப் பிரச்சினை பெரும்பாலும் பெற்றோர் களினால் எதிர்கொள்ளப்படுகிறது. கல்வி நடைமுறைகள் ஆசிரியர்கள், மருத்துவர்கள் மற்றும் ஊடகவியலாளர்களுடன் நெருங்கிய தொடர்பில் இருப்பதனால் கவனக்குறைவுக் குறைபாடுகள் குழந்தைகளுக்கு சிறப்பான சிக்கலற்ற திருத்தம் மற்றும் வளர்ச்சிப் பணிகள் தேவைப்படுகின்றன. கவனத்தின் குறைக்கப்பட்ட செயற்பாடு உடலின் பொதுவான பலவீனம் காரணமாக இருக்கலாம். அத்தகைய குழந்தைகளுக்கு விதிமுறைகளை கட்டாயமாகக் கடைப்பிடிக்க வேண்டும். குழந்தைகளின் ஓய்வு அதுவும் பகல் தூக்கம் இந்த நிலைமைகளின் கீழ் உடல் மற்றும் உடலியல் வரம்புகளின் தாக்கத்தைக் குறைக்கிறது. அத்தகைய குழந்தைகள் ஒரு நல்ல கவனத்தை பெறமுடியும். கவனத்தை வளர்ப்பதற்கான பணிகளை குழந்தைகளுக்கு விளையாட் டுக்கள், போட்டிகள் மூலம் வழங்கலாம்.

இலக்கை அடைய கவனம் சிதறாதே! கவனத்தில் கர்வம்கொள். தான் செய்யும் வேலையை தளராது செய்ய, நெருக்கடிபற்றி கொஞ்சம்கூட சிந்திக்காது நடக்க, குறுக்கீடுகள் வந்தாலும் எந்த எதிர் வினையையும் காட்டாமல் நடந்துகொள்ள, யார் உன்னை பல கோணங்களில் எரிச்சல் ஊட்டினாலும் ஆழமாகச் செயல் தொடர, உன் இலக்கை நோக்கி நகரும்போது வழியில் நிறைய சிறு சிறு விஷயங்கள் கண் சிமிட்டும். அப்போதும் அதிக கவனம் சிதறாதே. உன் இலக்கில் தெளிவாக இரு. அதை நோக்கி வேகமாக பயணம் செய்யக் கற்றுக்கொள். துணிச்சலான முயற்சியில் கவனம் சிதறாது நடந்துகொண்டால் அது முன்னேற்றத்தை உந்தித் தள்ளும்.

உலகம் தோன்றிய காலம்தொட்டு வானத்தை அண்ணாந்து பார்த்த மனிதன் விண்கலம் ஏறி பூமியை வலம் வந்தான் என்றால் அந்த முயற்சியில் அடங்கி இருப்பது அறிவாற்றல் மட்டுமல்ல துணிச்சலில் அவன் செலுத்திய கவனம்தான். 1969 யூலை 16 அன்று காலடி எடுத்துவைக்கவேண்டிய எட்வின் அல்றினது கவனம் சிதறியதால் அமெரிக்க வீரர் நீல் ஆம்ஸ்ரோங் நிலவில் முதன் முதலில் காலடி எடுத்துவைத்தார். ஒரு மனிதரைப் பொறுத்தமட்டில் இது ஒரு சிறிய காலடிதான். ஆனால் மனித குலத்துக்கு மிகப்பெரிய பாய்ச்சல், வேக முன்னேற்றமாகும். முன்னேற்றம் காண விரும்பும் ஒருவர் உடல் நலத்தில் கவனம் செலுத்த வேண்டும். இதில் கவன சிதறல் ஏற்படின் நல்ல எண்ணங்கள் மலரும் சோலையாக மனதை வைத்துக்கொள்ள முடியாது. “எண்ணம் எப்படியோ அப்படியே மனிதன்” என்பது காந்தியடிகள் கூற்று. ஆரோக்கியமான உடலும் உள்ளமும் மனிதர் முன்னேற்றப் பாதையில் உற்சாகமாகச் செல்ல அவசியமாகிறது. ஆரோக்கியமான உடலில் ஆரோக்கியமான உள்ளம் அமைய வேண்டும்.

*தூய்மை, பொறுமை, விடாமுயற்சி இவையே வெற்றிக்கு அடிப்படை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன உறுதியில் கவனம் வேண்டும். மன உறுதி இல்லாதவர் எடுத்த காரியத்தை முடிக்காமல் திணறுவர். கனவு காண். காரியம் சிறக்கும். கனவு காணவேண்டும் என்றார் அப்துல்கலாம். காலவரையறையும் செயல் திட்டமும்கொண்ட கனவுகளை குறிக்கோள்கள் என்றும் கூறலாம். குறிக்கோள் சாதாரண விருப்பமல்ல, அது தீவிரமான உணர்ச்சி. அந்த தீவிர உணர்ச்சியில் சிதறாத கவனம் செலுத்தின் கனவுகளை நனவாக்கலாம். கவனத்தை சிதறடிப்பவர்கள் ஒரு திருப்தியான வாழ்வை வாழ்வது கடினம். நடக்கவே சோம்பல்படும் ஒருவர்க்கு ஓட்டப்பந்தயக் கனவு நிறைவேறுமா? எந்த விடயமாயினும் துணிவில் கவனம் வேண்டும் துணிவு இல்லாதவர்க்கு அறிவும் துணைக்கு வராது. கவனம் சிதறுபவர்கள் எந்த ஒரு முடிவையும் சரியாக எடுக்கமாட்டார்கள். அவர்களது சிந்தனையும் எதிர்மறைக்குத்தான் முக்கியத்துவம் கொடுக்கும். நமது சிந்தனை ஆக்கபூர்வமானதாய் இருக்கவேண்டும். அதுதான் நேர்மறை சிந்தனை. நல்லதே நடக்கும் என்று நம்பிக்கை உடையவர்கள் நேர்மறை சிந்தனை யாளர்கள். இது நடக்காது என நினைப்பவர்கள் எதிர்மறையாக சிந்திப்பவர்களாகும்.

மரத்தின் உச்சியில் ஒரு பொம்மைக் கிளியைத் தொங்கவிட்டு அதன் கண்களைக் குறி வைத்து அம்பு எய்யச் சொன்னார் துரோணர். பின் இப்போது நீங்கள் என்ன பார்க்கிறீர்கள்? என பாண்டவர்களையும், கௌரவர்களையும் கேட்டார். இலை, மரம், கிளை, காய், பறவை, வானம் என ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாய் கூறியபோது அர்ச்சுனன் மட்டும்தான் நான் ஒரு பறவையின் கண்களைப் பார்க்கிறேன் என்று கூறினான். பதில் அளித்த அனைவருக்குமே வில்வித்தையை கற்றுக்கொள்ள வேண்டும் என்ற விருப்பம் இருந்தது. ஆனால் அர்ச்சுனனுக்கு மட்டுமே ஒரு சிறந்த வில்லாளியாக வேண்டும் என்ற விருப்பம் மட்டுமல்லாமல் அந்த விருப்பம் நிறைவேறுவதற்குரிய கவனச் செறிவும் இருந்தது. உண்மையில் கவனம் செலுத்துதல் என்பது குழந்தைமுதல் பெரியோர் வரை அனைவருக்கும் மிக தேவையான ஒரு வாழ்க்கைத் திறனாகும். கவனத்தின் வீச்சைப் பொறுத்தே ஒருவரின் வெற்றி நிர்ணயிக்கப்படுகிறது. கவனச் சிதறல் உள்ள மாணவர்களைப் பொறுத்தமட்டில் அவர்கள் கற்றலில் பின்நிற்கிறார்கள், இடைவிலகலில் முன்நிற்கிறார்கள்.

கவனம் இன்மைக்கு முக்கிய காரணம் கவனச்சிதறலாகும். தசாவதானிகள், சதாவ தானிகள் என்ற எண்ண வரிசையில் இன்று நம் சமுதாயத்திலும், கலாசாரத்திலும் ஒரேநேரத்தில் பல பணிகளைச் செய்யக்கூடிய அல்லது ஒரே நேரத்தில் பல விஷயங்களில் கவனத்தைச் செலுத்துகின்ற தன்மை அதிகரித்துள்ளது. இவை பாதகமான விளைவுகளையே ஏற்படுத்து கின்றன. குடும்பச் சூழலிலும் அலுவலகச் சூழலிலும் மற்றும் பல்வேறு அமைப்புச் சூழல்களிலும் அவ்வாறு ஒரே நேரத்தில் பல செயல்களைச் செய்ய முடியாதவர்கள், முயற்சிக்காதவர்கள் மற்றவர்களால் ஏற்படுத்தப்படும் அழுத்தத்தால் பல்வேறு பிரச்சினைகளுக்கு ஆளாகின்றனர். ஒரு செயலைச் செய்யும்போது ஒன்றுக்கு மேற்பட்ட மற்றச் செயல்கள் பற்றிய சிந்தனைகள் பின் மனதில், உள் மனதில் ஓடிக்கொண்டிருப்பதால் நாம் செய்துகொண்டிருக்கும் செயலில் முழுக்கவனம் செலுத்த முடியாமல் போவதோடு மட்டுமல்லாமல் மற்றச் சிந்தனைகளால் கவனம் சிதறி ஒரு வேலையைக்கூட உருப்படியாகச் செய்யமுடியாமல் போகிறது.

*பசி, உழைப்பு, வியர்வை இவை மூன்றும் பிணியைப் போக்கும் மருந்துகள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவனம் சிதறுவதால் முழுமையான செயற்பாட்டையும், முற்றுப்பெறாத செயல் வடிவத்தையும் கொடுக்குமென்று நிருபணமாகியுள்ளது. ஏனெனில் நமது மூளை, மனம் இரண்டும் ஒரு நேரத்தில் ஒரு வேலை செய்வதற்கு மட்டும்தான் பயிற்சி பெற்றுள்ளது. பல வேலைகளை ஒரு நேரத்தில் செய்வது என்பது கேட்பதற்கு ஒரு அசாத்திய திறமை என்று தோன்றினாலும் அது ஒரு சிறந்த செயல் வகை இல்லை என்பது ஆராய்ச்சிகளின் மூலம் நிருபிக்கப்பட்டுள்ளது. ஒரு நேரத்தில் ஒரு செயலில் கவனம் செலுத்துவதும் ஒரு எண்ணத்தை எண்ணுவதும் மனிதருக்கு மனவளத்தைக் காப்பது மட்டுமல்லாமல், விபத்தில்லா வாழ்க்கையையும் கொடுக்கும் என்பதில் ஐயமில்லை. எனவே கவனம் சிதையா நெஞ்சுகொள். அது உம்மை சிறப்புற வாழ வைக்கும்.

## விடியாத பூமிக்கு விளக்கேற்ற வாராய்

பஞ்சமா பாதகங்கள் தலைவிரித்தாடுகின்ற
பாவப்பட்ட நாடுதான் நம்நாடு - அதள
பாதாளத்தில் இலங்கை வீழ்ந்து கிடக்கின்ற
அவலநிலையை எண்ணி உலகமே அஞ்சுகிறது!

வஞ்சகம் வக்கிரம் வாள்வெட்டு விலைவாசியோ
வாழ்வையே துவம்சமாக்கி விட்டதே!
வானளாவக் கட்டிடங்களோ அமளியாக நடக்கிறது
வயிறு அழுகிறது, வயலின் கச்சேரியும் நடக்கிறது,

அஞ்சுமாறு அத்தனை ஊழல்களும் நடக்கிறது
அழுகின்ற குழந்தைகளை யாரும் கவனிப்பதில்லை
ஆள்கின்ற வர்க்கமோ சுவர்க்கத்தின் வாசலில்!
ஆண்டவனும் அபிசேகப் பிரியனாகிவிட்டானோ?

விஞ்சுமாறு புகழேந்திகளின் கொண்டாட்டங்களோ
விண்ணைத் தொட்டு மண்ணிலே விழுகின்றது
விடியாத பூமிக்கு விளக்கேற்ற வாராயோ
வேண்டத்தக்கது அறிந்து வாராய் தைமகளே!

-கே.எஸ். சிவஞானராஜா-

*முதுமையின் சுருக்கம் முகத்தில். முயலாமையின் சுருக்கம் அகத்தில்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தொடர்ச்சி....

# ஆனந்த சாகரம்

– திருமதி சிவனேஸ்வரி பாலகிருஸ்ணன் அவர்கள் –

## நவராத்திரி

சிவனுக்கு உகந்தது சிவராத்திரி. தேவிக்கு உகந்தது நவராத்திரி. சிவபெருமானுக்குரிய விரதங்களிலே மாசி மாதத்திலே அனுஷ்டிக்கப்படும் மகா சிவராத்திரி விரதம் சிறந்த விரதம். அதேபோன்று அம்பிகைக்குரிய விரதங்களிலே ஒன்பது நாட்கள் அனுஷ்டிக்கப்படும் நவராத்திரி விரதம் புரட்டாதி மாதத்தைப் புனிதப்படுத்தும் பொன்னான திருவிழா.

நவராத்திரி ஒன்பது நாட்களும், வன்னி வாழை வெட்டுதல் பத்தாவது நாளும் நடைபெறும். ஆன்ம இருளை விலக்கும் ஒன்பது இரவுகள் நவராத்திரி. ஆன்மாவின் இருளகல சக்தி வழிபாடு அவசியம். ஒளிபொருந்திய அம்பிகையின் ஞானப் பார்வை நம்மேல் பட இருள் அகலும். மகிஷாசுரனுடன் ஒன்பது நாட்கள் யுத்தம் செய்து வெற்றிகண்ட பத்தாம் நாள் விஜயதசமி. அசுரனை அழித்த சக்திக்கு ஆண்டுதோறும் நன்றி தெரிவிக்கவும், நோயின்மை, வலிமை, துன்பமில்லாத வாழ்க்கை, சௌபாக்கியம், செல்வம், ஞானம், கல்வி, ஆற்றல், நீண்ட ஆயுள் இவற்றையெல்லாம் பெறவேண்டி விரதமிருந்து ஒன்பது நாட்கள் நவராத்திரி விழாவினைக் கொண்டாடுகிறோம். அம்பிகையின் பராக்கிரமம் ஒன்பது ராத்திரிகளில் வெளிப்பட்டதால் நவராத்திரி எனப்படும். நவராத்திரிப் பெரு விழா ஆலயங்கள், வீடுகள், பாடசாலைகள் மற்றும் வேலை பார்க்கும் இடங்களில் எல்லாம் பக்தியோடு கொண்டாடப்படும். பராசக்தியான துர்க்கா பரமேஸ்வரியையும், மகாலட்சுமியையும், சரஸ்வதி தேவியையும் பூஜிக்கிறோம். முதல் மூன்று நாட்கள் துர்க்கையையும், அடுத்த மூன்று நாட்கள் லட்சுமியையும், அடுத்த மூன்று நாட்கள் சரஸ்வதியையும் பூசை செய்து வழிபட்டு, பத்தாம் நாள் வன்னி வாழை வெட்டுதல் நடைபெறும். அம்பாளுக்குப் பல பெயர்கள் இருந்தாலும் துர்க்கா என்ற பெயரே மிகச் சிறந்ததாக வேதங்கள் கூறுகின்றன. மூன்று மூர்த்திகளானாலும், முப்பத்து





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கோடி தேவர்களானாலும் அத்தனையும் பராசக்திதான். லலிதா சகஸ்ரநாமத்தில் அவள்தான் சிருஷ்டி செய்பவள். அவள்தான் அரசாட்சி செய்பவள். அவள்தான் படைத்தல், காத்தல், அழித்தல் முத்தொழில்களையும் செய்பவள்.

அஞ்ஞானத்தின் பல வடிவங்கள் நம்மைச் சுற்றியுள்ள அரக்கர்கள். அஞ்ஞான இருட்டினை விலக்கும் ஞானாம்பிகையை நவராத்திரியில் பூஜிக்கிறோம். மதுகைபட வதத்தை மாகாளியும், மகிஷாசுரமர்த்தனத்தை மகாலட்சுமியும், சும்ப நிசும்ப சம்ஹாரத்தை மகா சரஸ்வதியும் செய்து முடித்தனர். ஒவ்வொருவரும் மூன்று இரவுகளாக மொத்தம் ஒன்பது நாட்கள். பத்தாவது நாள் வெற்றித் திருவிழா விஜயதசமி. அன்று ஆயுதபூஜை, வன்னிவாழை வெட்டுதல், பிள்ளைகளுக்கு ஏடு தொடக்குதல் முதலிய நற்கருமங்கள் நடைபெறும். தேவிபாகவதத்தை நவராத்திரி நாட்களில் படிப்பது பெரும் புண்ணியமாகும். அதனைச் செவிமடுப்பதனால் வரும் பலனை அம்பாளே அருளுகின்றாள்.

ஆம், அவள் லோகமாதா. அவள் முன் நாமனைவரும் குழந்தைகள். நமக்குப் பெரும் நன்மைகளைத் தரும் கருணை உள்ளம் அவளுக்கு. தவறு செய்யும் பிள்ளைகளை மன்னித்து திருத்தி அன்பு காட்டும் தாயல்லவா!

பண்டாசுர யுத்தத்தில் அசுரர் படையை நிர்மூலமாக்கினார் விநாயகர். "பில்லி, சூனியம், ஏவல், மந்திரத்தகடு இவற்றால் துன்பப்படுபவர்கள் உன்னை வழிபட்டால் அவைகளிலிருந்து விடுபடுவார்கள். இன்று முதல் எல்லாப் பூஜைகளிலும் முதல் ஆராதனை உனக்கே" என்று அன்னை அருளினார். விக்ன யந்திரத்தை அழித்ததால் விக்னேஸ்வரர் எனப் பெயர் பெற்றார். கொலுப்படியிலும் முதலில் விநாயகரைத்தான் வைக்கவேண்டும். நவராத்திரியில் லலிதா சகஸ்ரநாமம், தேவிபாகவதம், சௌந்தர்யலகரி, அபிராமி அந்தாதி இவற்றைப் படித்து அம்மன் அருள்பெற வேண்டும். ஸ்ரீ ராமபிரான் நவராத்திரியில் விரதமிருந்து இராவணனை வெற்றிகொண்டார்.

அசுரர்கள், தேவர்களோடு கோபம் கொண்டு தேவர்களோடு போரிட்டனர். அசுரர்கள் மடிந்து போயினர். தேவர்கள் அமுதம் உண்டதால் இறக்கவில்லை. பின்னர் அவர்கள் சிவன், பிரம்மா, விஷ்ணுவிடம் தவம்செய்து வேண்டிய வரங்களைப் பெற்றனர். பின்பு தேவர்களைத் துன்புறுத்தினர். அவர்கள் வேண்டிய வரங்கள் மிகவும் விசித்திரமானவை. மானிடன் என்றால் துச்சம். ஒரு மானிடனாவது என்னைக் கொல்வதாவது என்று மானிடனைத் தவிர வேறு எவராலும் எனக்கு மரணம் வரக்கூடாதென ஒரு அரக்கன் கேட்டான். பூமியிலோ, விண்வெளியிலோ, வீட்டின் உள்ளேயோ, வெளியேயோ, காலையிலோ, மாலையிலோ, மனிதனாலோ, மிருகத்தாலோ மரணம் சம்பவிக்கக் கூடாதென்று ஒரு அரக்கன் வரம் கேட்டான். சிறு பெண் குழந்தை தவிர பிற எந்த ஜீவராசியும் என்னைக் கொல்லக்கூடாதென ஒருவன் கேட்டான். பெண்சக்தி ஒன்றின் பாதம் தவிர வேறு எதனாலும் மரணம் வரக்கூடாதென்று வரம் கேட்டான் எருமை முகமும் அரக்க உடலும் கொண்ட மஹிசாசுரன் என்ற அரக்கன். அவனை வதைக்கவேண்டி அண்டசராசரங்களுக்கும், முப்பத்து முக்கோடி தேவர்களுக்கும் அதிபதியான ஆதிபராசக்தியே பூமியில் தோன்றி அவனை வதைத்து பிரளய காலாக்கினிபோல்

*ஒரு மனிதனின் பத்து விரல்களே அவனது சிறந்த நண்பர்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊர்த்வதாண்டவம் செய்தாள். தேவர்கள், மூவர்கள் யாவரும் அவளைச் சமாதானப்படுத்தப் பலவகையாக துதிகள் செய்தனர்.

ஆசைகளை நிறைவேற்றும் அம்பிகை வழிபடுவோர்க்கு கருணையுடன் செல்வம், வித்யை, அளவற்ற கீர்த்தி, நல்லபுத்திரன், மூவுலகிலும் மேன்மையாக இருக்கும் தன்மை ஆகியவற்றை சீக்கிரமே கொடுக்கும்தாய். அன்னையின் சரணாரவிந்தங்களுக்கு நமஸ்காரம்.

வைகுண்டத்தில் வீற்றிருக்கும் மகாலட்சுமி என் பார்வையிலும், நெற்றித் திலகத்திலும் வசிக்கவேண்டும். சகல செல்வங்களையும் அருளவேண்டும், விஷ்ணுப்பிரியே, செங்கமலத்தாயே சரணம்.

நல்லறிவைக் கொடுக்கும் சரஸ்வதி என் வாக்கிலிருந்து அருளவேண்டும். வீணையைக் கையில் தரித்தவளே, ஒளிமயமானவளே, அஞ்ஞான இருட்டை அழிக்கின்றவளே, முத்தியை அருளுபவளே, தாமரையில் வீற்றிருக்கும் மங்களாம்பிகையே, கலைவாணியே உன்னை நமஸ்காரம் செய்கின்றேன்.

அகிலாண்ட நாயகியாகிய அம்பிகையை நினைந்து நவராத்திரி வழிபாட்டை பக்தி சிரத்தையுடன் "தேவியே சரணாகதி" என வழிபட்டால் வெற்றி, செல்வம், கல்வி அளித்து வாழ்வை மேன்மையுறச் செய்து இறுதியில் தேவி மோட்சமும் அளிப்பாள். (தொடரும்...

---

## கண்டு தொழுவோம்!

### பல்லவி

உருகி உருகி உன்னைத் தொழுபவர்க்கு,
உளம் கனிந்தே அருள்வாய்! துயர் களைந்து! (உருகி)

### அனுபல்லவி

அருகினிலே வருவாய் அன்பு கொண்டு!
அன்பர்களின் அகங்களினை அனுதினமும் வென்று! (உருகி)

### சரணம்

செல்வச் சந்நிதியில் நீயும் வீற்றிருப்பாய்!
சிங்கார வேல்வனாய்க் காட்சியுமே கொடுப்பாய்!
தொல்லை தரும் வினைகள் தொலைந்திட வழி செய்வாய்!
தொண்டைமான் ஆற்றருகே தூயவனே! உறைந்திருப்பாய்! (உருகி)

வள்ளலாய் அருளை வாரி வழங்கிடுவாய்!
வண்ணத் தமிழ்த் தெய்வமாக எண்ணங்களில் நிறைவாய்!
கண்ணான உனை வாழ்த்திக் களித்திடுவோம்!
கருணை வடிவானவனே! கண்டே தொழுதிடுவோம்! (உருகி)

-கி. குலசேகரன்-

*பொறுப்புமிக்க ஒரு தந்தை நூறு ஆசானுக்குச் சமம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளம் பெரும் கோயில்

– *திருமதி வசந்தா விக்னேஸ்வரன்* அவர்கள் –

"உள்ளம் பெருங்கோயில்
ஊனுடம்பு ஆலயம்....."

ஆம்! மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரும் தாம் செய்யும் காரியங்கள் அல்லது கருமங்களுக்கு அவரவர் "உள்ளம்" காரணமாக அமைகிறது. அதனால் போலும் உள்ளத்தைப் பெரும் கோயில் என்று வர்ணிக்கிறார் திருமூலர்.

உள்ளம் அல்லது மனம் எதனை எண்ணுகிறதோ அது நல்லதோ கெட்டதோ அதையே செயற்படுத்த முனைகிறது.

"எண்ணித்துணிக கருமம்" என்ற சான்றோர் வாக்கை எடுத்துக்கொண்டால் இங்கே "கருமம்" என்பது "அறம்". ஆகவே அறத்தைச் செய்வதற்கு நமது உள்ளம் - மனம் முதலில் எண்ணவேண்டும், பின் துணிய வேண்டும். நாம் நினைத்த கருமத்தைச் செய்யும் துணிவு எம்மிடம் இருந்தால்த்தான் அந்தக் கருமத்தை நம்மால் செவ்வனே செய்து நிறைவேற்ற முடியும்.

"துணிவு" இல்லாதவன் ஒரு கருமத்தைச் செய்ய நினைத்தாலும் அவனால் செய்யமுடியாமல் போகிறது. ஆகவே துணிவு ஒரு மனிதனுக்கு கட்டாயம் இருக்கவேண்டிய ஒன்று. அது மாத்திரமன்றி ஒரு கருமத்தைச் செய்ய வேண்டும் - நிறைவேற்ற வேண்டும் என்கிற "விருப்பம்" இங்கே அவசியமாகின்றது.

"அறம் செய்ய விரும்பு" என்ற ஔவையார் வாக்கு இங்கே நினைவில் கொள்ளலாம். "அறம் செய்!" என்று கட்டளை இடாமல் "அறம் செய்ய விரும்பு" என்று ஔவையார் கூறுவதன் மூலம், ஒருவர் அறம் செய்ய விரும்பினால் அதுவே அந்தக் கருமத்தின் பாதி வேலை நிறைவுற்ற ஒரு நல்ல ஆரம்பமாக அமைகிறது.

நல்ல ஆரம்பம் எப்போது வருகின்றது என்றால் அந்தக் கருமத்தில் எமக்குள்ள விருப்பம் அல்லது ஈடுபாடு என்பவற்றைப் பொறுத்துள்ளது. ஆக எமது மனம் நல்லவற்றைச் செய்யும் எண்ணத்தை விருப்புடன் நினைவிலிருத்திக்கொள்ள வேண்டும்.

மகாகவி சுப்பிரமணிய பாரதியார் இதையே "நினைவு நல்லது வேண்டும்" என்கின்றார்.

"மனமுண்டானால் இடமுண்டு" என்ற கூற்று எதற்கும் மனம் விரும்பினால் மார்க்கம் உண்டு என்பதை உணர்த்துகிறது.

கொடைக்குக் கர்ணன் என்று புகழப்பட்ட கருணை வள்ளல் இறக்கும் தருவாயில் கூட தனது அறப்பணியைச் செவ்வனே செய்ததை நாம் மறந்துவிட முடியாது.

"மனம் போல் வாழ்வு" என்ற கூற்று வாழ்க்கை நல்லதாகவும் கெட்டதாகவும் அமைவதற்கு அவரவர் "மனம்" காரணம் என்பதை பறைசாற்றி நிற்கின்றது.

ஆனால்..... இன்றைய 21ஆம் நூற்றாண்டின் விஞ்ஞான தொழில்நுட்பத்தின் நவீன வளர்ச்சியின்மூலம் நம் மனவளர்ச்சி என்னானது? நீதி நியாயம் மறைந்து, அட்டூழியங்கள்

*நேரத்தைப் பயன்படுத்துங்கள். அது உங்களைப் பெருமைப்படுத்தும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலிந்து, போட்டி பொறாமைகள் போன்ற மூர்க்க குணங்களால் மனித மனங்கள் சிதைக்கப்பட்டு சின்னாபின்னப்பட்டுக் கிடக்கின்றன. கலியுகத்தின் உச்சக்கட்டத்தில் நம் நல்ல எண்ணங்கள் சிந்தனைகள் சிதறப்பட்டுப் போயுள்ளது. கொடுமையான தொற்றா நோய்கள் எமை வாட்டி வதைக்கின்றன. மனித, ஜந்துக்களின் உயிர்களும் தாவர உயிரிகளும் விலையற்றுப் போயிருக் கின்றன.

இந்நிலையில் நாம் மகான்களாகவோ, ஞானிகளாகவோ இருக்கவேண்டும் என்றில்லை. நமக்கும் பிறர்க்கும் தீங்கு விளைவிக்காத நல் உள்ளம் கொண்டவர்களாக வாழவேண்டிய அவசியமான சூழலில் நிற்கின்றோம் என்பதை நாம் புரிந்துகொள்வோம்.

தொழில்நுட்பக் கருவிகளுக்கும் சாதனங்களுக்கும் கொடுக்கும் முக்கியத்துவத்தை விடுத்து மனித மனங்களை மனிதர்களை - உறவுகளை - பெரியோர்களை - மாற்று வலுவுள்ளோர்களை - நேசிக்கக் கற்றுக்கொள்வோம். மதிப்பளிப்போம்.

"உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது" என்கின்ற மட்டக்களப்பு முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தர் கவிவரிகள் மூலம், இறைவன் நம்மிடம் எதிர்பார்ப்பது நமது மாசற்ற "உள்ளம்" ஒன்றையே என்பதை எமக்கு உணர்த்துகிறார்.

நமது வாழ்க்கை நல்லதாக அமைந்தால் ஞானசக்தியாகிய இறைவன் நமது உள்ளத்தில் குடிபுகுந்து விடுவார். மெல்ல மெல்ல எமதுள்ளம் பெரும் கோயில் ஆகிறது. நமது மனம், நல்ல எண்ணங்களால் நிறைந்து, துணிச்சலுடன் நல்ல அறம் ஆற்றத் தயாராகிறது.

வாழ்வோம் வளமுடன் உறவுகளுடன் இணைந்து.

## பூஜைக்குரிய மலர்கள்

ஆலயங்களில் நமக்கு அளிக்கப்படும் மலர்கள் மற்றும் அனைத்து பிரசாதங்களும் நிர்மால்யம் என போற்றப்படுகிறது. நிர்மால்யம் எனில் அழுக்கற்றது, தூய்மையானது. அவற்றில் இறைவனின் அருட்சக்தி நிறைந்து இருக்கும். அவற்றை வெறும் மலர் என்றோ அன்னம் என்றோ பார்க்கக்கூடாது. ரூபாய் நோட்டுக்கும் வெறும் தாளுக்கும் வேறுபாடு இருக்கிறதல்லவா. ரூபாய் நோட்டுக்களிலும் கூட அதனில் பதிக்கப்பட்ட எண்களைப் பொறுத்து மதிப்பு மாறுகிறது. இதுபோன்று ஒவ்வொரு கடவுளர்களின் பிரசாதமும் ஒவ்வொரு சக்தி உடையது. அவற்றை நாம் பக்தியுடன் கண்களில் ஒற்றிக்கொண்டு, நமது நெற்றியிலும், இருதயத்திலும் வைத்து அந்த இறை அருள் நம்முள் உட்புகுவதாக எண்ணுதல் வேண்டும். பிறகு வீட்டில் பூஜை அறை இருப்பின் அங்கு வடக்கிலோ, வடகிழக்கு திசையிலோ ஒரு தாம்பாளத்தின்மீது வைத்திடல் வேண்டும். வீட்டில் பெண்கள் அவற்றிலிருந்து சிறிது எடுத்து பக்தியுடன் தலையில் வைத்துக்கொள்ளலாம். மறுநாள் காய்ந்த மலர்களை நீர்நிலைகளிலோ, மரங்களின் கீழோ வைத்திட வேண்டும். நமது வீட்டில் உள்ள இறை உருவங்களுக்கு வேறு மலர்களை சார்த்துவது சிறந்தது.

*அறிவும் ஒழுக்கமும் வாழ்க்கையின் இரு சக்கரங்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழித்துணை 68

— ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் அவர்கள் —

01 சாய்ந்ததோர் கோபுரத்தைச் சாயாமல் நிமிர்த்திவிட்டு
வாய்த்தது புகழென்று வரலாற்றில் மகிழ்கின்றோம்
வாழ்ந்தமனம் பலவிங்கு சாய்வதனைக் கண்டுநாம்
ஆய்ந்ததனை நிமிர்த்தாமல் சாய்ந்திடத்தான் விடலாமோ.

02 காயாத மரமென்று கண்டதுமே நாடிவந்து
ஓயாமல் பசளையிட்டு கனிபறித்து மகிழ்கின்றோம்
வாயாது உழைப்பிங்கு வாடுவோரைக் கண்டும்நாம்
மேயாத மாடென்று மெலிந்திடத்தான் விடலாமோ.

03 வேலிக்குள் பாசம் நிற்கும் வெளியாலே வேசம் செல்லும்
வெளிச்செல்லும் வேசத்தாலே நாசங்கள் உருவாகும்
வேலிக்குள் வேசம் வைத்து வெளியாலே பாசம் வைத்தால்
தேசம் நம்வாசமென்ற நேசங்கள் உருவாகும்.

04 வேலிக்குள் செயலிருக்கும் வெளியாலே எண்ணம் செல்லும்
வெளிச்செல்லும் எண்ணத்தால்தான் வேற்றுமைகள் உருவாகும்
வேலிக்குள் எண்ணம் வைத்து வெளியாலே பாசம் வைத்தால்
நாடேநம் வீடுஎன்ற நல்லெண்ணம் உருவாகும்.

05 வேலிக்குள் அன்பிருக்கும் வெளியாலே ஆசை செல்லும்
வெளிச்செல்லும் ஆசையால்தான் மோசங்கள் உருவாகும்
வேலிக்குள் ஆசைவைத்து வெளியாலே அன்பை வைத்தால்
அகிலம் நம்உலகமென்ற அர்த்தங்கள் உருவாகும்.

06 வேலிக்குள் பொறுப்பிருக்கும் வெளியாலே வெறுப்பிருக்கும்
வெளிச்செல்லும் வெறுப்பினால் தான் பேதங்கள் உருவாகும்
வேலிக்குள் வெறுப்பை வைத்து வெளியாலே பொறுப்பை வைத்தால்
வையம்நம் தெய்வமென்ற எண்ணங்கள் உருவாகும்.

*தன்னம்பிக்கை இழந்தவன் எல்லாமே இழந்துவிடுவான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07 வேலிக்குள் கடமைநிற்கும் வெளியாலே மடமைசெல்லும்
வெளிச்செல்லும் மடமையால்தான் குரோதங்கள் உருவாகும்
வேலிக்குள் மடமைவைத்து வெளியாலே கடமை வைத்தால்
உலகம் நம்இதயமென்ற உள்ளுணர்வு உருவாகும்.

08 பாத்திரங்கள் உடையாமல் பாதுகாத்தால் மட்டும்
காத்திரம் உடையதோர் சமுதாயம் தோன்றாது
ஆத்திரம் கொண்டொருவர் மனமுடைக்கா திருந்தால்தான்
ஏற்றிநாம் போற்றிடவோர் சமுதாயம் உருவாகும்.

09 பொருள் பண்டம் சிதறாமல் பாதுகாத்தால் மட்டும்
அருளாட்சி உடையதோர் சமுதாயம் தோன்றாது
மருண்டோடும் மனங்களை நாம் சிதறடிக்கா திருந்தால்தான்
உருண்டோடும் உலகிலுயர் சமுதாயம் உருவாகும்.

10 உறவுகளைப் பிரிக்காமல் இருந்திட்டால் மட்டும்
சிறந்ததோர் சமுதாயம் சீருலகில் தோன்றாது
மறந்தேனும் பிறர் மனதைப் பிரிக்காமல் இருந்தால்தான்
அறவழியில் செல்லுமோர் சமுதாயம் உருவாகும்.

**சந்நிதியான் ஆச்சிரமம் மேற்கொண்டுவரும் நித்திய அன்னபணிக்கும் மற்றும் ஆச்சிரமத்தினால் நடாத்தப்படும் சகல சமுதாயப் பணிகளுக்கும் உதவிபுரிய விரும்புவோர் கீழே உள்ள முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.**

**காசுக்கட்டளை**
செ. மோகனதாஸ்
சந்நிதியான் ஆச்சிரமம்,
தொண்டைமானாறு.
தொ.இல – 0213219599, 0212263406

**காசோலை**
செ. மோகனதாஸ்
க.இல – 7342444
இலங்கை வங்கி,
பருத்தித்துறை.

**Swift code - BCEYLKLX 028 - 7342444**

E.mail : suthanm329@gmail.com
: sannithiyan@hotmail.com

*சேமிப்பு இல்லாத குடும்பம் கூரை இல்லாத வீட்டிற்குச் சமம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவும் அறியாமையும்

– திரு இராம ஜெயபாலன் அவர்கள் –

ஒருவருக்குள் அறிவும் இருக்கின்றது. அறியாமையும் இருக்கின்றது. மேலும் இரண்டுமே இருக்கின்றது என்று இருத்தலைக் குறிப்பதால் இரண்டும் இல்லாத நிலைகளும் இல்லாமல் இல்லை. உதாரணம் ஒரு பிறந்த குழந்தைக்கு அறிவும் இல்லை அறியாமையும் இல்லை. அந்தக் குழந்தை வளர வளரவே அறிவும் உருவாகின்றது. அறியாமையும் உருவாகின்றது. தவிர ஒரு சிறுவனையும் ஒரு பெரியவரையும் ஒப்பிட்டு அறிவு அறியாமை பற்றி ஆராயும்போது சிறுவனைப் பார்த்து அறியாத சிறுவன் என்று குறிப்பிடுகின்றோம். அதேநேரம் ஒரு பெரியவர் அறிவு இல்லாது அப்பாவித்தனமாகப் பேசினாலும் அறிவு இல்லாமல் பேசுகின்றார் என்றே கொள்வோம். ஆனால் அறியாமை என்பது அறிவுடனே சேர்ந்து உருவாகின்ற ஒரு பிணி. இதை ஆழ்மனப் பதிவுகள் என்று மனோதத்துவவியலாளர்கள் குறிப்பிடுவார்கள். காரணம் மனிதர்கள் மற்ற உயிரினங்களில் இருந்து வேறுபட்டு தமது அறிவு ஆற்றல்களை கல்வி கேள்வி அனுபவங் களால் பெற்று விருத்தியடையும்போது சில பல குறுகிய மனநிலைகளும் பழக்கவழக்கங்களும் கூட ஏற்பட்டு விடுகின்றது. பிறவிகளாலும் கூட அறிவு அறியாமைகள் வருகின்றது.

இவ்வாறு அறிவு அறியாமைகளால் ஏற்படும் பலம் பலவீனங்களைப் பொறுத்தே அப்பாற்பட்ட சக்திகளாலும் ஒருவரில் தலையிடக்கூடிய நிலையேற்படுகின்றது. மனோநிலையில் திடகாத்திரமான ஒருவரை எந்தச் சக்தியாலும் எதுவும் செய்யமுடியாது.

எவ்வாறாயினும் இந்தக் கலியுகத்தில் அதிக மனப் பிரள்வுகள் ஏற்படக் காரணம் வாழ்முறைகள் மாற்றமடைந்து வருவதும் கூடவே சமூக மாற்றங்கள் இடம்பெற்று வருவதுமே யாகும். ஆனால் இன்று இடம்பெறுவதுபோல் மனித வாழ்வியல் குழப்பங்கள் அன்று இடம்பெறுவதில்லை. சமூகப்பயம் பொறுப்புணர்ச்சி, சகிப்புத்தன்மை, விட்டுக்கொடுப்புக்கள் இருந்தமைதான் இவற்றுக்கு முக்கிய காரணங்களாகும்.

இந்தவகையில் அறிவு அறியாமைபற்றி இலக்கிய இதிகாச புராணங்களில் சொல்லப் பட்டவைகளில் இருந்து ஆய்வு செய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

தமிழ் இலக்கியங்களில் அரும்பணியாற்றியவர் ஔவைப்பிராட்டி இவரின் முக்கிய வாக்கியமொன்று கற்றது கை மண்ணளவு கல்லாதது உலகளவு முருகப்பெருமான் ஔவைப் பிராட்டியை சோதிப்பதற்காக சுட்டபழம் வேண்டுமா? சுடாதபழம் வேண்டுமா? எனக் கேட்டதாகவும் சிறுவனாய் நின்ற முருகனை யாரென்று அறியாது சுட்டபழம் சுடாதபழம் என்பதன் பொருளும் விளங்காது, சுட்டபழத்தையே போடு எனக் கேட்டதாகவும், மிகவும் பழுத்த பழங்கள் குருமணலில் விழுந்து மண்ணொட்டிக்கொண்டதாகவும், இதனால் மணலை ஊதிவிட்டு ஔவை சாப்பிட்டபோது அறியாத சிறுவனாக நின்ற முருகன் பாட்டி பழம் மிகவும் சுடுகின்றதா? எனக் கேட்டதாகவும் அப்போதுதான் அறிவில் முதிர்ந்த ஔவை அறியாச் சிறுவன் கூறியதைப் புரியாத அவமானத்தால் வெட்கி, இவ் வரிகளைக் கூறியதாகவும் அறிகின்றோம். இங்கே ஔவைப்பிராட்டி கற்றது கைமண்ணளவு கல்லாதது உலகளவு எனக் குறிப்பிட்டமை, மிகப்பெரிய அறிவுடமைக் கருத்தாகும். காரணம் அறிவை அறிவதில்

*சேமிக்கக் கற்றுக்கொள். சிக்கனம் தானாக அமையும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயது ஒரு தடையாக இருக்கக்கூடாது, எம்முள் அறிவை வளர்த்துக்கொள்ளும் பக்குவமே சிறந்த அறிவாளிக்கு அடிப்படை ஆதாரமாகும்.

எனக்கு எல்லாம் தெரியும் என்ற மமதைதான் அறியாமைக்கு காரணமாகும். உலகில் குறைநிறையில்லாத அறிவு எதுவும் இல்லை, இறைவனால் நேரடியாக அருளப்பட்டு இருந்தால் மட்டுமே அது பூரணத்துவமானதாக இருக்கும்.

ஒரு குழந்தை எவ்வாறு அறிவு அறியாமை அற்ற நிலையில் இருக்கின்றதோ அதுபோல் இறைவனும் ஞானநிலையிலேயே இருக்கின்றான். இதனால்தான் குழந்தையும் இறைவனும் ஒன்று என்று கூறுவார்கள்.

கந்தபுராணத்திலே அசுரர்கள் வேதங்களுக்கு அதிபதியான பிரம்மனின் வம்சத்திலும், சகல கலைகளையும் அறிந்த ரிஷிகளின் வம்சத்திலும் வந்தமையால் அசுரர்களும் கல்வி கலைகளில் மிகுந்த ஆற்றல்பெற்று கடவுள் வரங்களையும் பெற்றவர்களாகவும் அண்ட சராசரங்களையுமே ஆண்டவர்களாகவுமே காட்டப்பட்டும் இருக்கின்றார்கள்.

எனவே அறியாமைக்கு காரணமாக இருந்தது ஆணவமாகும் அடிப்படை வாதங்களுக்கு காரணமாக இருப்பதும் அறியாமைகளே, உலகம் தழுவிய அறிவுகளை அறியாது கிணத்து தவளைகள்போல் பிதற்றுவதும் இதனால்தான்.

மேலும் அறியாமைகள் தேவர்களுக்கும் அமரர்களுக்கும் கூட இருக்கின்றது. தெய்வங் களுக்குக்கூட இருந்து இருக்கின்றது என்று தெட்டத் தெளிவாக புராணங்கள் கூறுகின்றன. ஆன்மாக்களுக்கு அறியாமைகள் இருப்பதால்தான் அலையும் பேய்களாக அலைகின்றன. ஏவல்களாகவும் எடுபிடிகளாகவும் கூட செயற்படுகின்றன. எனவே அறியாமை பற்றிய கருத்துக் கள் மிகத் தெளிவாகவே இலக்கிய இதிகாச புராணங்களில் கூறப்பட்டும் இருக்கின்றன என்பது புலனாகின்றது.

எவ்வாறாயினும் அறிவும் அறியாமைகளும் மனித சமூகத்தில் இருப்பதால்தான் காலத்துக்குக் காலம் புதிய கருத்துக்கள் உருவாக வேண்டிய தேவைகளும் இருந்தும் இருக்கின்றது. அல்லது மாற்றங்கள் என்பது சாத்தியமாகியே இருக்காது.

## குருபூஜை தினங்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| மார்ச் | 01 | மாசி 17 | புதன் | கச்சியப்ப சிவாச்சாரியார் |
| மார்ச் | 08 | மாசி 24 | புதன் | திருவள்ளுவர் |
| மார்ச் | 20 | பங் 06 | திங்கள் | பரமகுரு சுவாமிகள் |
| மார்ச் | 22 | பங் 08 | புதன் | குழந்தைவேற் சுவாமிகள் |
| மார்ச் | 24 | பங் 10 | வெள்ளி | செல்லப்பா சுவாமிகள் |
| மார்ச் | 29 | பங் 15 | புதன் | நல்லைக்குருமணி |
| மார்ச் | 29 | பங் 15 | புதன் | வே. முருகேசு சுவாமிகள் |
| ஏப்ரல் | 01 | பங் 18 | சனி | யோகர்சுவாமிகள் |
| ஏப்ரல் | 08 | பங் 25 | சனி | காரைக்காலம்மையார் |
| ஏப்ரல் | 21 | சித் 08 | வெள்ளி | சிறுத்தொண்டர் |
| ஏப்ரல் | 23 | சித் 10 | ஞாயிறு | மங்கையர்க்கரசியார் |

*கட்டுப்பாடற்றவன் கௌரவம் இழப்பான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முப்பெரும் நிகழ்வாக முகிழ்த்தெழுந்த முன்னூற்றோராவது ஞானச்சுடரின் வெளியீட்டு வைபவம் (29.01.2023 ஞாயிற்றுக்கிழமை)

–திரு துரை. கணேசமூர்த்தி அவர்கள்–

**ஞானச்சுடர் மலரின் உரைஞர்களுக்கான மதிப்பாற்றுகை**
**கல்விப்பணியின் ஓரம்சமாக மாணவர்களுக்குரிய துவிச்சக்கரவண்டிகள் வழங்கப்பெற்றமை**
**301ஆவது ஞானச்சுடரின் வெளியீட்டு வைபவம்.**

"செய்வானும் செய்வினையும் சேர்பயனும் சேர்ப்பானும்
உய்வான் உளனென்று உணர்"

-திருவருட்பயன்.

அந்த ஞாயிற்றுப் பொழுதின் இயல்பான ஆரவாரத்தோடு சந்நிதியானின் காலை நேரப் பூசை நிறைவுற்றதைத் தொடர்ந்து சந்நிதியான் ஆச்சிரமத்திலும் பேச்சாளர்கள், மாணவர்கள், சிறப்புப்பிரதி பெறுநர்கள், ஆன்மீகத் தலைவர்கள், அடியவர்கள் எனப் பலதரப்பட்டோரினது பிரசன்னங்களும் நிகழ்ந்து கொண்டிருந்தது. இது சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினால் வெளியிடப்பட்டுவரும் ஞானச்சுடர் மலருக்கான வெளியீட்டு வைபவத்திற்கு கட்டியம் கூறுவதுபோலக் காணப்பட்டாலும் அங்கு பலதரப்பட்ட பேச்சாளர்களும் கூடியிருந்தமையானது. கடந்த காலங்களில் அவர்கள்தான் இம்மலருக்கான வெளியீட்டு நிகழ்வுகளில் வெளியீட்டுரை, மதிப்பீட்டுரை என்பவற்றை ஆற்றியிருந்தமையை அறியக்கூடியதாக இருந்தமையினால் இவர்கள் எல்லோருக்கும் இந்நாளில் ஏதோ ஒருவித மதிப்பாற்றுதல் நிகழவிருந்தமையையும் புலனாக்கியது. அப்படியாயின் இங்கு பாடசாலைச் சீருடையில் ஒரு சில மாணவர்கள் எதற்காக வருகை தந்திருக்கின்றனர் என்பதை அந்த அரங்கப் புறத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த துவிச்சக்கரவண்டிகள் மூலமாக உணரக்கூடியதாயிருந்தது.

இவ்வண்ணம் இந்த மூன்று நிகழ்வுகளும் ஒரேநாளில் சைவ கலை பண்பாட்டுப் பேரவை அரங்கில் நிகழ்ந்தேறியமையானது சாலச் சிறப்பானதொரு விடயமாகும்.


சந்நிதியான் ஆச்சிரமத்தில் எந்தவித சலசலப்புமின்றி நாள்தோறும் நிறைவேற்றி வைக்கப்பெறும் பணிகளோடு இந்நிகழ்வுகளும் உள்ளடக்கப்பட்டுவிடும். என்றாலும் இதன் அவைச்சிறப்பு கருதியும் அவரவர்கள் தம்முள்ளக் கிடக்கைகளிலிருந்து வெளிப்படுத்திய கருதுநிலைகள் தொடர்பாகவும் ஒரு சில விடயங்களை இக்கட்டுரைப் பகுதியானது ஞானச்சுடர் வாசகர்களுடன் பகிர்ந்துகொள்கிறது.


*அறிவு தலைக்குக் கிரீடம். அடக்கம் காலுக்கு செருப்பு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாராந்த நிகழ்வுகள் தொடக்கம் ஞானச்சுடர் வெளியீடு வரை ஆச்சிரமத்தின் சைவ கலை பண்பாட்டுப் பேரவை மூலமாகத்தான் நிகழ்ந்தேறி வருகின்ற போதிலும், அப் பேரவையை நெறிப்படுத்தி இயக்குபவர் ஆச்சிரமத்தின் தளகர்த்தாவாகிய மோகன் சுவாமிகளேயாவார். மற்றைய நிகழ்வுகளிலும் பார்க்க அன்றைய வெளியீட்டு நிகழ்வை சுவாமிகளே நேரடியாக நின்று நெறிப்படுத்தியிருந்தமை ஒரு விசேட அம்சமாகும். ஏனெனில் ஒரு நீண்ட இடைவெளிக்குப் பின்பு முறைப்பிரகாரமாக ஆரம்பிக்கவிருக்கும் அட்டவணைப்படுத்தப் பட்ட வாராந்த நிகழ்வுகளையும், வெளியீட்டு நிகழ்வுகளையும் அதன் தொடக்க நாளிலேயே செம்மையுறச் செய்துவிடவேண்டு மென்பதுடன், அதனை ஒரு காத்திரமான நிகழ்வாக தொடக்கிவிட வேண்டும் என்பதும் சுவாமிகளது விருப்பமாக அமைந்து இருக்கலாம். இவ்வண்ணமாக நடைபெற்ற இவ் விழாவில் ஆச்சிரம சுவாமிகளின் தொடக்கவுரையைத் தொடர்ந்து சிவஸ்ரீ ப. மனோகரக் குருக்கள், சிவஸ்ரீ சோமாஸ் கந்த தண்டபாணிக தேசிகர், ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய ஸ்வாமிகள் ஆகியோருடன் தர்மபுர ஆதீன சுவாமி அவர்களது





ஆசியுரைகளும் சிறப்பாக நிகழப்பெற்றதைத் தொடர்ந்து வருகை தந்திருந்த வெளியீட்டுரை, மதிப்பீட்டுரையாளர்களின் ஞானச்சுடர் வெளியீடு தொடர்பான மனக்கருத்துக்களையும் அவையோரிடம் பகிர்ந்துகொள்ளுமாறு சுவாமிகள் கேட்டதற்கிணங்க அவ்வுரைஞர்களும் ஞானச்சுடர் மலரின் வெளியீட்டு முக்கியத்துவம் பற்றி அவ் அவையிலே தமது கருத்துக்களை பகிர்ந்து சிறப்பித்தனர். நாமெல்லாம் சைவ சமயிகளாக வாழ்வதற்கு வழிகாட்டியாக அமைந்திருந்த ஒப்புயர்வற்ற புராண இதிகாசங்களைப்போல இந்த நவீன காலத்தில் வெளிவந்து கொண்டிருக்கும் ஞானச்சுடர் மலரும் எமது சைவப் பண்பாட்டினை நிருபித்து நிற்கும் நீங்காத செல்வமாக அமைகிறது என்பதுடன் இனிவருங் காலங்களிலும் தொடர்ந்து சந்நிதியானின் திருவருட்பலத்தோடு வெளிவந்து உலகில் எங்கெங்கு எம்மவர்கள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்ந்துவரினும் அவர்களது கைகளிலே இம்மலர் தவழ வேண்டுமென்றும் இவ்வுரைஞர்கள் தமது உள்ளக் கருத்துக்களை வெளிப்படுத்தினர்.



இவ்வண்ணம் ஆற்றப்பெற்ற கருத்துரைகளிலே ஓய்வுநிலை ஆங்கில விரிவுரையாளர் திரு ச. விநாயகமூர்த்தி ஐயா அவர்களுடைய ஆற்றுகை ஓர் தெளிவான விரிவுரை யாக அமைந்தமை சிறப்பான அம்சமாகும். மிகு சொற் செறிவும் அச்சொற்செறிவின்பால் அமைந்த கருத்தியல்களும் அவற்றை அவையோருக்கு புலப்படுத்தக் கையாண்ட வார்த்தைகளும் தனித்துவமானவை. ஓர் பிரதான விடயப் பொருளுக்காக அவர் கையாளும் உப விடயங்கள், அதனூடாக மேற்கிழம்பும் உட்கருத்துக்கள் என்பவற்றை திருவாசகம், திருத்தொண்டர் புராணம் என்பவற்றின் ஆதாரங் களுடன் நிருபித்து எமது சமயத்தின் செழுமையையும் வாழ்வியலில் அவை கொண்டிருக்கும் வலிமையையும் குறித்துரைத்துக்கொண்ட விரிவுரையாளர் ஐயா அவர்கள் இன்றைய காலத்தில் வெளிவந்து கொண்டிருக்கும் ஞானச்சுடர் மலரும் எம்மவர்களின் ஆன்மீக நெறிக்கான வழிகாட்டியாக அமைந்திருக்கிறது என்றும் குறித்துரைத்தார்கள்.

தொடர்ந்து நடைபெற்ற நிகழ்விலே மாணவர்களுக்கான துவிச்சக்கரவண்டிகளை வழங்கும் வைபவம் இடம்பெற்றது. ஆச்சிரமத்தினால் ஆற்றப்பட்டு வருகின்ற கல்விசார் சமூகப் பணிகளிலே ஓரம்சமாக வறுமைக்கோட்டின்கீழ் கல்வி கற்கும் பாடசாலை மாணவர்கள் மூவர் இத் துவிச்சக்கரவண்டிகளைப் பெற்றுக்கொண்டனர்.



இதனைத் தொடர்ந்து இதுவரை முன்னூற்றொரு வெளியீடுகளாக சுடர் பரப்பிய ஞானச்சுடர் மலருக்கான வெளியீட்டு நிகழ்வுகளில் வெளியீட்டுரை, மதிப்பீட்டுரை முதலியவற்றை

*உன் வாழ்க்கையை நீ உண்மையாக நேசி.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆற்றிய உரைஞர்களுக்கான மதிப்பளிப்புகை இடம்பெற்றது. இம் மதிப்பாற்றுகைக்கு உரித்தான அனேகமான பேச்சாளர்களும் இந்தச் சைவ கலை பண்பாட்டுப் பேரவையிலே அறிமுகமாகி இன்று தமக்கென ஒரு தனித்துவத்தை தம்மகத்தே கொண்டுள்ள புலமையாளர்களாக மிளிர்ந்து வருவது ஒரு சிறப்பம்சமாகிறது.

இவ்வகையில் பேச்சாளர்களாக பிரசன்னமாகி இருந்த உரைஞர்களுக்கும் ஏனைய புலமையாளர்களுக்குமான மதிப்பாற்றுகையை ஆச்சிரமத்தின் சுவாமிகளே தன் கைப்பட நிறைவேற்றி வைத்தார்கள்.

"தந்தை மகற்கு ஆற்றும் உதவி அவையத்து
முந்தி இருப்பச் செயல்"

என்று ஒரு தந்தை தனது மகற்கு ஆற்றவேண்டிய பணியை இங்கே ஆச்சிரமத்தின் சுவாமிகள் தந்தையாகவும், குருவாகவும் சந்நிதியானுடைய திருவருளுக்குச் சான்றாக அவ்விடத்து நின்று இம்மதிப்பாற்றுகையை செய்து உவந்தார்கள்.



இவ்வண்ணம் அவரவர்களுக்கான உபசரணையாக பொன்னாடைகள் போர்த்தியும் சின்னங்கள் வழங்கப்பெற்றும் இப்பேச்சாளர்கள் மதிப்பாற்றுதலை பெற்றுக்கொண்டமையானது இந் நிகழ்வுக்கு கனதியும் பெருமையும் சேர்ப்பித்த ஒரு சிறப்பம்சமாகும். சந்நிதி வேலனுடைய வழிப்படுத்தலூடாக சுவாமிகளது சிந்தனைப் பிரகாரமாகத் தோன்றிய ஆன்மீகச் செயற்பாடு களுக்கு பக்கபலமாகச் செயற்பட்ட இவ் உரைஞர்களுக்கான மதிப்பாற்றுகையானது

"தினைத்துணை நன்றிசெயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன் தெரிவார்"

என்ற குறள் வரிகளுக்கேற்ப அமையப்பெற்றிருந்தது.

இவ்வாறு சாலச்சிறப்புடன் நடைபெற்ற இவ்வெளியீட்டு நிகழ்வுக்குரிய வெளியீட்டுரையை ஏற்கனவே குறித்தொதுக்கப்பெற்ற தைமாத அட்டவணைப்படி கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்கள் ஆற்றவிருந்த போதிலும் அவரது சிரேஷ்ட சகோதரரான திரு ஆ. ஸ்ரீஸ்கந்தமூர்த்தி அவர்களே வெளியீட்டுரையை ஆற்றினார்கள். அவர் தனது உரையிலே இன்றைக்கு உலகின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எந்தப் பாகத்தில் எம்மவர்கள் வாழ்ந்தாலும் அவர்களின் கரங்களிலே ஞானச்சுடர் மலர் தவழ்ந்து நன்னெறி புகட்ட வேண்டுமென்றும் சைவ சமயிகளின் ஓர் அடையாளச் சின்ன மாகத் திகழ வேண்டுமென்றும் எடுத்துரைத்தார்.

தொடர்ந்து மதிப்பீட்டுரையை ஆற்றிய பேரவை உறுப்பினரும் இளைப்பாறிய அதிபருமாகிய திரு ஆ. சிவநாதன் அவர்கள் ஞானச்சுடர் மலரின் சிறப்பியல்புகளை எடுத்துக் கூறியதோடு ஏனைய சமயத்தவர்கள் உங்களது அடையாளம் எது எனக் கேட்பின் அதனை ஞானச் சுடர் மலரின் ஊடாக நிரூபிக்க வேண்டும் என்ற சாரப்பட தனது மதிப்பீட்டுரையை ஆற்றினார்கள். மேலும் தைமாத ஞானச்சுடரின் உள்ளடக்கங்களான சந்நிதி முருகனின் திருவிளையாடலும் சந்நிதியான் ஆச்சிரமமும், நாவலர் இன்றிருந்தால், மதுர மொழி தந்த அதிமதுரன் போன்ற கட்டுரைப் பகுதிகளின் சிறப்பம்சங்களை யும் அவையோரிடம் விபரித்திருந்தார்கள்.



ஞானச்சுடர் மலரின் 301ஆவது வெளியீட்டின் நிறைவாக தைமாதத்திற்குரிய சிறப்புப்பிரதிகள் வழங்கும் நிகழ்வு இடம் பெற்றிருந்தது. இத் தைமாதச் சிறப்புப் பிரதிகளை பெறுநர்களில்



உழைப்பின் வேரோ கசப்பு. கனியோ இனிப்பு.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனேகமானோர் மக்கள் வங்கி உத்தியோகத்தர்களாக பிரசன்ன மாகியிருந்தனர். சுவாமிகளது அறிவிப்பின் பிரகாரம் சிறப்புப்பிரதிகள் மூலம் வங்கி உத்தி யோகத்தர்கள் வழங்கிய பணம் அறப் பணிக்காக செலவிடப்படும் என்று கூறியிருந்தார்.

"புத்தேள் உலகத்தும் ஈண்டும் பெறல் அரிதே
ஒப்புரவின் நல்ல பிற"

என்று வள்ளுவர் பெருமான் குறிப்பிடுவதற்கமைய தான் உய்ந்துணர்ந்த ஒரு சமூகப் பணியை நிறைவேற்றுவதன் பொருட்டு எவ்வித தயக்கமுமின்றி அதனைச் செய்துமுடிக்கின்ற திறனைக் கொண்டிருப்பவர் மோகன் சுவாமிகளாவார். இதனாற்தான் தேடிவரும் வளங்களை செவ்வனே பயன்படுத்துவதால் ஆச்சிரமத்தால் மென்மேலும் பலவித பணிகளையும் இச் சமூகத்தின்பால் நிறைவேற்றிக்கொள்ள இயலுமாகவுள்ளது. இவை யாவற்றுக்கும் மேலாக சந்நிதி முருகப்பெருமானுடைய திருவருளும் ஆச்சிரமத்தின் கண் வியாபித்துள்ள குருவருளும் மோகன் சுவாமிகளிடம் பரிபூரணமாக நிறைந்திருப்பதால் அவரால் இவ்வாறான பணிகளை மிக இலகுவாக ஆற்றமுடிகின்றது என்பதுதான் இவ்விடத்து எம்மால் உணரக்கூடிய யதார்த்த நிலையாகும்.



இவ்வாறாக திருவருட்திறன்கள் நிறையப்பெற்றதும் அதனை பரிபூரணத்துவமான வினைத்திறனுடன் பயன்படுத்தக்கூடியதுமான சந்நிதியான் ஆச்சிரமத்தினதும் பணிகள் இம்மட்டினது என்றில்லாமல் பலதரப்பட்ட நிலைகளிலே வளர்ந்துகொண்டே செல்லும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம்

(தொடர்ச்சி...)

| | | |
|---|---|---|
| சிவா நறுமணப்பூங்கா | யாழ்ப்பாணம் | 1மூடை அரிசி |
| கா. தயாபரன் | கொழும்பு | 3மூடை அரிசி |
| K.V. துரைசாமி நினைவாக | மயிலிட்டி | 1000. 00 |
| சி. பகீரதன் | கனடா | 5000. 00 |
| கா. விஜயசுரேஸ் | சுவிஸ் | 50000. 00 |
| இ. சிவராஜா (இலங்கை வங்கி) | கரவெட்டி (கல்விப்பணி - மாதாந்தம்) | 15000. 00 |
| N. நவஜோதி | கண்டி | 500. 00 |
| R.I. காந்தி | கண்டி | 350. 00 |
| Dr V. யோகானந்தன் | நாவலப்பிட்டிய | 5000. 00 |
| K. கிருஷாந் | தெகிவளை | 10000. 00 |
| S. மோகன் | மன்னார் | 2000. 00 |
| வி. மகேஸ்வரி | நாவலப்பிட்டி | 1000. 00 |
| வி. உஷா | நாவலப்பிட்டி | 1000. 00 |
| சி. ஜயந்தி, R. சிவாந்தி | நாவலப்பிட்டி | 500. 00 |
| K. வாசுகி குடும்பம் | நாவலப்பிட்டி | 500. 00 |
| திரு பத்மநாதன் குடும்பம் | நாவலப்பிட்டி | 500. 00 |
| A. ஜெயசுந்தரம் | நாவலப்பிட்டி | 3000. 00 |
| திருமதி சரஸ்வதி | நாவலப்பிட்டி | 1000. 00 |
| கமலா ரட்நாயக்க | கம்பளை | 1000. 00 |
| H. திவ்வியா | கண்டி | 200. 00 |
| ரிசோபி நிவேதா | நாவலப்பிட்டி | 1000. 00 |
| ரா. நிர்மலா | கம்பல | 500. 00 |
| மோ. பிரணவன், மோ. பிரியங்கா | கரவெட்டி (u.k) | 20000. 00 |
| சு. ராஜகணேசன் | புத்தூர் | 3000. 00 |
| கெ. வாமதேவன் | இணுவில் | 2000. 00 |
| ச. ஞானபாஸ்கரன் | அல்வாய் | 5000. 00 |
| திரு அருள்ராஜா குடும்பம் | யாழ்ப்பாணம் | மரக்கறி, 1மூடை அரிசி |
| வே. தர்மராஜா | இணுவில் | 5000. 00 |
| திரு பவளதாசன் குடும்பம் | கரவெட்டி | 10000. 00 |
| அ. அருமைத்துரை | திருகோணமலை | 5500. 00 |
| திருமதி தியாகராஜா | மல்லாகம் | மரக்கறி, 1மூடை அரிசி |
| க. அச்சுதா, க. அஜிதா | சுவிஸ் | 15000. 00 |
| த. கஜேந்திரன் | நீர்வேலி | 5000. 00 |

*ஒன்றை உன்னால் கனவு காண முடியுமாயின் அதனை உன்னால் செய்யவும் முடியும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| திரு ஸ்ரீஸ்கந்தா குடும்பம் | பருத்தித்துறை | 2000. 00 |
| சி.வியாசர் | கனடா | 50 டொலர் |
| சி. முருகானந்தவேல் | கொழும்பு | 5000. 00 |
| வே. பாஸ்கரன் | கொழும்பு | 1000. 00 |
| சி. மகேசன் | நல்லூர் | 15000. 00 |
| ஜெ. ஜனார்த்தன் | வவுனியா | 1000. 00 |
| Dr சுதோகுமார் | கரவெட்டி | 1000. 00 |
| கி. சிவலிங்கம் | கரவெட்டி | 1000. 00 |
| ஜெ. அன்பரசன் | தெல்லிப்பழை | 2000. 00 |
| சு. அரன், சு. ஆத்மிகா | லண்டன் | 2000. 00 |
| செல்வி பா. ரதிவதனி | பருத்தித்துறை | 2000. 00 |
| ஆ. சகுந்தலா | அல்வாய் | 5000. 00 |
| K. குணரட்ணம் குடும்பம் | மானிப்பாய் | 1000. 00 |
| க. கஜால் | கனடா | 10000. 00 |
| M. குமாரசாமி | மீசாலை | 5000. 00 |
| அ. தரணிதரன் | கோப்பாய் வடக்கு | 10000. 00 |
| வி. லிபிஷா | மானிப்பாய் | 5புட்டி அரிசி |
| கௌ. பிரஷா | புத்தூர் | 4புட்டி அரிசி |
| சி. சிவனேசன் | அளவெட்டி | 2000. 00 |
| அ. ஜெயபாலன் | தாவடி | 500. 00 |
| பா. சுதர்சன் | துன்னாலை | 3000. 00 |
| கு. உதயகுமார் | உடுப்பிட்டி | 2000. 00 |
| ர. ஆகாஸ் | சுவிஸ் | 2000. 00 |
| பா. அட்சயன் | தாவடி | 2000. 00 |
| A. ரஜிதீபன் | கட்டைப்பிராய் | 2000. 00 |
| அ. அஸ்வின் | வல்வெட்டி | 4000. 00 |
| திருமதி செல்வநாயகம் | லண்டன் | 15000. 00 |
| K. ராஜேந்திரன் | வெள்ளவத்தை | 1000. 00 |
| இ. ஸ்ரீதரன் | கோண்டாவில் | 1000. 00 |
| சி. நாகேஸ்வரி | அளவெட்டி | 10000. 00 |
| சி. சிவனேசன் | கனடா | 5000. 00 |
| லோ. கேதீஸ்வரி | கனடா | 1000. 00 |
| வி. மகேஸ்வரி | கொழும்பு | 10000. 00 |
| திரு இரத்தினகுமார் | ஜேர்மன் | 2000. 00 |
| S.K. காசிலிங்கம் | பிரான்ஸ் | 1000. 00 |
| கே. ரக்சயன், கே. தருஸ்மிகா | கொழும்பு | 3000. 00 |
| சொ. பிரபாகரன் | இணுவில் | 6000. 00 |
| திரு ஸ்ரீஸ்கந்தராசா குடும்பம், திரு சோமசுந்தரம் குடும்பம் | மல்லாகம் | 2000. 00 |

*தேவைப்படுவதைப் பெறுவதற்கு தொடர்ந்து செயற்பட்டுக்கொண்டே இருங்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| உ. மாலினி | கனடா | 50 டொலர் |
| R. தயாபரன் | காரைநகர் | 3000. 00 |
| சி. சந்திரகாந்தன் | புலோலி | 5000. 00 |
| பொ. தவராசா | புலோலி | 10000. 00 |
| கா. கார்த்தி | தாவடி | 1500. 00 |
| வை. நாகராசா | சங்கானை | 1000. 00 |
| க. கவின் | பன்னாகம் | 2000. 00 |
| S. ரமேஸ் | பன்னாகம் | 1000. 00 |
| S. ஸ்ரீஸ்கந்தராஜா | பன்னாகம் | 5000. 00 |
| த. பிரசாத் | கோண்டாவில் | 10000. 00 |
| நிலுஷா மயூரன் | வவுனியா | 10000. 00 |
| சு. தனுஜா | கோண்டாவில் | 5000. 00 |
| சி. சிவரூபன் | அவுஸ்திரேலியா | 500. 00 |
| பா. தினகரன் | இணுவில் | 1000. 00 |
| சயந்தன் இந்திராணி | புலோலி | 5000. 00 |
| கா. சுவர்ணன் | திருகோணமலை | 5000. 00 |
| பா. ராஜசேகர் | அவுஸ்திரேலியா | 5000. 00 |
| பொ. தங்கவேலாயுதம் | நவிண்டில் | 5000. 00 |
| சி. மயூரன் | உடுவில் | 1மூடை அரிசி |
| செ. குருசாமி | தாவடி | 10000. 00 |
| சி. சிவாஜினி | கனடா | 2000. 00 |
| N.T.V. ராஜலிங்கம் | சுழிபுரம் | 6000. 00 |
| திரு கிருபாகரன் குடும்பம் | பிரான்ஸ் | 10100. 00 |
| ஓர் பக்தர் | சாவகச்சேரி (கல்விப்பணிக்காக) | 5000. 00 |
| M. ராஜேந்திரன் | இருபாலை | 2000. 00 |
| M. கிருஷ்ணகுமார் | கோண்டாவில் | 1000. 00 |
| ஸ்ரீ. சரண் | கொக்குவில் | 5000. 00 |
| வி. விஸ்வலோஜினி | பிரான்ஸ் | 5000. 00 |
| திரு சூரியகாந்தன் குடும்பம் | சுவிஸ் | 5000. 00 |
| திருமதி சண்முகலிங்கம், சின்னப்பா பொன்மணி | கல்வியங்காடு | 10000. 00 |
| S. ரட்ணம் | கொக்குவில் | 2000. 00 |
| சி. வர்சினி | ஜேர்மன் | 5000. 00 |
| சிவகுரு துரையம்மா | அவுஸ்திரேலியா | 3000. 00 |
| க. வேலன் | கோப்பாய் | 5100. 00 |
| பொ. இளையதம்பி | சிறுப்பிட்டி | 2000. 00 |
| வை. ஜெயச்சந்திரா | ஊரிக்காடு | 5000. 00 |
| நா. பரமானந்தமூர்த்தி | கனடா | 30000. 00 |
| க. கஜேந்திரலிங்கம் | நல்லூர் | 1000. 00 |
| த. நரேன் | இடைக்காடு | 5000. 00 |

*பிறந்துவிட்டோம் என்று வாழாதே. இனி பிறக்கப்போவதில்லை என்று நினைத்து வாழுங்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| க. உதயகுமார் | கனடா | 2000. 00 |
| த. யசோ | கனடா | 1000. 00 |
| பி. அனனியா | லண்டன் | 10000. 00 |
| யதுஷன் நிமலன் | லண்டன் | 2000. 00 |
| இ. செல்வக்குமார் | கொக்குவில் | 5000. 00 |
| கோ. பத்மநாதபிள்ளை | கொட்டாஞ்சேனை | 2000. 00 |
| சு. செல்லத்துரை | சங்குவேலி | 18000. 00 |
| திரு ஞானவேல் குடும்பம் | வல்வெட்டித்துறை | 5000. 00 |
| திரு சிவசுப்பிரமணியம் குடும்பம் | கோண்டாவில் | 1000. 00 |
| திரு பார்த்தீபன் குடும்பம் | கோண்டாவில் | 1000. 00 |
| அ. ஆரூஸ் | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| திருமதி சாரதா | தொண்டைமானாறு | 10000. 00 |
| செ. சிவனேசன் | அச்சுவேலி | 5000. 00 |
| ச. ஜனகன், ச. கிருபன் | கந்தர்மடம் | 10000. 00 |
| மு. பாலசிங்கம் | வதிரி | 1000. 00 |
| தே. சிவபாக்கியம் | வட்டுக்கோட்டை | 30000. 00 |
| சி. சிவகுமார் மூலம், சிவசம்பு ரத்தினம் | இணுவில் | 5000. 00 |
| K. ரகு | நல்லூர் | 1000. 00 |
| ம. சுலேக்கா | நவிண்டில் | 5000. 00 |
| லோ. பார்த்தீபன் | வரணி | 4000. 00 |
| சி. சிவாகர் | லண்டன் | 2000. 00 |
| க. வசந்தகுமாரி | கோண்டாவில் | 1000. 00 |
| திருமதி செ. சிவயோகராணி<br>செ. ராஜகுமார்<br>அ. நர்மதா | மீசாலை | 10000. 00 |
| வே. புவனேஸ்வரி | பருத்தித்துறை | 10000. 00 |
| கு. சோதிலிங்கம் | கோண்டாவில் | 5000. 00 |
| வி. நிர்மலாதேவி | வண்ணார்பண்ணை | 10000. 00 |
| திரு கணேசன் குடும்பம் | அவுஸ்திரேலியா | 5000. 00 |
| திரு வைரவப்பிள்ளை குடும்பம் | இணுவில் | 20000. 00 |
| திருமதி தனநாயகம் | சுன்னாகம் | 500. 00 |
| வி. அருந்தவநாதன் | நீர்கொழும்பு | 1500. 00 |
| ஏ. விஜயகுமார் | கொழும்பு | 500. 00 |
| கா. நாகேஸ்வரி | கொழும்பு | 3000. 00 |
| ந. நந்தகுமாரன் | ஊரெழு | 500. 00 |
| அ. அட்சரா | கொழும்பு | 1000. 00 |
| வி. சிவசாமி மூலம், வி. பூமணி | புங்குடுதீவு | 1000. 00 |

(தொடரும்...

*காயங்களின்றி காலம் எதையும் கற்றுக்கொடுப்பதில்லை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவாரத்தின் மகிமை

– திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு அவர்கள் –

எத்தனையோ கோடி இன்பங்களை அள்ளித் தரும் இறைவன் சிலரை வாழ்க்கையில் சோதிக்கவும் தவறுவதில்லை. எல்லாச் செல்வத்தையும் கொடுத்துவிட்டு சிலருக்கு பிள்ளைச் செல்வத்தைக் கொடுக்காது அவர்களைப் பரீட்சிக்கின்றான். இதுவும் அவர்கள் செய்த முன்வினைப் பயன்தான்.

பிள்ளை வரம் வேண்டும் என ஏங்கும் பெற்றோருக்கு ஒரு கதை உண்டு.

திருமுனைப்பாடி நாட்டிலே திருப்பெண்ணாடகம் என்னும் ஊரிலே அச்சுத களப்பாளர் என்னும் ஓர் பெரியார் வாழ்ந்து வந்தார். மங்களாம்பிகை என்ற பெண்ணை மணந்து அவர் வளமாக வாழ்ந்தபோதும் அவருக்குப் பிள்ளைச் செல்வம் கிடைக்கவில்லை.

இட்டும் தொட்டும் கவ்வியும் அளைந்தும் மயக்குறு மக்கள் இல்லாக் குறை பெருங்குறை அல்லவா? இதனால் இவர்கள் இருவரும் உள்ளம் நலிந்து கவலையுற்றிருந்தார்கள்.

இப்படியிருக்கையிலே சகல ஆகமங்களையும் கற்றதால் சகலாகம பண்டிதர் எனப் பட்டப்பெயரையும் பெற்ற அருணந்தி சிவாச்சாரியார் என்னும் பெரியார் இந்த அச்சுத களப் பாளருக்குக் குருவாக அமைந்தார்.

இக் குருவானவர் சிவபிரானிடம் மிகுந்த பக்தி கொண்டவர். திருமுறைகளோடு மிகுந்த ஈடுபாடு கொண்டு தினமும் தேவாரப் பதிகங்களை தான் ஓதுவதோடு மற்றையோரையும் ஓத வைப்பவர். இவரிடம் அச்சுத களப்பாளர் சென்று தன் பிள்ளையில்லாக் குறையை எவ்வாறாயினும் தீர்த்தருள வழி செய்யுமாறு வேண்டினார்.

அருணந்தி சிவாச்சாரியார் சிவபூசையை முடித்துக்கொண்டு எம்பிரானை நினைத்த வண்ணம் திருமுறைகளைக் கையில் எடுத்து பட்டுத்துணியில் அவற்றை வைத்துப் பூசித்து இறைவா! இதற்கு நீ ஒரு வழிகாட்டியாக வேண்டுமென மனதில் எண்ணிய வண்ணம் திருமுறை நூலில் கயிறு சாத்திப் பார்க்கவே திருஞானசம்பந்தப் பெருமான் பாடியருளிய திருவெண்காட்டுப் பதிகம் ஒன்று அவருக்குக் கிடைக்கின்றது. அப்பதிகம் பிள்ளைச் செல்வம் வேண்டுவோர் செய்யவேண்டியதைக் கூறும் ஒரு தேவாரப் பாடல் ஆகும்.

பேயடையாப் பிரிவெய்தும் பிள்ளையினோடு உள்ள நினைவு
ஆயினவே வரம் பெறுவர் ஐயுற வேண்டாம் ஒன்றும்
வேய் அனதோள் உமை பங்கன் வெண்காட்டு முக்குள நீர்
தோய் வினையார் அவர் தம்மை தோயாவாம் தீவினையே

என்றிருந்தது அத் தேவாரப் பாடல்.

அதைக் கண்ணுற்ற அருணந்தி சிவாச்சாரியார் அச்சுத களப்பாளரை நோக்கி இப்பாடல் கூறுமாறு நீர் திருவெண்காட்டுப் பெருமானை வணங்கி அங்குள்ள முக்குள நீரில் முறைப்படி நீராடி அங்கு எழுந்தருளியிருக்கும் ஈசனையும் இறைவியையும் வணங்கி அருள்பெற்று வாரும் என வாழ்த்தி அனுப்பினார்.

*இந்த உலகம் உன்னை திரும்பிப்பார்க்க வேண்டுமென்றால் நீ யாரையும் திரும்பிப் பார்க்காதே.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவெண்காட்டுக்கு வருகிறார் அச்சுதகளப்பாளர். பிரார்த்தனை ஆரம்பமாகின்றது. ஒரு நாள் இறைவன் இவரது கனவிலே தோன்றி "அன்பனே உனக்கு இப்பிறப்பில் புத்திரப்பேறு அரிது. ஆனால் நீ என்னை மெய்யன்போடு பூசித்ததால் ஞானசம்பந்தனைப் போன்று ஒரு சற்புத்திரனை யாம் உமக்குத் தருவோம்" எனத் திருவாய் மலர்ந்தருளினார்.

அச்சுதகளப்பாளர் ஈசன் திருவருளை வியந்து ஆனந்தக்களிப்பெய்தினார். தேவார திருமுறைகளின் சக்தியை வியந்தார். அவற்றின் பெருமையை மெச்சினார். தனது பக்தியின் சாதனையை எண்ணி எண்ணி மகிழ்ந்தார். இறைவனின் கருணையை எண்ணி ஆனந்தம் கொண்டார். "கடவுளை நம்பினோர் கைவிடப்படார்" என்ற வாக்கின் மெய்யைப் போற்றி மகிழ்ந்தார். தொடர்ந்தும் தம்மால் இயன்ற தான தருமங்களைச் செய்யலானார்.

இறைவன் திருவாக்கின்படி அவருக்கு உரிய நேரத்தில் சிவநெறி தழைக்க ஒரு சற்புத்திரர் அவதாரம் செய்கின்றார்.

அவரது குழந்தைக்கு சுவேதனப் பெருமான் என நாமம் சூட்டப்படுகின்றது. இக் குழந்தையின் உள்ளத்தில் சிவபெருமானை உள்ளவாறு உணரும் மெய்யுணர்வு தோன்று கின்றது. அருள் ஒளிப்பிழம்பாகத் தோன்றிய அப்பாலகனுக்கு பரஞ்சோதி மாமுனிவர் சிவஞான போதத்தை உபதேசிக்கின்றார். அத்தோடு மெய்கண்டார் என்னும் திருப்பெயரையும் சூட்டியருளு கின்றார். இந்தவகையில் மெய்ஞானம் பெற்ற மெய்கண்ட தேவர் திருவெண்ணெய் நல்லூர் சென்று அங்கு எழுந்தருளியுள்ள பொல்லாப்பிள்ளையாரை வணங்கி நிட்டைகூடி சிவஞானப் பொருளை உள்ளவாறு உணர்கிறார்.

பின் சிவத்தின் உண்மையையும் இயல்பையும் விளக்கும் பல சைவ சித்தாந்த சாஸ்திர நூல்களையும் அருளிச் செய்கின்றார். இதனால் நாடெங்கும் சைவ சித்தாந்த அறிவு மக்களிடையே பரவுகின்றது.

எனவே இவரது வரலாறுமூலம் நாம் அறியக்கூடியது தெய்வ சிந்தனையும் தெய்வ பக்தியும் வீண்போகாது என்பதாகும்.

தினமும் மெய்யன்போடு இறைவனை நாம் வேண்டித் துதித்தால் எமக்கு வேண்டுவன எல்லாம் கிடைக்கும் என்பதில் ஐயமில்லை.

எனவே, சலனம் வேண்டாம் இறையை நம்புவோம் எண்ணியவற்றைப் பெறுவோம்.

---

**பலிபீடம்**

கோயிலில் உள்ள பலிபீடம் என்பது, உயிர் பலி கொடுக்கப்படும் இடமல்ல. நம் மனதுள் நமக்குத் தெரியாது ஒளிந்திருக்கும் காமம், ஆசை, குரோதம், லோபம், மோகம், பேராசை, மத, மாச்சரியம் எனும் எட்டு தீய குணங்களையும் பலிகொடுக்க உறுதிசெய்து கொள்ளுமிடம். வெறுமனே வீழ்ந்து வணங்குவதால் நலன் ஒன்றும் வந்துவிடாது. வீழ்ந்து வணங்கும்போது தனது கீழான இயல்புகளெல்லாம் அந்த இடத்திலே பலி கொடுக்கவேண்டும். மனிதனிடத்துள்ள கீழ்மையெல்லாம் அங்கு பலியிட வேண்டும். மனதின் ஆணவம் பலியிடப்படுகிறது. மேலான எண்ணங்கள் மட்டும் எஞ்சியிருக்க வேண்டும். ஆண்கள் இங்கு தலை, கையிரண்டு, இரு செவிகள், இரு முழங்கால், மார்பு ஆகிய உறுப்புகள் பூமியில் படும்படி அஷ்டாங்க நமஸ்காரம் செய்ய வேண்டும். பெண்கள் செய்யும் பஞ்சாங்க நமஸ்காரத்தில் தலை, கையிரண்டு, முழந்தாள் இரண்டு என ஐந்து அங்கங்களே நிலத்தில் படியக்கூடியதாக இருக்கவேண்டும். அவ்வாறு கீழே வீழ்ந்து வணங்கும்போது வடக்கு பக்கம் தலை வைத்து வணங்கவேண்டும்.

*எத்தனை கைகள் என்னைத் தள்ளிவிட்டாலும் என் நம்பிக்கை என்னைக் கைவிடாது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புராதனம் எங்கே! தெய்வம் தெய்வீகம் அங்கே!

– திரு த. செல்வசோதி அவர்கள் –

வதிரி மடத்துப்பிள்ளையாரும் (கனகசிங்கப் பிள்ளையார்) பழமையும் புராதனமுமாம் என்றும் - இவர்
பரமானந்த ஆச்சிரமம் அருகே மேற்குநோக்கி அமர்ந்துள்ளார் - இவர்
மூர்த்தி, தலம், தீர்த்தம், தலவிருட்சம் எனும் நால்வகைச் சிறப்புடையவராம்.
வன்னி எனும் தலவிருட்சம் குபேர திசையிலே மருத்துவ குணத்துடன் என்றும்
குபேரனின் கடாட்சம் உண்டாம் வன்னி வில்வத்தை பூசை அறையில் பேணினால்
வதிரி கனகசிங்க முதலியார் வழித்தோன்றல்கள் அறங்காவலராக - இங்கே
தக்ஷிண கைலாசபுராணத்தை தமிழில் தந்த (1928) வதிரி வித்துவான்
சி. நாகலிங்கப்பிள்ளையும் பெருமைக்குரியவராம் என்றும் - இங்கே
புராதன தீர்த்தம் (தீர்த்தக்கேணி) வீதியோரம் அங்கே - இதனை
பாதுகாக்கின்றனர் தொல்லியல் திணைக்களத்தினர் இன்று - அதனை
பழமை மாறாத புனரமைப்பை மேற்கொண்டு பாதுகாப்போம்.
அறங்காவலர், பிரதேச செயலகம், பிரதேச சபை, தொல்லியல் திணைக்களம்
ஆகிய மரபுரிமைகளை பாதுகாக்கும் நால்வகைத் தூண்களாகிய நாம்.
(பருத்தித்துறை சிவன் கோவிலடி - தெருமுடிமடம் போன்று)

நவிண்டில் - சீனட்டி "காளிஆத்தை"யும் புராதனமும் பழமையுமாம் என்றும்
அவள் கொண்டல் மரநிழலில் வீற்றிருந்து அருளாட்சி செய்கிறாள் என்றும்
புராதன "வேல்"ஐ தன்னருகே கொண்டு "காளிசூலமாக" வீற்றிருக்கிறாள்
"காளிஆத்தை" விநாயகரையும் "பைரவர் சூலத்தினை"யும் தன்னகத்தே கொண்டு
விஸ்வ, நாக - லிங்கங்களின் முதாதையர் ஆதரித்தனராம் இவளை அன்று
"காளிஆத்தை" "காவல் தெய்வமாக" குழந்தைகளையும் - தோட்டங்களையும் காத்தாள் அன்று - அன்று
கருவறையை அமைத்தாராம் "இயற்கை நேசன்" கனகராசா - என்றும்
மரபுவழி "விளக்கு வைத்தல்" பணியை மேற்கொள்கிறார் என்றும்
சிவனின் நாமம் கொண்ட "அமுதீஸ்வரன்" அவர்கள். செவ்வாய், வெள்ளியில்
வேப்பிலைக்காரி - கொலைகாரி ஆகக்கூடாதென்ற தெய்வீகக் காரணத்தால்
வேம்பிலிருந்து தவறிவீழ்ந்த "குலத்தை" காப்பாற்றினாளாம் அன்று (2006)
அயலவரின் நிதிப்பங்களிப்பில் மின்னொளியில் அருளாட்சி இன்று
"மூர்த்தி சிறிதாயினும் கீர்த்தி பெரிது" என்பதற்கு இவளே சாட்சி என்றும்
அவளின் பாதையினை "சீனட்டி காளிகோயில் வீதி" என பெயரிடுவோம் அவளை வழிபடச் செல்லும் நாம்.

*மனம்விட்டுப் பேசுவதைவிட சிறந்த அறிவு வேறு இல்லை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓங்கார நாடி என்னும் சுழுமுனை

– திரு கு. சிவபாலராஜா அவர்கள் –

எமது உடலிலுள்ள நாடிகளின் தொகை 72000 ஆகும். ஐநூறு வகை நாடிகள், பத்து நாடிகள், மூன்று நாடிகள் ஆகியவை பிரசித்தமானவை. அவற்றில் உள்ள பத்து நாடிகள் தச நாடிகள் என்னும் பெயரில் திருமந்திர நூலில் எடுத்து விளக்கப்பட்டுள்ளமை காணலாம். அவற்றுள் இடகலை, பிங்கலை, சுழுமுனை ஆகிய மூன்று நாடிகளும் யோகப் பயிற்சி செய்வதற்குரிய முக்கிய நாடிகளாகும். இவற்றுள்ளும் இடகலை, பிங்கலை ஆகிய இரு நாசி வழிகளும் முறையே உடலின் இடப்பக்கம் வலப்பக்கங்களில் அமைந்து விளங்கி, நமது உயிரைப் பிடிக்கும் முயற்சியில் தினமும் இயங்கி வருகின்றமை காணலாம். இடகலை, பிங்கலை இரண்டினதும் தொழிற்பாடு வெளிப்படையாக உள்ளபோதிலும், சுழுமுனை நாடி வழித் தொழிற்பாடு யோகிகளின் முயற்சியினாலன்றி ஏனையோருக்குக் கிடைப்பதில்லை. சுழுமுனை வழிச் சுவாசம் உடலில் மிக முக்கியமான சுவாசவழி என்பதை நாம் அறிந்திருத்தல் வேண்டும். சுழுமுனை நாடி நமது உடலின் பின்னால் முழுகுத்தண்டு அல்லது வீணாந்தண்டு எனப்படும் உறுப்பின் உட்பகுதியில் ஓர் வெண்ணிற மெல்லிய நார் போன்ற அமைப்புடைய ஓர் நாடியாகும். இந்நாடியின் ஆரம்ப இடம் நமது இரு காதுகளுக்கும் பின்புறமாக அவற்றின் இடையில், கூம்புவடிவச் சுரப்பியில் தொடங்கி கீழ் உள்ள மூலாதாரத்தில் முடிவடையும் நாடியாகும். தாமரைத் தண்டின் நூல்போன்ற மெல்லிய அமைப்புடையது. சுழுமுனையில் நடைபெறும் சுவாசத்தை அக்கினி அல்லது பூரணம் என்பர். இச் சுழுமுனை வழிச் சுவாசம், இரண்டு நாசி வழிச் சுவாசங்களிலும் பரவியோடும் தன்மையது. இடகலை சந்திரகலை எனவும், பிங்கலை சூரியகலை எனவும் சொல்லப்படும். சுழுமுனைச் சுவாசவழி திறக்கப்பட்டால் இந்த நாசி வழிகளின் சுவாசம் நின்றுவிடும். "பூரணம்" என்பது சித்தர்கள் குறிப்பிடும் யோகநிலைச் சொல்லாகும். பிராணாயாமப் பொருளில் பூரகம், கும்பகம், இரேசகம் ஆகியவற்றில் கும்பகம் என்பது காற்றினை உள்ளே அடக்குதல் (கும்பித்தல்) செயல்முறையைக் குறிக்கும். இவ்வாறு அடக்குவதன் நோக்கங்களில் பிரதானமானது, சுழுமுனைச் சுவாசத்தைத் திறபட வைத்தலாகும். அதனால் இதற்கு அறுபத்துநான்கு மாத்திரை அளவு சொல்லப்பட்டுள்ளது. இதைச் சித்தர்கள் வாசியோகம் என்பர். இப் பிராணாயாம முறையினை அகத்தியர் ஞானம் பின்வருமாறு குறிப்பிடுகின்றது.

பாரப்பா உதயத்தி லெழுந்திருந்து
பதறாமல் சுழுமுனையில் மனத்தை வைத்து
காரப்பா பரிதிமதி யிரண்டு மாறிக்
கருவான சுழுமுனையிலுதிக்கும் போது
தேரப்பா அண்ணாக்குள் நின்று கொண்டு
தியங்காமற் சுழுமுனைக்குள் அடங்கும் பாரு
சீரப்பா பதினாறில் எட்டும் நான்கும்
சிதறாமல் மூன்றுமொன்றால் சேர்ந்து போமே.

*நேரத்தை வீணாக்கும்போது கடிகாரத்தைப் பார். ஓடுவது முள் அல்ல உன் வாழ்க்கை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தர்கள் சுவாச மாறுபாடுகளில் கைதேர்ந்தவர்கள். சுழுமுனைச் சுவாசம் என்பது வலது நாசியிலிருந்து இடது நாசிக்கும், இடது நாசியிலிருந்து வலது நாசிக்கும் மாறும் அதிசய நேரத்திற்குரிய சுவாசமாகும். ஒன்றிலிருந்து ஒன்றுமாறும் நிலையில், இரண்டு சுவாசமும் சில நொடிகள் தொடர்ந்து நடைபெறும். இது அரிதான சுவாசநிலை. அதனால் இச் சுவாசம் யோகியர்களுக்கும் தபசியர்களுக்கும் நன்மையளிக்கும் நிலையாகும்.

தச வாயுக்களாவன பின்வருமாறு. பிராணன், அபானன், வியானன், உதானன், சமானன், நாகன், கூர்மன், கிரிகரன், தேவதத்தன், தனஞ்செயன் ஆகிய பத்துமாம்.

தச நாடிகளாவன: இடதுகலை, பிங்கலை, சுழுமுனை, சிங்குவை, புருடன், காந்தாரி, அத்தி, அலம்புடை, சிங்கினி, குரு என்பன.

மூலாதாரத்தில் மூலவாசலும், மேல்முனையில் மேலை வாசலும் கொண்டு அமைந்தது சுழுமுனை. மூலவாயில் திறபட்டால், மேலை வாயிலும் தானகத் திறபடும். சுழுமுனைக்கு அதிதெய்வம் சிவபெருமான். சுழுமுனை புருவமத்திவரை வந்து நிற்கும். சுழுமுனையின் அமைவிடம், மேலே நமது மூளையைச் சுற்றி பிடரிப் பக்கமாக வளைந்து வந்து, புருவமத்திக்கு நேராக முடிவடையும். நமது தலைப் பகுதியில் வட்ட வடிவாக அமைந்துள்ளது. வீணாந்தண்டு வழி உள்ள சுழுமுனையின் நேர் வடிவமே காதுகளின் பின்புறமாய்த் தொடங்கி, மூலாதாரத்தில் முடிவடையும் பகுதியாகும். இப் பகுதியே சிறப்பாகச் சொல்லப்பட்டுள்ளது. அதன் காரணம், இப் பகுதிவரை மேலேறிய வாயுவானது, தலைப்பகுதிக்குள் செல்வது உறுதியே. எனவே, எமக்குள்ள பிரச்சினை வீணாந்தண்டு வழி வரும் சுழுமுனையில் வாயுவை வெளியேற்றும் செயல்மட்டுமே.

இவ்வாறு சுழுமுனை வழிவரும் வாயுவானது, முதலில் நெற்றிக்கண்வரை (புருவமத்தி) ஒருமுறை வளைந்து சென்று பின் திரும்பவும் வந்த வழியே திரும்பி கீழ் இறங்காமல் நேரே மூளையைச் சுற்றி வட்டவடிவில் ஓடி இறுதியில் நெற்றிக்கண் நேர்வரை சென்று முடிவடைகிறது. இச்சுற்றுவட்டச் செயற்பாட்டின் இறுதியில் அவ்வாயுவானது உடலில் சங்கமிக்கின்றது. இதையே சந்திரமண்டலத்தில் நாம் பருகும் அமுதபானமாகும். அமுதபானம் பருகிய உடலும், உயிரும், உள்ளமும் இறை ஆதிக்கத்திற்கு உட்பட்டு ஆனந்தம் அல்லது பரவச நிலையை அடையும். இதுவே முத்திப்பேற்றுக்கான வாயிலாக அமையும். திருமூலர் இந்நிலைகளை “அட்டதளகமல முக்குண அவத்தை” என்னும் அதிகாரத்தில் அழகாக விளக்கியுள்ளார். இச் செயலானது; சைவக் கோயில் ஒன்றில் மகோற்சவ காலத்தில் சுவாமி வெளிவீதி சுற்றிவரும் அருட்செயலுக்கு ஒப்பானது இறுதியில், சுவாமி (தெய்வம்) மூலஸ்தானத்தை அடையும் என்பதுபோல வாயுவும் நமது உடலுடன் சங்கமிக்கும்.

மனித உடலில் உயிரோட்டம் நாடிகளின் வழியாகவே நடைபெறுகின்றது. நாடிகள் மிகவும் சூட்சுமமானவை. நரம்புகள் போன்று இவையும் தூல வடிவத்தில் உள்ளன. நரம்புகள் புலன் உணர்வுகளை உள், வெளி இடங்களுக்கு எடுத்துச்செல்ல உதவுகின்றன. பத்து நரம்புகள் சேர்ந்த தொகுதியே நாடி ஆகின்றது. நாடிகள் நமது உடலைப் பலப்படுத்துகின்றன. உடலியக்கம் இதனால் நடைபெறுகின்றது. நமது உடலில் 72000 நாடிகள் உள்ளன. இக் கணக்கு

*தைரியம் பயத்தைவிட ஒருபடி மேலே உள்ளது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தர்களின் முடிவு ஆகும். குதத்தின் பின்புறத்தில் சுழுமுனை நாடி முதுகுத் தண்டுடன் இணைக்கப்பட்டுள்ளது. குதமும் சிறுநீர்க்குழாயும் இணையுமிடத்தில் இடகலை, பிங்கலை நாடிகள் முதுகுத் தண்டுடன் இணைக்கப்பட்டுள்ளன. பிராணன் இயக்கத்தில் இடகலை, பிங்கலை, சுழுமுனை ஆகிய மூன்று நாடிகளும் பெரும் பங்காற்றுகின்றன. சுழுமுனை நாடி, உடல், மனம் இவற்றின் செயற்பாடுகளைத் தன் கட்டுப்பாட்டில் வைத்துள்ளது. நாடிகள் மூலாதாரத்தை மையமாகக் கொண்டு செயலாற்றுகின்றன. இதயப்பகுதி நாடிகளில் ஒன்றுமட்டுமே சுழுமுனை நாடியுடன் இணைந்து உச்சியற்றி நிற்கின்றது. சித்திரை நாடி சுழுமுனை நாடியுடன் தொடர்புடையது. சித்தர்கள் சித்திரை நாடியின் குழலை சுழுமுனை நாடி என்னும் பெயரால் குறிப்பிடுவர். சுழுமுனை நாடியின் மையப் பகுதியில் சித்திரை நாடி அமைந்துள்ளதால் இது உடலின் ஜீவாதாரப் பகுதியாகக் கருதப்படும். இதை "ஸ்வர்க்க மார்க்கம்" எனவும் கூறுவர். சித்திரை நாடி யோகமார்க்கத்தின் முக்கிய திறவுகோல் எனப்படுகிறது. சுழுமுனை நாடி குண்டலினியுடன் தொடர்புகொள்ளக் கூடியது.

மூலாதாரத்தில் குண்டலினி சக்தி சேமிக்கும் செயல் இடகலை, பிங்கலை நாடிகளால் நடைபெறுகிறது. இது ஒரு வழித் தடமாகும். அவ்வாறு சேமிக்கப்பட்ட சக்தியை மூலாதாரத் திலிருந்து பிரமரந்திரம் வரை எடுத்துச் செல்லும் பணியினை சுழுமுனை நாடி செய்கின்றது. இதுவும் ஒருவழித் தடமேயாகும். இது நேர் கோட்டு வழித்தடம் எனப்படுகின்றது. சுழுமுனை நாடி இயக்கப்பட வேண்டுமானால், இடகலை, பிங்கலை நாடிகளின் செயல்கள் நிறுத்தப்படல் வேண்டும். அத்துடன் அதன் மூன்று முடிச்சுக்களாகிய பிரம்மகிரந்தி, விஷ்ணுகிரந்தி, உருத்திர கிரந்தி ஆகியனவும் அவிழ்க்கப்பட வேண்டும். இம் மூன்று முடிச்சுக்களை நரம்புமண்டலக் கிரந்திகள் என்பர். சுழுமுனையின் செயலானது, ஆறாதாரங்களையும், மூன்று முடிச்சுக்களையும் கடந்த நிலையில் நிராதரமாகி பெரு வெளியில் நின்றால் இறைவனையும் அவன் தரிசனத்தை யும், தனிமையையும் ஆன்மா அடையமுடியும். இதனால் உலக பந்தங்கள் அற்றுப்போகும். இவற்றால் ஆன்மா விந்துவாகவும், இறைவன் நாதமாகவும் ஒன்றினுள் ஒன்று வயப்பட்டுப்போகும். உலக பாசங்களில் ஈடுபட்டிருக்கும் நிலையில்தான் இடகலை, பிங்கலை நாடிகளின் தொழிற்பாடுகள் இருக்கும். அதற்காக இராப்பகலாக அவை செயல்புரிகின்றன.

"சங்கிரண்டு தாரை ஒன்று சன்னல் பின்னலாகையால்"

-சிவவாக்கியர் பாடல்.

சங்கு இரண்டு என்பது இடைகலை பிங்கலை நாடிகளாகும். தாரை என்பது சுழுமுனை நாடி, சன்னல், பின்னல் மூன்று முடிச்சுக்களாகும். இடகலை பிங்கலை நாடிகள் எதிரெதிர் உயர்ந்து நிற்பதுபோல ஆறு ஆதாரங்களையும் பிணைத்து நிற்பது இம் மூன்று முடிச்சுக்களாகும்.

சுழுமுனை நாடி முதுகுத் தண்டின் கீழே தொடங்கி தலையில் உள்ள பீனியல் சுரப்பி வரை செல்கின்றது. முதுகுத் தண்டினை திருமூலர் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

"கோணா மனத்தைக் குறிக்கொண்டு கீழ்க்கட்டி..."

முதுகு எலும்பு 33 சங்கிலி எலும்பு வளையங்களால் ஆனது. ஒன்றன்பின் ஒன்றாக அமைந்துள்ளது. நமது தலைப்பகுதியையும் உடலையும் தாங்கி நிற்கும் ஒரு தூணாக

*விழுதல் என்பது வேதனை. விழுந்த இடத்தில் மீண்டும் எழுதல் என்பது சாதனை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைந்துள்ளது. இதற்கு வேறு பெயர்களும் உண்டு. அவை, பிரம்மதண்டம், மேருதண்டம், வீணாத்தண்டு என்பன. இப் பெயர்கள் யோகமுறைப் பெயர்களாகும். பிரம்மத்தை அடைவதற்கு இது சாதனமாக அமைந்துள்ளது. இதற்கு தண்டுவடப் பகுதி என்றும் பெயருண்டு. சுழுமுனையின் கீழ்ப்பகுதியை (முனை) சித்தர்கள் "குண்டலினிக் கமலம்" என அழைக்கின்றனர். இப் பகுதி முக்கோண வடிவினது. இதனுள் பாம்புபோல் சுருண்டு படுத்திருக்கும் - உறங்கும் சக்தியே குண்டலினி சக்தியாகும். அது ஓர் அற்புதமான யோக சக்தி என்பர்.

திருமூலர் 583ஆவது திருமந்திரத்தில் குறிப்பிட்டுள்ள "முக்காரமிடுதல்" என்பதனை நோக்குவோம். இதில் "முக்காரமிடுதல்" என்பது ஒருவித யோகநிலை ஆகும். நிமிர்ந்த நிலையில் இருக்கையில் அமர்ந்து, மூச்சினை அடக்கி நமது காம வாயிலை அடைக்கும் வழிமுறையே இந்த யோகமாகும். இவ்வாறு முக்காரமிடும் யோக நிலையில், சுவர்க்க வாயிலாகிய சுழுமுனை நாடி வழி திறக்கப்படும். இந்த முக்காரமிடும் யோகத்தைச் சுழுமுனை யோகமாகச் சித்தர்கள் குறிப்பிட்டுள்ளனர். அவர்கள் அதைப் பாராட்டியுமுள்ளனர். மூலாதாரத்தில் உறக்க நிலையில் காணப்படும் சக்தியாகிய குண்டலினி சக்தியானது ஓர் மனித ஆற்றலாகும். அவ்வாற்றல் சுழுமுனையைத் திறந்துகொண்டு மேலே செல்ல முயற்சிக்கின்றது. இந்த நிலை சுயமாகத் தோன்றுவதால் இதனைச் சித்தர்கள் சுயம்புலிங்கமாக உருவாக்கம் என்று குறிப்பிட்டுள்ளனர். மூலாதாரத்தை "ஆகுஞ்சனம்" என்னும் முத்திரையால் அடைத்தல் என்பதை திருமூலர் குறிப்பிட்டுள்ளார். குதத்தை மேல் எழும்புமாறு அடைத்தல் ஆகுஞ்சனம் எனப்படும். யோகியானவன் நீண்டகாலம் வாழ்வதற்குரிய ஓர் வழியாக இது கூறப்பட்டுள்ளது. மேலைத் துவாரம் என்பது பிரமரந்திரத்தைக் குறிக்கும். மூச்சை அடக்கினால் சுழுமுனை திறக்கும் எனக் கூறப்பட்டுள்ளமையால் முரட்டுத்தனமாக மூச்சை அடக்குதல் பெருந்தீங்கினையும் விளைவிக்கலாம். சிறிது சிறிதாக இதனைப் பயிலல் வேண்டும். குருவின் உதவியுடன் செய்வதும் நன்று. இதனால், தொழிற்படாமலே கிடக்கும் நம் அறிவுக் கருவிகள் பல எழுச்சியுற்றுத் தொழிற்படத் தொடங்கும். இதனால், உடலுக்குப் பல நன்மைகள் கிடைக்கும். கும்பகத்தால் நின்ற வாயு கீழ் போகாமல் உருவாய் வாயிலை இறுக அடைத்தல் இங்கு கூறப்பட்டுள்ளது.

மூலத் துவாரத்தை முக்கார மிட்டிரு
மேலைத் துவாரத்தினை மேல்மனம் வைத்திரு
வேலொத்த கண்ணை வெளியில் விழித்திரு
காலத்தை வெல்லுங் கருத்திது தானே. -திருமந்திரம் 571.

(தொடரும்...

உங்களைச் சுற்றிக் காணப்படும் படைப்பு அனைத்தும் பிரபஞ்சம் என அழைக்கப்படுகிறது. பஞ்சபூதங்களின் பங்களிப்பே இந்தப் பிரபஞ்சம் என்ற பெயருக்கு மூலகாரணம். இப்பிரபஞ்ச வடிவில்தான் பஞ்சபூத வடிவங்களும் இணைந்திருக்கின்றன. பஞ்சபூதங்களைப் பற்றிய முழுமையான அறிவு மனிதனுக்கு தியானம் பழக்கும்போது புலனாகிறது. பஞ்சபூதமின்றி இவ்வுலகமே இல்லை. இவையும்கூட இறை வடிவமே.

*திறமையுள்ளவரின் முன்னேற்றத்தை யாராலும் தடுக்க முடியாது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவராத்திரி

– திருமதி பரமேஸ்வரி நடராஜா அவர்கள் –

சீவனைச் சிவமாக்கிடும் சிவராத்திரி
பவம் போக்கிப் பக்குவமாக்கிடும் சுபராத்திரி
அரிபிரமாதியர்க் கருளிய சிவராத்திரி
திரிபுரமெரி செய்த தீரனின் சுபராத்திரி.

சிந்திப்பார் சிந்தையுள் உறையும் சிவமே போற்றி
வந்திப்பார் மனத்தில் வாழ்வாய் போற்றி
எந்தையே ஈசா இறைவா போற்றி
தந்தையாய் குருவாய் ஆள்வாய் போற்றி.

சங்கரா சதாசிவா சர்வேசா போற்றி
பொங்கரவு பூண்ட புனிதா போற்றி
எங்கும் ஒளிரும் ஒளிச்சுடரே போற்றி
திங்கள் சூடிய சிவனே போற்றி.

நீலகண்டனே நிமலா நித்தியா போற்றி
காலகாலனே கங்காதரனே கடவுளே போற்றி
பால சிவனே பக்திச் சுவையே போற்றி
வேலனையும் குருவாகக் கொண்ட வேந்தனே போற்றி.

அடிமுடி தேடிய அயன் மாலுக்கும் அன்று
அனலுருவாய் அமர்ந்தருள் புரிந்தாய் போற்றி
கடிகமழ் கொன்றைச் சடையாய் போற்றி
கனல் புனல் காற்றாய்க் கலந்தாய் போற்றி.

சச்சித் ஆனந்தமாய சத்குருவே போற்றி
நித்திய சத்தியனே நின்மலா போற்றி
வித்தகனே வினையறுக்கும் விமலா போற்றி
தத்துவ நெறி தரும் தம்பிரானே போற்றி போற்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பங்குனி மாத வாராந்த நிகழ்வுகள்

03.03.2023 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்
விடயம் :- "மாணவர்கள் நிகழ்வு"
வழங்குபவர்கள் :- ஏழாலை ஸ்ரீ முருகன் அறநெறிப் பாடசாலை மாணவர்கள்

---

10.03.2023 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்
"இன்னிசை"
(பக்கவாத்திய சகிதம்)

---

17.03.2023 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்
சொற்பொழிவு :- "கூறை தத்துவம்"
வழங்குபவர் :- ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் அவர்கள்

---

24.03.2023 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்
சொற்பொழிவு :- "மகாபாரதம்" (தொடர்)
வழங்குபவர் :- செஞ்சொற் செல்வன் இரா. செல்வவடிவேல் அவர்கள்
[ஆசிரியர்]

---

31.03.2023 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

## ஞானச்சுடர் பங்குனி மாத வெளியீடு

வெளியீட்டுரை :- திரு வ. கணேசமூர்த்தி அவர்கள்
[இளை. அதிபர்]
மதிப்பீட்டுரை :- திரு நி. பாபுதரன் அவர்கள்
[ஆசிரியர்]

**303ஆவது மலர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிவு இல: DOP/NEWS/103/2023

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய முகப்புத் தோற்றம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org